Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :243 ஆடி 13ஆம் நாள் புதன்கிழமை 29 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## சர்வதேச தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை!

### பிரதமர் மஹிந்த திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 29

உள்நாட்டு பிரச்சினையை சர்வதேசமயப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்பதுடன் சர்வதேச தலையீட்டுடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் தயாரில்லை. 29 ➤

## விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 29

வவுனியா பறண்நாட்டங்கல் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். தங்கராஜா பால்ராஜ் (வயது-61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து ஓமந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிளும், ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கிவந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் நோயாளர் 29 ➤

## கடற்றொழிலுக்கு சென்றவரை காணவில்லை

கிளிநொச்சி, ஜூலை 29

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர் தொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் என்று பளை பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரண்டு மீனவர்கள் ஒரு படகில் தொழிலுக்குச் சென்றுள்ளனர். படகு கவிழ்ந்த நிலையில் தொழிலுக்குச் சென்ற ஒரு மீனவர் கரை திரும்பியுள்ளார். மற்றைய மீனவர் இன்னும் கரை திரும்பாத நிலையில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் 28 ➤

## நெடுங்குளம் இளைஞனுக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 29

கந்தக்காடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தில் சேர்க்கப்பட்டிருந்த யாழ்ப்பாண இளைஞன் ஒருவரும் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

யாழ்ப்பாணம் நெடுங்குளத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரே, கொரோனாத் தொற்றுடன் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கந்தகாட்டில் இருப்பவர்களை பெற்றோர்கள் பார்ப்பது சில வாரங்களுக்கு மேலாக தடை செய்யப்பட்டிருந்ததால், 31 ➤

## 'பேனைப்' பரப்புரைக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கொரோனா பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாக்காளர்களே வாக்களிப்பதற்குரிய பேனைகளைக் கொண்டு வரவேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ள நிலை 31 ➤

## தப்ப முடியாது இலங்கை அரசு

### சம்பந்தனுடனான சந்திப்பில் சுவிஸ் தூதுவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 29

இலங்கை அரசு, சர்வதேசத்துக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அவற்றை நிறைவேற்றவே வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசு வில 31 ➤

## கோத்தாவை எதிர்க்க துணிவற்ற கோழைகளுக்கா உங்கள் வாக்கு?

### விக்னேஸ்வரனை ஆதரிப்போரை சாடுகின்றார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஜூலை 29

ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவை எதிர்க்கத் திராணியற்று கோழைகள் போன்று ஒளிந்து ஓடிய விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்? அல்லது 29 ➤

## யாழ். போதனாவில் சிகிச்சை பெற்றவருக்கு "வீக் வைரஸ்"!

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த, சவூதியிலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையின்போது குறைந்தளவான வைரஸ் தொற்று (வீக் வைரஸ்) கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய 31 ➤

## கொரோனாவுக்கு அஞ்சாது அனைவரும் வாக்களியுங்கள்

### யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கொரோனா என்ற அச்சமில்லாது அனைத்து மக்களும் வாக்களிக்கவேண்டும் என்று யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகா 28 ➤

## கொலையாளிகளுக்கு டக்ளஸ் பாதுகாப்பா?

### கேள்வி எழுப்புகின்றார் ரெக்சியனின் சகோதரி

யாழ்ப்பாணம், ஜூலை 29

எனது சகோதரன் ரெக்சியனைக் கொலை செய்ததாகக் கூறப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் 30 ➤

## கூட்டமைப்பின் இலக்கு தனிநாடு

### அமைச்சுப் பதவிகள் அல்ல என்கிறது ராஜபக்சவின் கட்சி

கொழும்பு, ஜூலை 29

அரசுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகள் பெறுவதுதான் தமிழ்த் தேசி 31 ➤







## வன்னி மக்கள் துன்பப்பட்டபோது எங்கிருந்தார் பிரபா கணேசன்?

### சாடுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா, ஜூலை 29

போர் உட்பட்ட பல்வேறு பாதிப்புகளால் வன்னி மக்கள் துன்ப, துயரங்களைச் சந்தித்தபோது பிரபா கணேசன் எங்கு சென்றிருந்தார்?. இப்போது வந்து அவர் கூட்டமைப்பைக் குறைகூறுவதுடன், பிரதேசவாதத்தைத் தூண்டும் விதத் 31 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு தூக்குத் தண்டனைதான் விதிக்கவேண்டும்

## அந்தக் குற்றவாளிகள் சிறைகளிலிருந்தாலும் வெளியே பக்கா வியாபாரம் என்கிறார் சஜித்

**கொழும்பு, ஜூலை 29**
**போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்பதை ஆதரிக்கின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை நியாயமாக வெளிப்படைத்தன்மையுடன் நடத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைய தலைமுறையினரை மாத்திரமல்லாது பாடசாலை மாணவர்களைக்கூட, தற்போது போதைப்பொருள் விற்பனையாளர்கள் தமது பிடிக்குள் சிக்க வைத்துள்ளனர்.

இத்தகைய குற்றவாளிகளை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்து, சிறையில் இருந்தவாறு அவர்கள் தமது போதைப்பொருள் வர்த்தகத்தை மேற்கொள்ள அரசு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின் சிங்கப்பூரில் போதைப்பொருளை கட்டுப்படுத்த கையாளப்படும் நடைமுறையை இங்கும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சட்டத்தின் மூலம் நீதி கிடைக்கும் வரை குற்றவாளிகளுக்கு சிங்கப்பூரில் எவ்வித மன்னிப்பும் வழங்கப்படுவதில்லை.

இலங்கையில் உள்ள போதைப்பொருள் விற்பனையாளர்கள் வெளியில் இருந்து செய்வதை விட சிறைச்சாலைகளில் இருந்து அந்த வர்த்தகத்தை சிறப்பாகச் செய்கின்றனர்.

இதனால், சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ள முறையை பின்பற்ற வேண்டும். அத்துடன் தண்டனை வழங்கும் நீதித்துறைக் கட்டமைப்பு அழுத்தங்கள் இன்றி செயற்படுவதாக, பக்கச்சார்பற்றதாக இருக்க வேண்டும். என்றார். (த)

# யாழ்.போதனாவின் பணிப்பாளர் மருத்துவர்களை விடுவிக்கவேண்டும்

## தவறின் போராட்டம் தொடரும் என்று முல்லைத்தீவு மருத்துவர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 29
முல்லைத்தீவுக்கு விடுவிக்குமாறு கூறப்பட்ட நான்கு மருத்துவர்களையும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மிக விரைவில் விடுவிக்கவேண்டும். தவறின் மருத்துவர்களின் போராட்டம் தொடரும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக் கிளையினர் தெரிவித்தனர்.

இது பற்றிய ஊடக சந்திப்பை அவர்கள் நேற்று நடத்தினர். அதில், மாவட்டக் கிளையின் உப தலைவர் சிவனேசன் பிரபாகரன், செயலாளர் புத்திக்க மணிக்கே ஆகியோர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு அவசர வெற்றிடங்களுக்கு 60 மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர். தற்போது 27 மருத்துவர்கள்தான் சகல பிரிவுகளிலும் கடமையாற்றுகின்றனர்.

பொது மருத்துவ பிரிவில் ஒரு மருத்துவரே இரண்டு மருத்துவ விடுதிகள், இரண்டு மருத்துவ சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்), அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் கொரோனாத் தொற்றுடையவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நோயாளர்களைக் கவனிக்கும் இடைநிலைப்பிரிவு ஆகியனவற்றில் பணிபுரிகின்றார்.



இந்த நெருக்கடிக்கு மாற்றுத் தீர்வாக, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் உள்ளகப் பயிற்சிகளை நிறைவுசெய்து நியமனத்து க்காகக் காத்திருக்கும் 4 மருத்துவர்களை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு விடுவிக்குமாறு போதனா மருத்துவமனைப் பணிப்பாளருக்கு மருத்துவ சேவைகள் பணிப்பாளர் கடந்த வருடம் செப்ரெம்பர் 20ஆம் திகதி அறிவுறுத்தியிருந்தும் இன்றுவரை 4 மருத்துவர்களையும் அதன் பணிப்பாளர் விடுவிக்கவில்லை.

இது குறித்து சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையே பேசப்பட்டு, முடிவுகள் எடுக்கப்பட்டும் அவை நிறைவேற்றப்படவில்லை.

அதைக் கண்டித்து கடந்த 21ஆம் திகதியிலிருந்து அவசர மருத்துவ சேவைகளை மாத்திரம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

அதனையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் உள்ளக பயிற்சிகளை நிறைவுசெய்த மருத்துவ அணியிலிருந்து தகுதி பட்டியலில் கீழ் வரிசையில் உள்ள நான்கு மருத்துவர்களை முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு விடுவிக்குமாறு அதன் பணிப்பாளருக்கு மருத்துவ சேவைகள் பணிப்பாளரால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இன்றுவரை 4 மருத்துவர்களும் விடுவிக்கப்படவில்லை. யாழ்ப்பாணப்போதனா மருத்துவமனையில் தற்போது மூன்றுக்கும் மேற்பட்ட மருத்துவ அணிகள் உள்ளக பயிற்சிகளை நிறைவுசெய்துவிட்டு மருத்துவ நியமனத்துக்காகக் காத்திருக்கின்றன. அவ்வாறிருக்கையில், 4 மருத்துவர்களை விடுவிக்காதிருப்பது நியாயமற்ற செயல். முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வலி அறிந்த, அவர்களுக்கு தோழ் நின்று உதவிய ஒருவரின் இந்த அசமந்தப் போக்கு வேதனையளிக்கின்றது.

அவர் மருத்துவர்களை நியமிக்கும் வரை போராட்டம் தொடரும். என்றனர். (த-19)

### போலி ஆவணங்களுடன் ஐரோப்பாவுக்குச் செல்லமுற்பட்ட கோப்பாயைச் சேர்ந்தவர் கைது

கொழும்பு, ஜூலை 29
போலி ஆவணங்களைத் தயாரித்து வர்த்தகக் கப்பல் ஒன்றில் பணியாற்றும் ஊழியராகத் தன்னை அடையாளப்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்ல முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கையர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த 36 வயதுடையவரையே குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

அவர் நேற்று அதிகாலை 3.15 அளவில் கட்டார் நாட்டின் டோஹா நோக்கி புறப்பட்டுச் செல்லவிருந்த கட்டார் விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக கப்பல் ஒன்றில் பணிபுரிவதாகக் கூறி, அபர் ஏனைய கப்பல் ஊழியர்களுடன் தனது ஆவணங்களை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளார். அவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள், அவர் சமர்ப்பித்த ஆவணங்களை தொழிநுட்ப பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அதன் போதே அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என்பது தெரிய வந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த ஆவணங்களை தொழில் முகவர் ஒருவர் தனக்குத் தயாரித்துத் தந்திருந்தார் என்று அவர் விசாரணையில் கூறியுள்ளார்.

அவர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலை குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளிடம் போலி ஆவணங்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

### ரயில் நிலைய வீதிக்கு நகர்கிறது பண்டாரிக்குள பொலிஸ் அரண்

வவுனியா, ஜூலை 29
வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் காணப்பட்ட பொலிஸ் காவல் அரண் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் பேரில் வவுனியா புகையிரத நிலைய பிரதான வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பண்டாரிக்குளம் செல்லும் பிரதான பாதை ஒடுங்கிய பாதையாக காணப்படுகின்றது. அந்த இடத்தில் அமைந்துள்ள பொலிஸ் காவல் அரணில் பொலிஸார் வாகனத்தை மறித்துச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறித்த பொலிஸ் காவல் அரணை அகற்றி போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவாறு புகையிரத நிலைய பிரதான வீதியில் மாற்றியமைக்குமாறு பணித்துள்ளார். (த-19)



# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

எமது கிளிநொச்சி மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

உங்களிடம் நான் உரிமையுடன் கேட்பது

உங்கள் வாக்குகளை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு வாக்களியுங்கள்!



**எமது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை வளமோடும், செல்வச் செழிப்போடும், போரால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்து, சொல்லொனாத் துன்பத்துடனும் வாழ்ந்த பிரதேசமும் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசமும் என்பதை நாங்கள் சிந்தித்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் பலதுறையிலும் அபிவிருத்திகளை மேற்கொள்ள என்னால் முன்வைக்கப்படும் திட்டங்களில் சில கீழ்வருமாறு.

1. எங்களது கிளிநொச்சி மாவட்ட விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களும் கடல் நீரை நன்னீராக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்தும் திட்டங்களும் மற்றும் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கங்களை நான் ஒரு சிறிய புத்தக வடிவில் உங்களுக்கு சமர்ப்பித்திருக்கின்றேன்.
2. அதனை பாரிய குழாய்கள் மூலம் விநியோகிக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
3. இரணைமடு நீர்த்தேக்கத்தின் ஒவ்வொரு துளி நீரும் வீணாகாது பயன்படுத்த ஆவன செய்தல்.
4. புதிய வகை நெல் இனங்களை அறிமுகப்படுத்தல்.
5. தொழில்முயற்சிகளுக்கு தேவையான கடன் வசதிகளைக் குறைந்த 4 வீத வட்டியில் வழங்க ஆவன செய்தல்.
6. கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்குமான போக்குவரத்து வசதிகள் சீராக அமைத்துக் கொடுக்கப்படும்.
7. பனையில் இருந்து பெறப்படும் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையும் அடுத்ததாக சாராய உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலையும் அமைக்கப்படும்.
8. பனையில் இருந்து பெறப்படும் பதநீரில் பனங்கட்டித் தொழிற்சாலைகள் சீனித் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.
9. பனையில் இருந்து பெறப்படும் பனங்கிழங்கில் இருந்து உணவுகள் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படும்.
10. சிறு கைத்தொழில் சாலைகள் அமைத்து, இம்மாவட்டத்தின் படித்த வாலிபர்கள் யுவதிகளுக்குப் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
11. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்
12. படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் வாழ்விடங்களையும் காணிகளையும் மீட்டெடுத்து, மக்களை மீள்குடியேற்ற ஆவன செய்தல்.
13. புனர்வாழ்வு பெற்ற போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் சுய கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி தொழில்வாய்ப்பு வழங்குதல்.

**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கு வித்திடுங்கள்.

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

**" உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்! "**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

| 1 (X) | 2 | 3 | 4 | 5 (X) | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# குருபரனின் வெளியேற்றமும் இன அழிப்பின் ஓர் அங்கமே!

## சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான ஜோதிலிங்கம் சுட்டிக்காட்டுகின்றார்

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**கலாநிதி குருபரனின் வெளியேற்றத்தை இன அழிப்பு நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம். ஆயுதப்போராட்டம் முடிவடைந்த பின்னரும் கட்டமைப்புசார் இன அழிப்பு தொடர்ந்துகொண்டிருக்கின்றது. நிலப்பறிப்பு, தமிழ்மொழிப் புறக்கணிப்பு, பொருளாதாரச் சிதைப்பு, காலாசார அழிப்பு என இவை தொடர்கின்றன. இன்று இது மாணவர்களின் கல்வியில் கைவைக்கும் இன அழிப்பாக மாறியுள்ளது என்று சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் சார்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட பீடத் தலைவர் கலாநிதி குருபரன் தனது விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறியுள்ளார். அவர் வெளியேறியுள்ளார் என்பதை விட வெளியேற்றப்பட்டார் என்றே கூறவேண்டும். விரிவுரையாளர் பணியோடு சட்டவாளர் பணியையும் மேற்கொள்வதற்கு முன்னர் அனுமதியளித்த யாழ். பல்கலைக்கழக மூதவை இராணுவ அழுத்தங்களால் அனுமதியை இரத்துச் செய்தமையே வெளியேறியமைக்கான காரணமாகும்.

நாவற்குழியில் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு காணாமல் போன இளைஞர்களின் வழக்கை குருபரன் பொறுப்பேற்று நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டதன் பேரில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தடை விதிக்குமாறு கோரியதனாலேயே பல்கலைக்கழக மூதவை தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பல்கலைக் கழகங்கள் வெளி அழுத்தங்களுக்குப் பணிந்து போகாமல் சுயாதீனமாகச் செயற்படக்கூடியவை. யாழ். பல்கலைக்கழக மூதவை அந்த சுயாதீனத் தன்மையை உதாசீனம் செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்குப் பணிந்துபோயுள்ளது. இது பல்கலைக் கழகங்களின் சுயாதீனத்தை இல்லாமல் செய்வதோடு விரிவுரையாளர்களின் சுயாதீனத் தன்மையையும் இல்லாமல் செய்துள்ளது.

மருத்துவக் கல்வியும், சட்டக் கல்வியும் அதிகளவு செயல்முறை அனுபவங்களுடன் தொடர்புடையவை. இந்த அனுபவங்கள் இல்லாமல் இந்தத் துறைகளில் முழுமையான அறிவுடைய மாணவர்களை உருவாக்க முடியாது.

சட்ட விரிவுரையாளர் ஒருவர் சட்டத் தொழிலையாற்றுவது அனுமதிக்கக் கூடியது மட்டுமல்ல அவசியமானதும்கூட.

கலாநிதி குருபரன் சிறந்த சட்ட விரிவுரையாளர் மட்டுமல்ல சிறந்த மனிதவுரிமைச் சட்டவாளருமாவார். பல மனிதவுரிமைவழக்குகளில் இலங்கை நீதித்துறையின் முதுகெலும்பையே பரிசோதனை செய்தவர்.

கல்விப்பணி, சட்டத்தொழில் என்பவற்றிற்கு அப்பால் அடையாளம் என்ற கொள்கை ஆய்வு நிலையத்தையும் உருவாக்கி அதன் இயக்குனராக செயற்பட்டு தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார, கலாசார விடயங்கள் தொடர்பாக ஆய்வுப் பணிகளையும் செய்து வருகின்றார். மாணவர்களுக்கு ஆய்வு தொடர்பான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார்.

இதற்கப்பால் கலாநிதி குருபரன் ஒரு வலுவான தமிழ்த்தேசியவாதியாவார். அவர் நெருக்கடிகளைச் சந்திப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

குருபரன் இலங்கையில்தான் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை. சர்வதேச புகழ் வாய்ந்த பல்கலைக் கழகங்கள் அவரை இணைப்பதற்குத் தயாராக இருக்கின்றன. ஆனாலும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே தாயகத்தில் அவர் தங்கியிருக்கின்றார். இத்தகைய சிறந்த கல்வியாளனை தமிழ் மக்கள் இழக்க முடியாது.

எனவே குருபரனின் வெளியேற்றத்தை சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உடனடியாக கல்விப்பணியையும், சட்டத் தொழிலையும் ஆற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மூதவையை விநயமாக வேண்டிக்கொள்கின்றோம்- என்றார். (த-20)

# ஐ.தே.கவின் தலைமைப் பகுதியில் 2023 ஆண்டு வரை ரணிலே இருப்பார்

## கூறுகின்றார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் விக்கிரமசிங்க 2023 வரை நீடிப்பார். அதற்கு முன்னர் மாற்றம் வேண்டுமெனில் கட்சி சம்மேளனத்தைக்கூட்டி கட்சி யாப்பின் பிரகாரமே மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமைப்பதவியை ஏற்பதற்கு தயாரென நவீன் திஸாநாயக்க விடுத்திருந்த அறிவிப்பு தொடர்பில் வஜிர அபேவர்தன கடும் ஆட்சேபனையை வெளியிட்டிருந்தார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'வஜிர அபேவர்தன எனக்கு எதிராகக் கடுமையான முறையில் விமர்சனங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. தனது கருத்தையே அவர் வெளியிட்டிருந்தார். இவ்வாறு கருத்து வெளியிடும் சுதந்திரம் அனைவருக்கும் இருக்கின்றது. இதுதான் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஜனநாயகப் பண்பாகும்.

அந்தஅடிப்படையிலேயே தலைமைத்துவம் தொடர்பில் நான் கருத்து வெளியிட்டிருந்தேன். அதே உரிமை வஜிர போன்றவர்களுக்கும் இருக்கின்றது.

அத்துடன், பெரும்பான்மையானோரின் விருப்பத்துடன் ஜனநாயக முறைப்படியே தலைமைத்துவ தேர்வு இடம்பெறவேண்டும் என்ற விடயத்தையும் நான் குறிப்பிட்டிருந்தேன். எனவே, ரணில் விக்கிரமசிங்க விலகும்போது. இரகசிய வாக்கெடுப்புமூலம் தலைவரை தெரிவுசெய்வதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும் - என்றார். (ஐ)

# சிறுபான்மை வாக்குகளுக்காக மொட்டுக் கட்சி சண்டித்தனம்!

## மஸ்தானைச் சாடுகின்றார் ரிஷாத்

வவுனியா, ஜூலை 29

மொட்டுக் கட்சியினர் எமது மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக பணபலத்தையும், சண்டித்தனையும் காட்டி அரச வளங்களையும், படைகளையும் பயன்படுத்தி இந்தத் தேர்தலை முன்னெடுக்கின்றனர் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தமுறை தேர்தலில் அதிகமான கட்சிகள் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. கடந்த காலங்களில் நாம் ஆளும் கட்சியில் அமைச்சர்களாக இருந்துதான் பலதேர்தல்களுக்கு முகம் கொடுத்தோம். அப்படியிருந்தும் ஏனைய கட்சிகளுடன் பிரச்சினைகளை ஏற்படுத்தாது ஒவ்வொருவரது ஜனநாயக உரிமைகளைப் பேணி பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். இந்தத் தேர்தலில் மொட்டுக் கட்சியினர் அராயகப் பார்வையில் எமது மக்களின் வறுமையைப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். வெளிமாவட்டத்தில் இருந்து இங்கு வேட்பாளர்கள் களம் இறக்கியுள்ளனர். இந்தப் பகுதியில்உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக பணபலத்தையும் சண்டித்தனையும் காட்டி அரச வளங்களையும், படைகளையும் பயன்படுத்தி இந்தத் தேர்தலை நடத்துகின்றார்கள்.

நூறுவீதம் வரம்புமீறியே இந்த விடயங்கள் நடக்கின்றன. அதனைத்தேர்தல் ஆணையகமும் பொலிஸாரும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கின்றனர்.

ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் வாகனங்களில் பதாதைகளைக் காட்சிப்படுத்திச் சென்றால் பல முறை நிறுத்தி சோதனை செய்கின்றார்கள். ஆனால் அரச கட்சியினர் பல வாகனங்களில் அவ்வாறு செல்கின்றார்கள். அதனைச் சோதனை செய்வதில்லை.

நேற்றும்கூட (நேற்றுமுன் தினம்) சாளம்பைக்குளத்தில் கூட்டத்துக்கு அனுமதி இல்லாமல் கிராமம் ஒன்றுக்குள் சென்று ஊர் மக்களுக்கு அடித்துள்ளனர். பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

இப்படியான அராயகமான நிலைமை வன்னியிலும் வரத்தொடங்கிவிட்டது. தேர்தல் அமைப்புகள் இவை தொடர்பாக கவனம்செலுத்த வேண்டும்- என்றார். (த-110)

# வங்குரோத்து நிலையால் காடையர்கள் கோழைத்தனம்

## மஸ்தான் குறிப்பிடுகின்றார்

வவுனியா, ஜூலை 29

தமக்கு ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலைமையை ஜீரணிக்க முடியாத காடையர்களின் இழிவானதும் கோழைத்தனமுமான தாக்குதல்களால் தமது எழுச்சியை அடக்கி விட முடியாது என்று வன்னி மாவட்ட முன்னாள் பிரதியமைச்சர் காதர் மஸ்தான் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வவுனியா சாளம்பைக்குளத்தில் நேற்று (நேற்று முன்தினம்) ஓர் அரசியல் வாதியின் எடுபிடிகளான காடையர்கள் குழுவொன்று எனது ஆதரவாளர்களான அப்பாவி மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளது.

பல வாகனங்கள் சேதமுற்றன. பல அப்பாவிகள் காயமடைந்துள்ளனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இவ்வாறான நடத்தைகளால் அவர்கள் எதனைச் சாதிக்க நினைக்கின்றனர்?.

தாம் சுகபோகமாக வாழ்வதற்காக அப்பாவிகளை தாக்குவது மனிதநேயமற்றதும் கொடூரமானதாகவுமுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறே மாற்றுக் கட்சியினரை பழிவாங்கும் பாசிசம் வன்னியில் தாண்டவமாடியது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன்- என்றார். (த-110)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிரபாகரன் கேட்டதும் சமஷ்டிக் கோரிக்கையும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ச , புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுத முனையில் கேட்டதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெற முயல்கின்றனர் எனவும், இது நாட்டைப் பிளவுபடுத்திவிடும் ஆகையால் அதைத் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை எனவும் மீண்டும் மீண்டும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகிறார்.

பிரபாகரன் என்றுமே எவரிடமும் எந்தக் கோரிக்கையும் வைத்ததுமில்லை, யாசகம் செய்ததுமில்லை. அவர் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் தமது தாயக மண்ணை சிங்கள மேலாதிக்க சக்திகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கவே ஆயுதப் போராட்டத்தை நடத்தினார். அவர் நடத்தியது பிரிவினைவாதப் போராட்டம் அல்ல ஒரு இனம் தனது சுதந்திரத்துக்காக நடத்திய விடுதலைப் போராட்டம்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேட்பது ,ஒன்றுபட்ட பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத ஒரு நாட்டுக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வாகும்.

ஒரு இனம் தன்னைத்தானே ஆளும் உரிமையையும், இன்னொரு இனத்துடன் ஒரே நாடாக இணைந்து அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு வாழ்வதையும் ஒரே கோரிக்கை எனவும் ஒன்றுடன் ஒன்று போட்டுக் குழப்பியடிக்கிறார்கள் பேரினவாதிகள்.அத்துடன் சிங்கள மக்கள் மத்தியில் நாடு பறிபோகப் போகிறதெனவும் நாட்டைத் தமிழர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமெனவும் அப்படிக் காப்பாற்றக் கூடிய வீரநாயகர்கள் தாங்களே என்ற விம்பத்தை ஏற்படுத்தியும் ஒரு மயக்கத்தை உருவாக்கி தேர்தல் வெற்றியை அடையவும் அவர்கள் முயல்கின்றனர். தமிழ் மக்கள் மீது மட்டுமல்ல சிங்கள மக்கள் மீது கூட ஒரு சர்வாதிகார ஆட்சியை திணிப்பதற்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கும் நடத்தும் ஒரு நாடகமே இது.

கடந்த காலங்களில் சிங்கள தேசத்தையும், சிங்கள மக்களையும் அந்நிய தேசங்களின் மேலாதிக்கத்துக்குள் கொண்டுவருவதற்கான களச்சூழலை உருவாக்கியவர்கள் மாறிமாறி அதிகாரத்துக்கு வந்த இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களே. இவர்கள் சிங்கள மக்களின் இறைமையையும் சுயாதிபத்தியத்தையும் போட்டி போட்டுக்கொண்டு சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் விற்றனர் என்பதை மறுக்க முடியுமா? கொழும்புத் துறைமுகநகரம், கொழும்பு கிழக்கு துறைமுக இறங்குதுறை, அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம் என்பன முற்றுமுழுதாகவே சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டன. எம்.சீ.சீ உடன்படிக்கை மூலம் திருமலைத் துறைமுகம், விமானத்தளம் உட்பட பல ஏக்கர் விஸ்தீரணமான நிலம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளது. அது மட்டுமின்றி அதிகூடிய வட்டிக்கு சீனாவிடம் பெற்ற கடன் காரணமாக சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு இலங்கையை நிபந்தனையின்றி திறந்துவிடும் நிலை உருவாகியுள்ளது.

இப்படியான நிலையில் இலங்கையின் சுயாதீனத்தையும், இறைமையையும் அந்நிய நாடுகளுக்கு விற்றது தமிழர்களல்லர், மாறாகப் பேரின ஆட்சியாளர்களே. நாட்டைத் துண்டாடி, கூறு போட்டு அந்நியநாடுகளுக்கு விற்பனை செய்வதை செவ்வனே செய்யும் பேரினவாதிகள், அடிப்படையில் சிங்கள, தமிழ் ,முஸ்லிம் மக்கள் ஆகியோர் தமது உரிமைகளைப் பேணி, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தாமல் ஒன்றிணைந்து அந்நியதேசங்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக உறுதியாகச் செயற்படுவதன் மூலமே நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். ஆனால் இலங்கையிலோ சிறுபான்மைச் சமூகங்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டு, இன்னொரு புறம் அந்நிய தேசங்களுக்கு நாட்டை அடிமைப்படுத்தும் நிலையே நிலவி வருகின்றது.

இப்படியான ஒரு நிலைமையை பாதுகாத்து சிறுபான்மை சமூகங்கள் மீது தொடர்ந்து ஒடுக்குமுறையை விரிவுபடுத்தும் நோக்குடனேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய தேர்தல் வெற்றியை பேரினவாதிகள் எதிர்பார்க்கின்றனர். இத்தகை வெற்றியை அடைவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசின் அடி வருடிகளும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று கோத்தாபயவுக்கு ஆதரவு கொடுக்க முனைகின்றனர். இவர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பேரபாயத்தை புரிந்துகொண்டு தமிழ் மக்கள் முற்றாகவே அத்தகைய சக்திகளை நிராகரிக்க வேண்டும். அதேவேளையில் ஒரே தலைமையில் ஒன்றிணைந்து நின்று சிங்கள மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களையும் முறியடிக்க வேண்டும்.

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த திட்டம்



கொழும்பு,ஜூலை 29

**நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அனைத்து சாரதிப் பயிற்சி பாடசாலைகள் தொடர்பில் கண்காணிப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

சாரதிகளின் மத்தியில் முறையான பயிற்சிகள் இல்லாத காரணத்தாலேயே வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

அதனை முறைப்படுத்தும் முறையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். நாட்டில் 538 சாரதிப் பயிற்சி பாடசாலைகள் இயங்குகின்றன. அந்தப் பாடசாலைகள் எந்தவொரு முறையான நியதிகளையும் கொண்டிருக்கவில்லை. முறையான சாரதிப் பயிற்சிகளை மேற்கொள்ள முன்னரே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுக்க பாடசாலைகள் நடவடிக்கை எடுக்கின்றன.

அதற்கிணங்க சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளில் சேவையிலுள்ள ஆலோசகர்களுக்கு முறையான தெளிவூட்டல்களை வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படும். அது தொடர்பிலும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது- என்றார். (க)

*பரிந்துரைகளை*

# நடைமுறைப்படுத்த மீண்டும் அழுத்தம்

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் காலப்பகுதியில் கொவிட் 19 பரவுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சுகாதார அமைச்சின் வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றறிக்கை தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான அதிகாரங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்குமாறு, சட்ட மா அதிபரால் சுகாதார செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, கொவிட் 19 கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் தமக்கு வழங்கப்படும் வரை தமது தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடரும் எனவும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கடந்த 10 நாள்களாக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தேர்தல் கூட்டங்கள் ஞாயிறன்று நிறைவு



கொழும்பு, ஜூலை 29

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்களை நடத்துவது எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறைவுக்கு வரும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியின் பின்னர், பிரசாரத்துக்கான பொறிமுறைகளைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (க)

# அரச நிறுவனங்களுக்கான தளபாடங்கள் உள்ளூரில்

## ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 29

அரச நிறுவனங்களுக்குத் தேவையான தளபாடங்களை உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்வதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்ல தலவத்துகொடவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், மொரட்டுவ தளபாட உற்பத்தியாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட பொது மக்கள், சிறைச்சாலை கைதிகளின் பராமரிப்புக்கு அரச நிதியைச் செலவு செய்யாமல், அவர்களைப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கான செலவுகளைச் செய்து கொள்வது தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தனர்.

நவகமுவ, அத்துருகிரிய, தலங்கம வைத்திய சாலைகளை நவீன மயப்படுத்தல் உள்ளிட்ட மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

பாடசாலை மாணவர்களின் அதிக நிறை கூடிய பாடசாலை புத்தகப்பைகளுக்குப் பதிலாக இலகுவான புத்தகப் பைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 12 வருடங்கள் கடுழியச் சிறை

## வவுனியா மேல்நீதிமன்று தீர்ப்பு

**வவுனியா, ஜூலை 29**

**6 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியவருக்கு இளைஞர் ஒருவருக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்று 12 ஆண்டுகள் கடுழீயச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.**

2016ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதிக்கும் 28ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாளில் 6 வயதுச் சிறுமியை அவரது சட்டபூர்வ பாதுகாவலரான தாயாரிடமிருந்து கடத்திச் சென்றமை மற்றும் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் 19 வயதுடைய உவைஸ் முகமெட் ரவீத் என்பவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அது மீதான விளக்கம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நடைம் பெற்று வந்தது.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் சட்டத்தரணி ஜெயந்தன் முன்னிலையானார். வழக்கில் முதலாவது சாட்சியான பாதிக்கப்பட்ட 9 வயது நிரம்பிய சிறுமி தனது சாட்சியத்தில், "அம்மா மருத்துவமனையில் இருந்தார். அப்போது நான் ஓட்டப்போட்டிக்காக பள்ளிக்குச் சென்றேன். என்னை அயல்வீட்டு மாமா சைக்கிளில் ஏற்றிச் சென்று விடுகின்றேன் என்று கூறினார். அதனால் அவருடன் சென்றேன். என்னை பள்ளியில் இறக்காமல் இறைச்சிக் கடைக்கு பக்கதால சென்று பற்றைக்குள் வைத்து துன்புறுத்தினார்" என்று விவரித்தார்.

அத்தோடு தனக்கு நடந்தவற்றை அம்மா வீட்டில் இல்லாதபடியால், அயல் வீட்டில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியையிடம் முதலில் கூறினேன் என்றும் சிறுமி தெரிவித்தார்.

சிறுமியின் சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில் அவரது தாயார், அயல் வீட்டு ஆசிரியையின் சாட்சியமும் அமைந்தது. நிபுணத்துவ சாட்சியத்தில் சட்ட மருத்துவ அதிகாரி, சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்பதை உறுதிப்படுத்தினார். எதிரி சார்பில் அவரது தந்தை சாட்சியமளித்திருந்தார். அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்தின் குறுக்கு விசாரணையில் எதிரி தடுமாறினார். இந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் நேற்று வழங்கினார்.

எதிரி மீதான இரண்டு குற்றச்சாட்டுகளும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதனால் சிறுமியைக் கடத்திச் சென்ற குற்றத்துக்கு 3 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்தோடு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றத்துக்கு குற்றவாளிக்கு 9 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்தோடு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும்.

இந்த இரண்டு சிறைத் தண்டனைகளையும் குற்றவாளி ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 2 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்று நீதிபதி தீர்ப்பில் தெரிவித்தார். (கு)




## கொரோனாவிலிருந்து மீள பால்குட பவனியும் யாகமும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கொரோனாவிலிருந்து மக்களை மீட்கவேண்டி பால்குட பவனியும் மகா சுதர்சன யாகமும் வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று செவ்வாயக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இடர்கள் வருகின்றபோது அதிலிருந்து மக்களைக் காக்கவேண்டியும் கிருஷ்ண பகவானின் ஆசி வேண்டியும் இவ் யாக இடம்பெற்றது. யாகத்துக்கு முன்னதாக காலை 6 மணியளவில் பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் ஆலயத்திலிருந்து 108 பால் குட பவனியாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு மந்திகை ஊடாக பால் குட பவனியாக பால் கொண்டு வந்தே மகா சுதர்சன் யாகம் இடம் பெற்றது. (ஒ,5)



## யானை தாக்கி ஒருவர் சாவு

முல்லைத்தீவு, ஜூலை 29

வெலி ஓயாவில் யானை தாக்கியதில் சிவில் திணைக்கள உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

அங்குள்ள குளக்கரைப் பகுதியில் வைத்து அவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். 36 வயதுடைய ஜெனகபுரம் வெலிஓயாவைச் சேர்ந்த டி.பி. சமிந்த விஜயகுமார என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். (எ-19)

## சிறுமியுடன் குடும்பம் நடத்திய 21 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 29

பாடசாலை செல்லும் 15 வயது சிறுமியை காதலித்து திருமணம் செய்கின்றேன் என்றுகூறி கூட்டிச்சென்று குடும்பம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 21 வயது இளைஞன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது. சிறுமியைக் காணாது தேடிய பெற்றோர் கடந்த 23ஆம் திகதி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில், இருவரும் நேற்றுமுன்தினம் ஊருக்குத் திரும்பியுள்ளனர். அவர்களைக் கைதுசெய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். அதன்போதே அந்த இளைஞன் சிறுமியை தீவிரமாகக் காதலித்து வந்துள்ளார் என்றும் அதனால்தான் சிறுமியை கூட்டிக்கொண்டு சென்று விசுவமடு பகுதியில் குடும்பமாக வாழ்ந்தார் என்று தெரியவந்தது.

அதன்பின்னர் சிறுமி சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இளைஞனையும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-25,26)

## சைக்கிள்கள் திருட்டு! யாழ்., வவுனியா நபர்கள் கைது

வவுனியா, ஜூலை 29

வவுனியாவில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளமை பற்றி வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இவை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் திருடப்பட்ட 7 சைக்கிள்களை மீட்டிருந்தனர்.

அவற்றை வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டி இரண்டு பேரைக் கைது செய்திருந்தனர்.

வவுனியா குகன்நகர் மற்றும் யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-110)



# நல்லூர் திருவிழாவில் கொரோனா விதிமுறைகளை உறுதிப்படுத்தவும்

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

**வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் திருவிழாவில் நாடளாவியரீதியில் அமுலிலுள்ள சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் உரிய முறையில் பின்பற்றி கொரோனா தொற்றுப் பரவலில் இருந்து சமூகத்தைக் காப்பாற்றவேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டுமென வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் கேட்டுக்கொண்டார்.**



வடமாகாண மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று ஆளுநர்.பீ.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் ஆளுநரின் செயலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே சார்ள்ஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லூர் திருவிழாவில் நாடளவில் அமுலிலுள்ள சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் உரிய முறையில் கடைப்பிடித்து கொரோனாத் தொற்றுப் பரவலில் இருந்து சமூகத்காதைக் காப்பாற்றவேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நேர அட்டவணை தயார்செய்து அதனடிப்படையில் பூஜைகளை நடத்தலாம். நமது மாகாணக் கோவில்களில் சுகாதார விதிமுறைகள் மீறப்படுகின்றமையை நான் விரும்பவில்லை. தேவைப்பட்டால் பொலிஸ் உதவியை நாடுங்கள். மக்களைக் காப்பதற்கான அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுங்கள் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

## வரலட்சுமி விரத சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் மகாலட்சுமிக்கு திருமஞ்சனம் தீப பூஜை நடைபெற்று அடியார்களுக்கு வரலட்சுமி திருக்காப்பு வழங்கப்படும் .

அடியவர்கள் சுகாதார நடைமுறைப்படி ஆலயத்துக்கு வருகைதருமாறும், விரத காரர்கள் கோவிலில் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## புற்கள் முளைத்த கம்பெரலிய வீதி!

*மக்கள் விசனம்*



சாவகச்சேரி, ஜூலை 29

வீதி செப்பனிட்டு பதினைந்து தினங்களுக்குள் வீதியின் பல இடங்களில் புற்கள் முளைத்துள்ளமை குறித்து பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் கிராம எழுச்சி (கம்பரெலிய) வேலைத்திட்டத்தின் கீழ் சரசாலை வடக்கில் உள்ள வீதியைச் சீரமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு சாவகச்சேரி பிரதேச சபைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த பதினைந்து தினங்களுக்கு முன்னர் வீதி கற்கள் பரவப்பட்டு சபையின். தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வழிகாட்டலில் தார் ஊற்றப்பட்டது. இந்நிலையில் வீதியின் பல இடங்களில் புற்கள் வளர்ந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆரம்ப மழைக்கு வீதியின் பல இடங்களில் புற்கள் முளைத்துள்ளன. மழைக்காலம் முடிவடைந்ததும் தார் வீதி புற்கள் நிறைந்த வீதியாகக் காணப்படும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-9)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலய நான்காம் நாள் (28.07.2020) மாலை நேரத்திருவிழாவின் சில பதிவுகள். (ஐ)




### சங்கடங்கள் தீரச் சன்முகனைத் தொழுவோம்

நல்லை குமரேசன் நாடிப் பூங்காவனம்
நல்விழா சுற்றி வாறான் எங்கள்
அல்லலெலாங் கூறி அவனை வணங்கிட
அடியாரெல்லாம் வாரீர்
தெய்வ இந்திரன் மகள் தேவயானையுடன்
தினைப் புன வள்ளியுடன்
சிங்காரமாகவே மங்கலம் ஒலித்திட
சிவகுமாரன் வருவான்
சங்கடங்கள் தீர மங்கலம் கைகூட
சண்முகனைத் தொழுதே அவன்
மலரடி தலைசூடி மகிழ்ந்து நோற்றென்றென்றும்
அவனருள் பெற்றுய்வோமே.

*கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம்*

### நல்லூர் கந்தன்

நல்லென நல்கும் நல்லூரான்
நலமென வாழ்ந்திட நாமெல்லாம்
துணையென அருள்வாய் ஆறுமுகா

இடரெதுவரினும் எமக்கு
துணையென உனை அழைப்போம்
கருணைத் தெய்வமே கந்தா

நல்லூர் பதிவாழ் நாயகனே
பல்லோர் வாழப் பணிந்தேனே
நல்லோர் வாழ அருள் நல்கிடுவாயே

பிரபாகரன் வேதிகா

### நல்லைப்பதிவாழ் கந்தா!

சஞ்சலங்கள் தீர்க்கும் சங்கரனே
வெஞ்சினம் இல்லா வேலவனே !
தஞ்சம் என்று வருவோர்க்கு
ஆறுதல் அளிப்பவனே முருகா!
கொஞ்சம் நீ கண்திறந்து – நம்
நெஞ்சம் குடிகொண்டருள்வாய்
நல்லைப் பதிவாழ் கந்தனாக!

*அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா*



# வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

## பிரதமரின் இணைப்புச் செயலரிடம் யாழ்ப்பாண ஆயர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 29**
**வடக்கில் இளையோருக்கு வேலை இல்லாத பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாண ஆயர், பிரதமரின் இணைப்பு செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலர் வணபிதா எஸ்.சந்திரகுமார் நேற்றுக் காலை சந்தித்து ஆசி பெற்றார்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மதங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும். வடக்கு மக்களின் கஷ்டம் துன்பங்களை பிரதமருக்கு தெரியப்படுத்துமாறு கூறியுள்ளேன். வடக்கில் முக்கியமான பிரச்சினையாகவுள்ள இளையோருக்கான வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அத்தோடு கல்வி தொடர்பான விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்படுத்தவேண்டும். மீன்பிடி, விவசாயத்தில் கவனம் செலுத்தி முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயங்களைப் பிரதமருக்கு தெரியப்படுத்துமாறு நான் கூறியுள்ளேன், என்றார். (ஓ.5,111)

# சுண்ணாம்புக்கல் ஏற்றிய உழவியந்திர சாரதி கைது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வசாவிளான் குட்டியபுலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக் கல் அகன்ற உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைதுசெய்துள்ளோம் என காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் இயங்கும் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது குட்டிய புலம் பகுதியிலுள்ள காணியொன்றில் அனுமதிப்பத்திரமின்றி சுண்ணாம்பு கல் ஏற்றிய நிலையில் உழவு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

சாரதியிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர் சுரங்க அகழ்வு கனிய வளங்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி சுண்ணாம்புக்கல் ஏற்றியமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன்போது உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டது அந்த சாரதி கைது செய்யப்பட்டார். (ஓ.5,25)

# இறுதிச் சடங்கிலும் திருடிய கயவர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

மல்லாகம் கோட்டைக்காடு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது நகையும் பணமும் திருடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. நான்கு பவுண் நகை, 5 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சங்கம்பட்டி பூநகரி பிரதான வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் மல்லாகம் கோட்டை காட்டு பகுதியை சேர்ந்த சுகுமார் சுகேந்திரன் (வயது 44) வாகன விபத்தில் உயிரிழந்திருந்தார். உயிரிழந்த நபரின் இறுதிக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் பகுதியில் இடம்பெற்றது. வந்த உறவினரின் நகையும் பணமும் திருடியதாக தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். திருட்டுச் சந்தேக நபரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துக்கம் இடம்பெறும் வீடுகளில் இவ்வாறு நகை பணத்தை குறிவைத்து திருடுவதற்கு வருபவர்கள் தற்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். (ஓ.5,25)

### கைதான ஆசிரியரால்

# ஆண் பிள்ளைகள் துஷ்பிரயோகம்

## விசாரணையில் வெளிவந்த அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூலை 29

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்த தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட கொழும்பில் மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியரால் 16 வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகளே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட 3 மாணவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலதிக வகுப்பு மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஈடுபடும் சந்தேகநபர் அதன் ஊடாக அடையாளம் காணும் மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை தனது வீட்டிற்கு வரவழைத்துள்ளார். வீட்டிலேயே பல மாணவர்களை அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று தெரியவந்துள்ளது. ஆசிரியரின் வீட்டில் மீட்கப்பட்ட பல புகைப்படங்கள் துஷ்பிரயோகத்தின்போது எடுக்கப்பட்டவையாகும்.

இவர் தொடர்பில் மேலும் பல தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. கொள்ளுப்பிட்டி பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# சிறைச்சாலை பேருந்துகள் நோக்கி வீசப்படும் சட்டவிரோத பொருள்கள்

கொழும்பு, ஜூலை 29

சிறைச்சாலை பேருந்துகள் ஊடாக கைதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும்போது, சட்டவிரோதமான முறையில் பொருட்கள் அடங்கிய பொதிகள் வீசப்படுகின்றன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு வெளியில் இருந்து சட்டவிரோதமான முறையில் பொருட்கள் வழங்கப்பட்டு வந்துள்ளமுறை குறித்த விசாரணைகளிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. சிறைச்சாலைகள் பேருந்து களுத்துறை நகரில் நேற்று சென்று கொண்டிருந்தபோது இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. நகரில் இருந்த சிலரினால் இவ்வாறு 3 பொதிகள் குறித்த பேருந்தை நோக்கி வீசப்பட்டுள்ளன. அதில் இரண்டு பொதிகள் பேருந்துக்கு வெளியே விழுந்துள்ளதோடு, ஒரு பொதி பேருந்திற்குள் விழுந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பேருந்தில் இருந்த அதிகாரிகள் குறித்த பொதிகளை எறிந்த நபர்களைத் துரத்திச்சென்று அவர்களில் ஒருவரை கைதுசெய்து களுத்துறை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். கைப்பற்றப்பட்ட பொதியில் புகையிலை மற்றும் கையடக்க தொலைபேசிகள் காணப்பட்டுள்ளன என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிறைச்சாலை பேருந்துகளில் பாதுகாப்பு முறைமைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ரி1)




# வடக்கு மாகாண ஆளுநர் சுவிட்சர்லாந்து தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும் சுவிட்சர்லாந்து தூதுவர் ஹான்ஸ் பீற்றர் மோக்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

சுவிட்சர்லாந்து தூதுவர் ஹான்ஸ் பீற்றர் மோக் இலங்கையில் தனது சேவைக் காலத்தினை பூர்த்திசெய்து மீண்டும் தனது சொந்த நாட்டிற்கு திரும்பவுள்ள நிலையில் அவருக்கான பிரியாவிடை அளிக்கும் முகமாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின்போது வடமாகாண நிலைமைகள் மற்றும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. சந்திப்பில் இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் சிடோனியா கப்ரியல் ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாலயன்கொட, செயலாளர் எஸ்.சத்தியசீலன், உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ரி1)

# துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கவேண்டும்

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 29**

**அனைத்து விதமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். இதற்குத் தேவையான பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டியது அவசியமாகும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுப் பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த விஷேட கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, போதைப்பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் பொருட்டு, பாடசாலை மட்டத்தில் விசேட விழிப்புணர்வு குழுக்கள் ஏற்னவே உருவாக்கப்பட்டுள்ளன. துரதிஷ்டவசமாக, போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை மற்றும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆகியவற்றை எடுக்க வேண்டிய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளில் சிலர், அவற்றில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தமை அனைவரும் அறிந்த உண்மையாகும். இவ்வாறு செயற்பட்ட பொலிஸ் போதை தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 17 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கான அபராதங்கள் மற்றும் தண்டனைகளை கடுமையானதாக மாற்றியமைக்கும் வகையில் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். தற்போது அமுலில் உள்ள சட்டங்கள் மிகவும் மென்மையானதாக காணப்படுகின்றமையால் குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு நியாயமான தண்டனைகள் வழங்க முடியாமல் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ரி1)

# புவனேகபாகு மன்னனின் சபா மண்டபம் தகர்ப்பு விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 29

தகர்க்கப்பட்ட புவனேகபாகு மன்னனின் சபா மண்டபம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கை வட மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் பதில் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன எனவும் இதுவரை எவரையும் பொலிஸார் சந்தேக நபராக அடையாளம் காணவில்லை எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த தொல்பொருள் கட்டடம் தகர்க்கப்பட்டமை தொடர்பில் குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட சுமார் 20 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன் மேலும் சிலரிடம் வாக்குமூலம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலும் பதில் பொலிஸ் மா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி1)

# 10 பேர் நேற்று இலங்கை வந்தடைவு

கொழும்பு, ஜூலை 29

கட்டாரில் இருந்து நேற்று காலை 10 பேர் இலங்கை திரும்பியுள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் பி.சீ.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# குருநாகல் நகர மேயரை கைது செய்யக் கோரி மனுத்தாக்கல்

குருநாகல், ஜூலை 29

குருநாகல் நகர மேயர் துஷார சஞ்சீவவை உடனடியாகக் கைது செய்து, குருநாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் குருநாகல் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அகில இலங்கை விவசாய அமைப்பின் ஏற்பாட்டாளர் நாமல் கருணாரத்னவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குருநாகல் தொல்பொருள் கட்டடம் மிகப் பழமையான கட்டடம் என தொல்பொருள் திணைக்களத்தால் கடிதம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்தக் கட்டடத்தை சட்டவிரோதமாக உடைத்தமைக்கு எதிராக, குருநாகல் நகர மேயருக்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ரி3)



## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்:

# காத்தான்குடியில் கைதான 63 பேருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஜூலை 29

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட 63 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சஹ்ரானின் சகோதரி, சீயோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளைக் கொண்ட 63 பேரையுமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி. றிஸ்வான் நேற்று முன்தினம் காணொலி மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார். கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் காத்தான்குடியைச் சேர்ந்த 64 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 59 பேர் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை வெவ்வேறு வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சீயோன் தேவாலய தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார் உட்பட 4 பேரும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ரி1)



# நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது இளைஞர்களுக்கு வெறுப்புள்ளது!!

## ஏற்றுக் கொள்கிறார் ரணில்

**கொழும்பு, ஜூலை 29**



**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் காரணமாக அவர்கர் மீது இளைஞர், யுவதிகளுக்குப் பெரும்வெறுப்பு ஏற்பட்டி ருக்கிறது. அதனால் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் தியவன்னா ஓயாவிற்குள் தள்ளவேண்டும் என்றார்கள். தற்போது நாடாளுமன்றத்தில் இருப்பவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் நன்றாக இருக்கும் என்கிறார்கள். அவர்களின் சிந்தனையில் ஒரு நியாயமிருக்கிறது - என்று தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.**

கெஸ்பேவ நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுத்தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளின் காரணமாக அவர்கள் மீது இளைஞர், யுவதிகளுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் தியவன்னா ஓயாவிற்குள் தள்ளவேண்டும் என்றார்கள். தற்போது நாடாளுமன்றத்தில் இருப்பவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் நன்றாக இருக்கும் என்கிறார்கள். கடந்த 2019ஆம் ஆண்டில் அதற்கு முன்னர் எப்போதும் அரசியலில் ஈடுபடாத ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு இளைஞர், யுவதிகள் தமது வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையிலும் தற்போது சரிவு ஏற்பட்டிருப்பதால், எவரொருவர் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது என்றுகூறி அவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் இருப்பது குறித்தும் சிந்திக்கின்றனர். அவர்களின் சிந்தனையில் ஒரு நியாயமிருக்கிறது. அரசியல்வாதிகள் என்ற அடிப்படையில் எம்மிடமும் குறைபாடுகள் உள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் எமது நாட்டின் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து சிந்திக்கவேண்டும். லண்டன் பல்கலைக்கழக ஆய்வொன்றின்படி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருவருடத்திற்கும் அதிகமான காலம் தேவைப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நாம் கொரோனாவுடன் வாழப்பழக வேண்டும் என்பதே சாராம்சமாகும். நாம் எவ்வாறு கொரோனாவுடன் வாழப்பழகுவது? அதனால் எமது நாளாந்த வாழ்வில் ஏற்படத்தக்க சவால்கள் என்ன? அதிலிருந்து நாம் எவ்வாறு மீள்வது? கொரோனா வைரஸ் பரவலால் ஏற்படத்தக்க ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்ன? என்பது போன்ற நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் பற்றி யாரும் தேர்தல் பரப்புரை மேடைகளில் பேசுவதில்லை. இதுபற்றி ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே பேசுகின்றது. நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் பற்றிப்பேசி, அவற்றுக்குத் தீர்வுகாணாவிடின் நாட்டிற்கென நிர்வாகக் கட்டமைப்பொன்று எதற்கு? - என்றார். (ம)




# பெரும்பான்மையுடன் இருந்த காலத்தில் என்ன செய்தீர்கள்?

## கமகே கேள்வி

கொழும்பு, ஜூலை 29



நாட்டை முன்னேற்றுவதற்கு இம்முறை பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுத்தருமாறு அரசு கோருகின்றது. 2015ஆம் ஆண்டு மஹிந்த தரப்பினர் பெரும்பான்மைப் பலத்துடன் இருந்தபோது ஏன் மஹிந்தவால் நாட்டை முன்னேற்ற முடியவில்லை - என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகே. ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய அதிகம் பேசாததால் அவர் வெற்றிபெற்றார். நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கியமையால் சஜித் தோல்வியடைந்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்களுக்கு தற்போது முக்கியமான இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலையாகும். இத்தகையதொரு நிலையேற்படுவதைத் தவிர்ப்பதற்கான தொற்றாளர்களை இனங்காணும் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஆரம்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்திவந்த போதிலும், அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

இரண்டாவது பிரச்சினை நாட்டின் பொருளாதாரம் பற்றியதாகும். வியட்நாம் போன்ற சீனாவிற்கு அண்மைய நாடுகளே கொரோனா வைரஸ் பரவலை சீராகக் கட்டுப்படுத்தின. உண்மையில் இலங்கை ஒரு தீவு என்பதால் நாம் இன்னும் இலகுவாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். எனினும் அரசாங்கம் ஆரம்பத்திலேயே விரைந்து செயற்படாமல் பொதுத்தேர்தலை நடத்தி முடிப்பதையே இலக்காகக் கொண்டிருந்தமையால் பின்னர் சுமார் இரண்டரை மாதங்கள் நாட்டு மக்கள் அனைவரையும் வீடுகளுக்குள் முடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் பெருமளவானோர் தமது தொழில்வாய்ப்புக்களை இழந்ததோடு, தத்தமது குடும்பங்களுக்கான வருமான மார்க்கங்களையும் இழந்தனர்- என்றார். (ம)

# ஐ.தே.க தலைவராக முடியாது நவீன்

## வஜிர பதிலடி

கொழும்பு, ஜூலை 29



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்க தான் தயார் என்றும் அதற்குத் தானே பொருத்தமானவன் என்றும் நவீன் திஸாநாயக்க கூறியுள்ளமை அவரின் அறியாமையையே வெளிப்படுத்துகிறது. இது தற்போது அநாவசியமானதொரு கருத்தாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சித் தலைமைத்துவத்தை ஏற்கத் தயார் என்று நவீன் திஸாநாயக்க கூறியுள்ளமை அவரது அறியாமையாகும். இது தற்போது தேவையற்ற ஒரு பிரச்சினையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினை எதுவும் தற்போது ஏற்படவில்லை.

ஒரு குடும்பத் தலைவர் போன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு குடும்பத்தில் அதன் தலைவராக தந்தை இருக்கும்போது அயல் வீட்டிலுள்ள ஒருவரை அந்த குடும்பத்திற்கு தலைவராகக் கொண்டுவர முடியாது.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சி என்ற குடும்பத்தின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார். எனவே தற்போது கட்சித் தலைமைத்துவத்திற்கோ அல்லது அதில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கோ எந்தத் தேவையும் கிடையாது - என்றார். (ம)

# போதைப் பாவனையாளர்களால் வேட்பாளர்களுக்கு உதவிகள்!

## விஜயதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 29

போதைப்பொருள் பாவனை அல்லது விற்பனையாளர்களும் பாதாள உலகக் குழுவினரும் தேர்தல் காலங்களில் வேட்பாளர்களுக்கு நிதியுதவி செய்கின்றமையினாலேயே அரசியல்வாதிகள் அவர்களைப் பாதுகாக்க முற்படுகின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் ஒத்துழைப்புடன் போதைப்பொருளுடன் தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய துறைகளில் காணப்பட்ட ஊழல் மோசடிகள் மற்றும் குறைபாடுகள் என்பவையே இவற்றுக்கு பிரதான காரணமாகும். என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# தனது சிங்கள எஜமானர்களை திருப்திப்படுத்துகிறார் சம்பந்தன்

## சிறிகாந்தா குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூலை 29

தனது சிங்கள எஜமானர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் இரா. சம்பந்தன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்று தெரிவித்தார் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளரான சிறிகாந்தா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைத் தோற்றுவித்தது. தலைவர் பிரபாகரனுடைய ஆதரவோடு கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது என்றெல்லாம் தெரிவித்து கூட்டமைப்புத் தலைவர்கள் வாக்குக் கேட்கிறார்கள். கடந்த வருடம் மார்கழி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் நிகழ்விலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிப்பட்டது நல்ல விடயமாக இருக்கலாம் என்று சம்பந்தன் பேசினார். குண்டு வீச்சுக்கள், கொலைகள், சிதைவுகள், அழிவுகள், இடப்பெயர்வுகள், எமது மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் இடம்பெற்றன. இவை சம்பந்தனுக்கு நல்ல விடயங்களா?



சமீபத்திலே சுமந்திரன் என்ன சொன்னார்?. ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லையென ஒரு சிங்கள ஊடகத்திற்கு பெருமைமிக்க ஒரு தமிழனாக அவர் தெரிவித்தார். 'இவர்கள் எல்லாம் தமிழ்த் தேசியம் பேசுவதற்கு தகுதி உள்ளவர்களா?' - என்றார். (ம-26)

# கொந்தராத்துக்காரர்களை அரசு மதிக்க வேண்டும்

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு*



மட்டக்களப்பு, ஜூலை 29
கொந்தராத்துக்காரர்களைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்குக் கொடுபட வேண்டிய கொடுப்பனவுகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால் கோரப்பட்ட கேள்வி மனுக்களுக்கமைய அரச கொந்தராத்து வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்த திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொந்தராத்துக்காரர்களுக்கு அரசு சுமார் 500 மில்லியன் ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளது. கொந்தராத்துக்கார்களால் வழங்கப்பட்ட தகவல்களில் இருந்து இதனை அறிய முடிகின்றது. இதுபோல ஏனைய மாவட்டங்களிலும் இருக்கலாம்.

மாவட்டச் செயலகம் மற்றும் மாகாண சபை ஊடாக செய்யப்பட்ட கொந்தராத்து வேலைகள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டு கொந்தராத்துக்காரர்களால் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் பல மாதங்கள் கடந்தும் அரசு இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கவில்லை.




இதனால் பல கொந்தராத்துக்கார்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த கொந்தராத்துக்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் அரச அதிகாரிகளுடன் செய்யப்பட்டுள்ளன. இதன்படி கொந்தராத்துக்காரர்கள் நீதிமன்றத்தை நாடி நிவாரணம் கோரலாம். அப்படி நீதிமன்றம் சென்றால் அதனால் பாதிக்கப்படப்போவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அரச அதிகாரிகள்தான்.

ஆனால் கொந்தராத்துக்காரர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களது பெருந்தன்மையை அரசு மதிக்க வேண்டும். அவர்களுக்குச் சேர வேண்டிய கொடுப்பனவுகளை மேலும் தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். ளளி(ம)

# கூட்டமைப்பின் கோரிக்கைகளில் எமக்கு உடன்பாடு கிடையாது!

*ஐக்கிய மக்கள் சக்தியின் சம்பிக்க தெரிவிப்பு*



**கொழும்பு, ஜூலை 29**
**ஐக்கிய மக்கள் சக்திக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் எவ்வித கூட்டணியும் இல்லை. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாம் அவர்களுடன் இணைந்து செயலாற்றியிருக்கின்றபோதிலும் அவர்களுடைய அரசியல் நிலைப்பாடுகள், குறிப்பாக சமஷ்டி ஆட்சி தொடர்பான அவர்களின் கொள்கைகளுடன் எமக்கு எவ்வித இணக்கப்பாடும் இல்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குரிய அதிகாரங்களை நீக்கி, அவற்றை பிரதேசசபைகளின்தலைவர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் அரசியல்சார் பிரச்சினை யொன்றுள்ளது. ஏனெனில், பெரும்பாலான பிரதேச சபைகள் ஆளுந்தரப்பின் வசமே உள்ளன. அவ்வாறிருக்கையில் அவர்களிடம் பாதைகளுக்கான வழிகாட்டல்களை செயற்படுத்துகின்ற அதிகாரத்தை வழங்கினால், அது நியாயமான தேர்தலொன்று நடைபெறுவதை உறுதிசெய்வதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

பொதுத்தேர்தல் பரப்புரைகள் மற்றும் ஏனைய தேர்தல் செயற்பாடுகளின் போது கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான உரிய சட்டதிட்டங்கள், வழிவகைகள் எவையுமில்லை. தற்போதுவரையில் சமூக இடைவெளியைப் பேணுவதன் ஊடாகவே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும். எனினும், அத்தகைய சமூக இடைவெளியைப் பேணுவதற்குரிய விதிமுறைகள், சட்டதிட்டங்கள் என்பவற்றை உச்சபட்சமாக மீறி ஆளுந்தரப்பு செயற்படும் போது ஏனைய தரப்புக்களும் அவற்றை மீறுவதைத் தடுக்கமுடியாத நிலையொன்று ஏற்படும். எனவே, சட்டமா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரின் ஒப்புதலுடன் உரிய சுகாதார விதிமுறைகள் தேர்தல்களுக்கு முன்னரும், தேர்தல் தினத்தன்றும் முறையாகக் கடைப்பிடிக்கப்படக்கூடிய விதத்திலான விதிமுறையை வர்த்தமானி மூலம் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புத்தளம் லக்விஜய அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்வாகத்தையும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடம் கையளிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன - என்றார். (ம)

# உரிய அந்தஸ்து வழங்காதது நாகரீகமற்ற செயற்பாடே

*நல்லாட்சி அரசை சாடுகிறார் மஹிந்த*



கொழும்பு, ஜூலை 29
ஐம்பத்து மூன்று ஆசனங்களைக் கொண்டிருந்த போதிலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமையைக் கூடக் கொடுக்காது கடந்த நல்லாட்சி அரசாங்கம் செய்த தவறான செயற்பாட்டால், பொதுமக்கள் முன்னணி பலமான கட்சியாக உருவெடுத்தது என்று தெரிவித்தார் அதன் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ.

அளவ்வ பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மாறாக அரசியல் பழிவாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருந்த நல்லாட்சி அரசாங்கம் பதினாறு ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைமையை வழங்கியது. அதே சமயம் 53 ஆசனங்களைக் கொண்டிருந்த எமக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து தரவில்லை. ஐம்பத்து மூன்று ஆசனங்களை வைத்துக் கொண்டு பொதுமக்கள் முன்னணி நாடாளுமன்றத்தில் பேச்சு மூச்சற்று அமர்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனாலேயே பெரமுன இன்று பெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது - என்றார். (ம)

# வடக்குமாகாண சபைக் கட்டடத்தொகுதி மாங்குளத்தில் அமைவதைத் தடுத்தவர் விக்கி

*சத்தியலிங்கம் குற்றச்சாட்டு*



வவுனியா, ஜூலை 29
வடக்கு மாகாண சபைக்கான கட்டடத்தொகுதி மாங்குளத்தில் அமைக்கப்படுவதைத் தடுத்தவர் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரனே என வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் வன்னி நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் முடிவடைந்த பின்னர் மாகாண சபைக்கென சொந்தமாக கட்டடம் இருக்கவில்லை. கைதடியில் அமைந்திருந்த பிரதம செயலாளரின் செயலகத்திலேயே மாகாண சபையை நடத்தவேண்டிய நிலைமை இருந்தது. எனினும் பெரும்பாலானவர்களின் விரும்பம் வடக்கு மாகாண சபைக்கான கட்டடத்தொகுதியை மாங்குளத்தில் அமைப்பதென்பதாகும். வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் பொதுவான இடமாக இந்த இடம் அமைந்திருந்தது. அத்துடன் மாகாண சபைக்கட்டடத் தொகுதியொன்று மாங்குளத்தில் அமையும் போது அந்தப் பிரதேசம் மேலும் அபிவிருத்தியடையும்.

அத்துடன் மாகாண சபைக்கான கட்டடத்தொகுதி குறிப்பிட்டவொரு இடத்தில் அமைவதால் பொதுமக்கள் தங்கள் சேவைகளை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும். இந்தச் சிந்தனை கட்சிபேதமின்றி மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களிடமும் இருந்தது. எனினும் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வ ரனோ மாங்குளத்தில் நிலத்தடிநீர் போதாமல் உள்ளது என்று காரணம்காட்டி அதற்கு முட்டுக்கட்டை போட்டார். நிலத்தடிநீர் இல்லையென்றால் ஆண்டாண்டு காலமாக மாங்குளத்தில் மக்கள் குடியிருக்கவில்லையா? அங்கு மக்கள் விவசாய நடவடிக்கைளில் ஈடுபடவில்லையா? தெற்கிலேயே காலத்தை கழித்த இவருக்கு வன்னிப்பிரதேசத்தின் நீர்வளம் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

மாங்குளத்தில் தற்போது 10க்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் இயங்கிவருகின்றன. மாகாண அலுவலகங்கள், மத்திய அமைச்சின் திணைக்களங்கள் என பல்வேறு அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. மாகாணத்திற்கான புனர்வாழ்வு வைத்தியசாலை மாங்குளத்திலேயே அமைக்கப்பட்டுவருகின்றது. இதனைவிட துணுக்காய் வலயக்கல்வி திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வீடமைப்பு அதிகார சபை, தேசிய இளைஞர்சேவைகள் மன்றம், பிரதேச நில அளவை திணைக்களம் போன்ற பல்வேறு திணைக்களங்களின் அலுவலகங்கள் மாங்குளத்தில் அமைந்துள்ளன. இன்னும் பல திணைக்களங்களுக்கு எதிர்காலத்தில் அலுவலகங்கள் அமைக்க காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பெரியதொரு நீதிமன்ற வளாகம் மாங்குளத்தில் அமைக்கப்பட்டுவருகின்றது.

முதலமைச்சராக பதவியேற்ற காலத்தில் இருந்தே அவர் பெரும்பாலான நேரத்தை யாழ்ப்பாணத்திலேயே செலவழித்தார்;. வன்னிப்பிரதேச மக்களின் தேவைகள் பற்றி அவர் அக்கறை செலுத்தியிருக்கவில்லை. அதனால்தான் வன்னி மாவட்ட விவசாயிகளின் முன்னேற்றம் கருதிக் கொண்டுவரப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியாவின் சிங்களப் பிரதேசத்திற்கு தாரைவார்த்துக் கொடுத்தார் - என்றார். (ம-110)

## பிணைமுறி மோசடியாளர்களுடன் அரசமைக்கவுள்ள ராஜபக்ஷக்கள்

### பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 29
மத்திய வங்கி ஊழல்வாதிகளை சிறையில் அடைக்கப் போவதாகக் கூறிய ராஜபக் ஷவினர் இன்று அவர்களுடன் தேசிய அரசை அமைக்க முயற்சித்து வருகின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை பெற்றுக்கொண்டு அதன் மூலமாக அரசமைப்பை மாற்றியமைத்து ராஜபக்ஷவினர் தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றனர். நாம் செய்ததெல்லாம் தவறெனக்கூறிகொண்டு நாட்டை இராணுவ ஆட்சியின்கீழ் கொண்டு செல்ல நினைப்பது சரியானதா என மக்கள் சிந்திக்க வேண்டும். நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் பல நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தது அதில் முக்கியமான ஒன்றாகும்.

இம்முறை தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றிபெற்றால் அதன் பின்னர் நாடாளுமன்ற ஜனநாயகம் இல்லாது வெறுமனே ஜனாதிபதியின் அதிகாரத்தை மாத்திரம் முன்னிறுத்தப்பட்ட ஆட்சியே இடம்பெறும். ஆனால் அத்தகைய நிலை ஏற்பட வாய்ப்பில்லை.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவிற்கு அரசியல் தெரியாது. அவரால் அரசியல் தீர்மானம் எடுக்க முடியாது. எடுக்கவும் தெரியாது. யுத்தத்தை நடத்தவும் அவருக்கு தெரியாது. அவர் அமெரிக்க பிரஜையாக மட்டுமே இருந்தார். அவரை நம்பி 69 இலட்சம் மக்கள் எவ்வாறு ஆதரித்தனர் என்பதில் எனக்கு இன்னமும் சந்தேகம் உள்ளது. ஒரு தலைவரைத் தெரிவு செய்வதில் எமது மக்கள் சிந்திக்காது தீர்மானம் எடுத்ததை நினைத்து ஆச்சரியப்படுகின்றேன்- என்றார். (ம)




# தேசியப்பாதையில் இருந்து இளைஞர்களை நீக்கச் சதி!

### வேட்பாளர் ஆனல்ட் ஆதங்கம்

கொழும்பு, ஜூலை 29



**எமது இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் குறித்து நாம் அவசியம் சிந்திக்க வேண்டும். இல்லையேல் அரச தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி தமிழ்த் தேசியப் பாதையில் உள்ள வாக்குகளை சிங்களக் கட்சிகளின் முகவர்கள் இலகுவாகத் தட்டிச்செல்ல வாய்ப்புக் கிட்டிவிடும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் இம்மனுவல் ஆனல்ட் தெரிவித்தார்.**

வட்டுக்கோட்டையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய இளைஞர் யுவதிகளின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் அவர்களின் வாழ்வியல் முன்னேற்றம் என்பவை குறித்து நாம் அவசியம் சிந்திக்க வேண்டியுள்ளது. அவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டிய கடமை எம்மீதும் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிடும் சிங்களக் கட்சிகள் மற்றும் அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசியப் பாதையில் தூய்மையான பயணத்தில் இதுவரை பயணித்துவரும் இளைய தலைமுறையினரை தவறான பாதையில் திசைதிருப்ப பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றன.

அதன் ஒரு வழிமுறையே தொழில் வாய்ப்பு இல்லாத இளைஞர் யுவதிகளுக்கு அரச வேலைவாய்ப்பை பெற்றுத் தருவோம், தொழில் முயற்சிகளுக்கு உதவி செய்வோம் என்ற மாயையை காண்பித்து தம் பக்கம் இழுத்துக் கொள்ளும் முயற்சியை ஆரம்பித்திருக்கின்றனர். இது முதலில் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியப் பாதையில் இருந்து இளையோர்களை திசை திருப்ப முடியாது என்பதையும், சலுகைகள் மற்றும் தனிப்பட்ட முன்னேற்றத்திற்காக நாம் எமது இந்தத் தீர்வு முயற்சியுடன் கூடிய தமிழ்த் தேசிய விடியலை நோக்கிய பயணத்திலிருந்து விலக மாட்டோம் என்பதையும் இளம் தலைமுறையினர் தமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடியிட்டு நிரூபிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நிச்சயம் அது நடக்கும்.

இளைஞர் யுவதிகள் குறித்து நாம் அக்கறை இல்லாமல் இருக்கின்றோம் என்று எவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரல் சுட்ட முடியாது. மாகாணசபையை பொறுப்பேற்றவுடன் பல்வேறு நியமனங்கள் வழங்கப்பட்டிக்கின்றன. பட்டதாரி ஆசிரியர் நியமனம், மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்களில் நிலவிவந்த வெற்றிடங்கள், முகாமைத்துவ உதவியாளர் நியமனம், அலுவலக உதவியாளர் நியமனம் மற்றும் நீண்டகாலமாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவந்த தொண்டர் ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட ஏராளமான நியமனங்களை வழங்கியிருக்கின்றோம்.

மாகாண நியமனங்கள் மட்டுமன்றி எம்மாலான பல்வேறு முயற்சிகளை கடந்த காலங்களில் நல்லாட்சி அரசின் ஊடாகவும் முன்னெடுத்திருந்தோம். அவை நடைமுறைக்கு வருகின்ற பொழுது நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் மற்றும் தேர்தல்களினால் அவை நடைமுறைப்படுத்தப் படாதிருப்பதைக் காண முடிகின்றது. தேர்தல் முடிவடைந்த பின்னர் முதல் ஏற்பாடாக வழங்கப்பட்ட பயிற்சித் திட்ட உதவியாளர்களுக்கான நியமனத்தை நடைமுறைப்படுத்த அனைத்து அழுத்தங்களையும் கூட்டமைப்பு வழங்கும். இளைஞர்களின் தொழில் மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்தில் கூட்டமைப்பு ஏராளமான விடயங்களை செய்திருக்கின்றது. இதனை எவரும் மறுக்கவோ மறந்துவிடவோ முடியாது - என்றார். (ம)

## பாதாளக்குழுக்கள் முழுவதும் அழிக்கப்படும்

### பஸில் சொல்கின்றார்



கொழும்பு, ஜூலை 29
போதைப்பொருள் பாவனையை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதோடு சுதந்திரமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள பாதாளஉலகக்குழுவினரையும் முழுமையாக இல்லாதொழிப்பதற்கும் தமது அரசில் துரிதமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொதுமக்கள் முன்னணியின் நிறுவுனர் பஸில் ராஜபக் ஷ தெரிவித்தார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற பெண்கள் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களே பெரும்பலமாவர். அவர்களது பொருளாதார பலம் உயர்வடையும்போது குடும்பத்தின் பொருளாதார நிலைமை பலமடைவதோடு மாத்திரமின்றி அவை முழு நாட்டினதும் பொருளாதாரத்துக்குப் பலமாக அமையும்.

குடும்பப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான பிரதான பொறுப்பு பெண்களையே சாருகின்றது. அதனைத் தெரிந்துகொண்டு மஹிந்த ராஜபக்ச அரசு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 'திவிநெகும' உள்ளிட்ட வேலைத்திட்டங்களை செயற்படுத்தி முழு இலங்கையின் பெண்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தது. அவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் எமது அரசில் முன்னெடுக்கப்படும்.

நாட்டில் போதைப்பொருள் பாவனை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பது ஒவ்வொரு தாய்மாரினதும், மனைவிமாரினதும் பிரார்த்தனையாகவுள்ளது. அவர்களது பிரார்த்தனைக்கேற்ப அதனை முற்றாக ஒழிப்பதோடு, சுதந்திரமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள பாதாள உலகக் குழுவினரையும் முழுமையாக இல்லாதொழிப்பதற்கும் எமது அரசில் துரிதமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)

## தீர்வுக்கான வாய்ப்புக்களை தவறவிட்டு மக்கள்முன் நிற்கிறது கூட்டமைப்பு!

### சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு



மன்னார், ஜூலை 29
தமிழ் மக்களது தீர்வு தவறவிட்ட பின்னர் மக்கள் முன் வாக்குகளுக்காக மீண்டும் சென்றுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற பெரும் நம்பிக்கையில் இருந்தனர். இந்த ஆயுதப் போராட்டத்தை 2009ஆம் ஆண்டு இருபது நாடுகள் இணைந்து மௌனிக்கச் செய்தன. இதற்கப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த இருபது ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு அல்லது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை நடுத்தெருவிலே நிறுத்தியுள்ளது. இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், போரினால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கான ஒரு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும், ஒரு உறுதியான அரசியல் தலைமைத்துவம் தேவை என்ற நோக்குடனும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக எம்மை ஏமாற்றிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் இந்தத் தேர்தலில் புறக்கணித்து, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை மாற்றுத் தலைமையாக ஏற்க வேண்டும். அதற்குரிய ஆணையை வழங்க வேண்டும் - என்றார். (ம)

## மட்டக்களப்புத் தமிழருக்கு அபிவிருத்தியில் தொய்வு!!



மட்டக்களப்பு, ஜூலை 29
மட்டக்களப்பு தமிழ் மக்கள் அபிவிருத்தியில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணித்தலைவியும், வேட்பாளருமான திருமதி ஜெயச்சந்திரிகா ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 ஆண்டுகளாக தேசியக் கட்சியில் தமிழர் ஒருவரை அமைச்சராக உருவாக்க முடியாமல் நாங்கள் தத்தளிக்கின்றோம். தேசியக் கட்சியில் தமிழ் அமைச்சர் ஒருவரை உருவாக்க முடியாமல் தமிழ் மக்கள் அபிவிருத்தியில் பல பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றனர். இதற்குக் காரணம் தமிழ் மக்கள் அரசியல் சார்ந்து தூரநோக்குடன் சிந்திக்காததுதான்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரம் வாக்குகளை வைத்திருக்கும் தமிழ் மக்கள் ஒரு தமிழ் அமைச்சரை உருவாக்க முடியாதமை குறித்துச் சிந்திக்க வேண்டும். எமது மாவட்டத்தில் 90 ஆயிரம் வாக்குகளை வைத்திருக்கும் சகோதர முஸ்லிம் மக்கள், ஏறாவூருக்கு ஒரு அமைச்சர். ஓட்டமாவடிக்கு ஒரு அமைச்சர், காத்தான்குடிக்கு ஒரு அமைச்சர் என மூன்று அமைச்சர்களை கடந்த காலங்களில் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரம் வாக்குகளை கொண்டிருக்கும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் ஓர் அமைச்சரை உருவாக்கப் படாதபாடு படவேண்டியுள்ளது.

மட்டக்களப்பில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் 40 ஆயிரம் குடும்ப ங்கள் நிரந்தர பொருளாதாரம் இன்றி தத்தளிக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியே இவை அனைத்துக்குமான தீர்வாக அமையும் - என்றார். (ம)

# மன்னார் மாவட்ட ஆயர் இல்லம்தான் சைவர்களின் உரிமையை தீர்மானிக்கும்

## மனோ ஐங்கரசர்மா ஆதங்கம்

மன்னார், ஜூலை 29

சைவர்களின் உரிமைகள் தொடர்பில் தீர்மானிக்கும் இடமாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லமே செயற்படுகின்றது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் வேட்பாளர்க ளில் ஒருவரான மனோ ஐங்கரசர்மா.



முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் பெரும்பான்மையாக ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்துக்கு ஒரு சைவத் தமிழருக்கு இடம் ஒதுக்குங்கள் என்று நாங்கள் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தினோம். எனினும் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை.

வடக்கில் சைவ சமயத்தவர்களின் பிரச்சினைகளையும் அவர்களின் உரிமைகளையும் தீர்மானிப்பது மன்னார் ஆயர் இல்லமாகத்தான் காணப்படுகின்றது. எங்களுக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது அதனை நேரடியாக எங்களுடன் அணுகாமல், ஆயர் இல்லத்திற்குச் சென்று அங்கிருந்து முடிவெடுப்பது தான் தமிழ்க் கட்சிகளின் கடந்தகால செயற்பாடுகளாக இருந்து ள்ளன. சைவத் தமிழரொருவருக்கு வேட்பாளர் வாய்ப்பு வழங்குவோம் என்று மாவை சேனாதிராசா உள்ளிட்ட பலரும் தெரிவித்து, பின்னர் ஏமாற்றினார்கள். தமிழர்களின் பெரிய கட்சிகள் அனைத்தும் எங்களை ஏமாற்றியபடியால் தனித்துவமான கட்சி அமைத்துள்ளோம். இன்னமும் அது பதிவு செய்யப்படாத காரணத்தினால் சுயேட்சைக் குழுவாகக் களம் இறங்கியுள்ளோம்.

வடக்கு கிழக்கில் இந்து ஆலயங்களுடன் தொடர்புடைய காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முற்றுமுழுதாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். நாங்கள் அனைத்து சமயங்களையும் மதிக்கின்றோம். எந்த ஒரு சமயத்தையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை ஆனால் சைவர்கள் ஏனைய மதத்தினரால் புறக்கணிக்கப்படுவது கவலையளிக்கின்றது.

மன்னாரில் உள்ள சிலர் இன, மத ரீதியான கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கோருகின்றனர். சைவ சமயம் சார்ந்த அத்தனை உரிமைகளுக்குமாக உருவாக்கப்பட்ட கட்சியே தமிழ்த் தேசிய சைவ மக்கள் கட்சி. சைவமதவர்களுக்கு பிரச்சினை வரும்போது எந்தவொரு தமிழ் அரசியல்வாதியும் குரல்கொடுப்பதில்லை. அதுதான் எங்களின் ஆதங்கம் - என்றார். (ம-19)




# உரிமைகளை வெல்வதற்கு கூட்டமைப்பாலேயே முடியும்

கொழும்பு, ஜூலை 29
உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டம் தொடரவேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான உதயகுமார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டிலே சிங்கள பேரினவாதிகளால் புறக்கணிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகளைப் பெறுவதற்காக 70 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து போராடி வருகின்றோம். எமது போராட்டத்தின் வடிவங்கள்தான் மாறிக்கொண்டு செல்கின்றனவே தவிர அவை மழுங்கடிக்கப்படவில்லை. எமக்கான உரிமைகள் கிடைக்கும்வரை அவை தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.

எமது உரிமைப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கு பல உத்திகளை இந்த சிங்கள பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு தமிழ் மக்கள் இனி தமது உரிமைகளுக்காகப் போராட மாட்டார்கள். இனி அவர்கள் எமது அடிமைகள் என நினைத்த இந்தப் பேரினவாத அரசுக்கு, அப்போது நடைபெற்ற தேர்தலின் மூலமாக தமிழ் மக்கள் இன்னமும் தமது உரிமைகளைப் பெறுவதற்காக போராடுகிறார்கள், அப்போராட்டமானது ஆயுதப் போராட்டமாக அல்லாது அது ஒரு அரசியல் போராட்டமாக மாறி வேறொரு பரிணாமத்தைப் பெற்றுள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து பயணிக்கப் போகின்றது என்ற செய்தி இடியாய் இறங்கியது.

இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை எப்படியாவது குறைத்து இதனூடாக தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதற்கு இந்தத் தேர்தலை ஒரு கருவியாகப் பயன்படுத்த சிங்கள பௌத்த பேரினவாத அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது. இதற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கையின் ஒரு அங்கம் தான் எமக்கு எதிராக களமிறக்கப்பட்டுள்ள கட்சிகளின் பட்டியலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள வேட்பாளர்களும்.

தற்போதைய அரசியல் கள நில வரங்களையும் தமிழர்சார் அரசின் கொள்கைகளையும் ஒவ்வொரு தமிழரும் புரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த கட்சிகள் சிலபல மாயையான தோற்றப்பாடுகளை எமது இளைஞர்கள் மத்தியில் தோற்றுவித்து ஏமாற்றப் பார்க்கின்றன - என்றார். (ம)



# நாம் கோத்தாவின் ஆள் எனின் நீங்கள் மஹிந்தவின் ஆளா?

## போராளிகள் கட்சி விக்கிக்கு சாட்டை



**வவுனியா, ஜூலை 29**

**நாம் கோத்தாபயவின் ஆள்கள் என்றால் வடக்கு மாகாண சபையில் வெற்றிபெற்ற பின்னர் மஹிந்தவுடன் சென்று குடும்ப படம் எடுத்த நீங்கள் மஹிந்தவின் ஆளா? என்று ஜனநாயக பேராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஜனநாயக அரசியலுக்கு வந்த பிறகு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து வருகின்றோம். குறிப்பாக மஹிந்த, கோத்தாபய, ரணில் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரையும் சந்தித்திருக்கின்றோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகப் போராளிகள் கட்சி கோத்தாபயவை ஆதரித்ததாக எந்தவிதமான சாட்சிகள், ஆதாரங்கள் இன்றி தீர்ப்பு வழங்கியுள்ளீர்கள்? என்று விக்னேஸ்வரனிடம் கேட்கின்றேன்.

நாங்கள் ஆதரித்தது ரணில் தலைமையிலான சஜித் பிரேமதாசவை என்று பொதுமக்களுக்குத் தெரியும். இந்தக் கருத்து கடந்த காலத்தில் நீங்கள் வழங்கிய நீதிமன்ற தீர்ப்புக்களையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எனவே அவரது கடந்த கால தீர்ப்புக்கள் தொடர்பாக நீதிச் சேவை கள் ஆணைக்குழு ஆராய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

வடக்கு மாகாண சபைக்கு விக்கினேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் மஹிந்தவிடம் சென்று பதவிஏற்றதுடன், தனது குடும்பத்துடன் சென்று அவருடன் புகைப்படம் எடுத்திருந்தார். அப்படியானால் நீங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆளா? நீங்கள் சந்திப்பது அரசியல் சாணக்கியம், ராஜதந்திரம் என்றால் நாங்கள் சந்தித்தால் 'கோத்தாபயவின் ஆள்' என்று முத்திரை குத்துவீர்களா? இதுதான் உங்களின் நியாயமா?.

நாம் இந்த மண்ணுக்காகப் போராடிய போராளிகள். எந்த தரப்பானாலும் எம்மை அழைத்துப் பேசுவதற்கான தகுதி எமக்குள்ளது.

### நாடாளுமன்றிலும் இதே கதைதானா?

வடக்கு மாகாண ஆட்சியை 5 வருடங்கள் வழங்கினோம். அதற்கு அதிகாரம் இல்லை என்றார். வேலை செய்வதற்கு தன்னைவிடவில்லை என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தார். இவர் நாடாளுமன்றத்துக்குச் சென்றும் இதே கதையைத்தான் சொல்லப்போகின்றார்.

### சிவாஜியையும் விட்டுவைக்கவில்லை

அவருக்கு அருகில் இருந்த ஒவ்வொருவரும் 'குறுக்கால போன போராளிகள்' என ஒரு கதையைக் கூறியிருந்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேச னின் கருத்துக்களுக்கு நாம் பெரியளவில் பதில் அளிக்க விரும்புவதில்லை. சிவாஜிஅண்ணை ஒருநேரம் குழுமாட்டு சந்தியில் நிற்பார். மறுநாள் மன்னார்வீதியில் நிற்பார். எமது குருதி இந்த மண்ணில் சிந்தப்பட்டிருக்கின்றது. விடுதலைப் போரில் ஆயுதம் ஏந்தி நாம் போராடியிருக்கின்றோம்.

தலைவர் பிரபாகரன் மக்களை அரவணைத்து ஆயுதப் போராட்டத்தை வழி நடத்திக்கொண்டு சென்ற போது ரெலோவின் பக்கம் சென்றவரே நீங்கள் (சிவாஜிலிங்கம்). இன்று மாவீரர்களைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் என்ன அருகதையுடன் பேசுகின்றீர்கள்?.

இனிமேல் போராளிகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது கவனத்துடன் செயற்படுங்கள்.

நீங்கள் செய்துகொண்டிருந்த வேலைகளுக்காக உங்கள் அனைவரையும் தலைவர் 2001 ஆம் ஆண்டு அழைத்துவந்து உங்களுக்கு வெள்ளையடிக்கப்பட்டது. இன்று 10 வருடங்கள் சென்ற நிலையில், பன்றி போய் சேத்துக்குள் கிடப்பதுபோல் உங்களதுவிளையாட்டுக்களைக் காட்டுகின்றீர்கள்.

கருணா வரலாற்று நாயகன் என்றும் அவரை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியுமா என்றும் சிவாஜிலிங்கம் ஒரு கருத்தை சொல்லியிருந்தார். கருணா செய்த காட்டிக்கொடுப்புக்கள், துரோகங்களுக்காக தலைமைச் செயலகத்தால் கலைக்கப்பட்டார். ஆனால் இந்தப் போராட்டம் மௌனிக்கப்படும் வரை தமிழ்க் கூட்டமைப்பை நிராகரிக்குமாறு தலைவர் சொல்லவில்லை.

கருணா மூவாயிரம் இராணுவத்தைக் கொல்லவில்லை. கருணா என்ற தனிமனிதனால் தான் இலட்சக்கணக்கான மக்கள் முள்ளி வாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்டார்கள். இந்தப் பழி இன்றும் கருணாவுடன் இருக்கின்றது - என்றார். (து-110)

# வருமானம் குறைந்தோருக்கு சஜித் ஆட்சியில் நிவாரணம்

*கொழும்பு வேட்பாளர் ராம் உறுதி*



கொழும்பு, ஜூலை 29

சஜித் பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு நிவாரணத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதேபோன்று கொழும்பு மாநகரில் தேசிய பாடசாலைகள் இரண்டை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சீ.வை.பி. ராம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிங்கள மொழி மூலமாக கல்வி கற்கும் மாணவர்களுக்கு இருக்கும் பாடசாலை வசதி, தமிழ் மொழி மூலமாக கல்வி கற்கும் மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை. இந்தப் பிரச்சினை அனைத்துப் பிரதேசங்களிலும் இருக்கின்றது. அதனால் தமிழ் மொழி மூலமான இரண்டு தேசிய பாடசாலைகளை கொழும்பு வடக்கு மற்றும் மத்திய கொழும்பில் அமைப்பதற்கு சஜித் பிரேமதாசவுக்கு ஆலோசனை வழங்கி இருக்கின்றேன்.




நிச்சயமாக நான் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றவுடன் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வேன். நான் மாகாணசபை உறுப்பினராக இருந்துகொண்டு கொழும்பு மாவட்டத்துக்கு பல சேவைகளை மேற்கொண்டுள்ளேன். கொழும்பில் இன்னும் சேரிப்புறங்கள் காணப்படுகின்றன. அதனால் எதிர்காலத்தில் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் வீட்டுத்திட்டம் ஒன்றை உருவாக்க இருக்கின்றோம் - என்றார் (ஐ)

# நன்மை தரும் திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை

*சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு*



ராஜபக்ஷர்களிடம் நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தும் எந்த வேலைத்திட்டமும் இல்லை. ஆளும் தரப்பினர் நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை தங்களது திட்டங்களாகக் குறிப்பிட்டு அவற்றைத் திறந்து வைத்து வருகின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சம்பிக்க ரணவக்க, குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது-:

ராஜபக்ஷர்களிடமும் , அவர்களது தரப்பினரிடமும் நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் எந்த வேலைத்திட்டங்களும் இல்லை. அமைச்சர் தினேஷ் குணவர்தன 15 வருடகாலமாக அரசியலில் இருந்தும் எந்தவொரு வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்கவில்லை. ஆனால் கடந்த ஆட்சிக்காலத்தில் நாங்கள் ஆரம்பித்து வைத்த செயற்றிட்டங்களை அவர்களது செயற்றிட்டமாகக் குறிப்பிட்டு தற்போது மக்களின் பாவனைக்காகத் திறந்து வைப்பதுடன் மாத்திரமன்றி அதனை அவர்களது திட்டம் என்றும் தெரிவித்து வருகின்றனர். இது மிகவும் கீழ்த் தரமான செயற்பாடாகும்.

கொழும்புக்குள் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கத்தில் நாங்கள் அறிமுகப்படுத்திய சில திட்டங்களை அம்பாந்தோட்டையில் மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 52 நாள் அரசியல் நெருக்கடியின் போது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைத்திட்டங்களை நிறுத்தி வைத்தனர். அதற்குப் பின்னர் நாங்கள் மீண்டும் அவற்றை நிவர்த்தி செய்ததுடன், தற்போது அவர்களது தலைமையில் அதனைத் திறந்து வைக்க தீர்மானித்துள்ளனர் - என்றார். (ஐ)

# தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு

*பயிற்சி வகுப்பு*

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவு தேர்தல் தொகுதியில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான வாக்குப்பெட்டிகளை விநியோகிக்கும் மற்றும் கையேற்கும் பயிற்சி வகுப்பு முல்லைத்தீவு மாவட்டச் செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் கருத்துரைகளை வழங்கினார். (து)

# பொருளாதாரத்தைக் கவனத்தில் கொள்ளாது பெரும்பான்மை பெறுவதிலே மஹிந்த கவனம்

*சஜித் அணி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 29

உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்து, மக்கள் கடும் கஷ்டத்தில் இருக்கும் தற்போதைய நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ அதனை கவனத்தில் கொள்ளாது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கோரி வருகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் பதுளை மாவட்ட வேட்பாளர் சமிந்த விஜேசிறி குற்றம் சுமத்தியுள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் மூன்று வேளை சாப்பிட முடியாமல் இருக்கின்றனர். ராஜபக் ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மை கேட்கிறார். தேங்காய் எண்ணெய், சீனி, அரிசி, நெத்திலி போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் வான் அளவுக்கு உயர்ந்துள்ளன. மக்களால் வயிற்றுக்கு சாப்பிடமுடியாத நிலைமை.

எனினும் சுகபோகங்களை தருவதாக மஹிந்த கூறினார். நாட்டு மக்கள் சுகபோகங்களுக்கு பதிலாக தற்போது கஷ்டப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையில் இவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கோருகின்றனர் - என்றார். (ஐ)

# தேர்தலில் தோற்றோமானால் நாம் சிந்திய குருதிக்கு அர்த்தமேயில்லை

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



**மன்னார், ஜூலை 29**

**சவால் மிக்க தேர்தலைச் சந்தித்துள்ளோம். இந்தச் சவாலில் நாங்கள் தோற்றுப் போய் விட்டோம் என்றால் தமிழ்ச் சமூகத்துக்காக சிந்திய குருதி விலையற்று, அர்த்தம் இன்றிப் போய் விடும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
மாற்றுக் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் தங்களது வாக்கு உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வழங்க வேண்டும். தமிழ் மக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்றவர்கள் தான் குரல் கொடுப்பார்கள். வேறு யாரும் குரல் கொடுக்க மாட்டார்கள். எதிர்வரும் 5 ஆம் திகதிக்குப் பின் யாரும் வரமாட்டார்கள். 5 ஆம் திகதிக்குப் பின்னர் மக்களுக்கு பிரச்சினை என்றால் குரல் கொடுப்பது நாங்களே. தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்த முன்னாள் போராளிகளை நாங்கள் இணைத்துக் கொண்டிருக்கின்றோம். முன்னாள் கடற்புலிகள் தளபதி அன்புராஜ் உட்பட முக்கிய போராளிகள் எங்களுடன் ஒன்று சேர்ந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக குரல் கொடுத்து வருகின்றனர். சுமந்திரன் போன்றவர்களுக்கு நாங்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் உருவாக்க வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வீட்டுச் சின்னம் வெற்றிபெற வேண்டும். எனவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வெற்றிக்காக அனைவரும் பாடுபட வேண்டும் -என்றார். (ஐ-56)

# வடக்கைச் சீரழித்த விக்கியை மக்கள் தோற்கடிக்கவேண்டும்

## கணேஸ்வரன் வேலாயுதம் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 29
வடக்கு மாகாண சபையைச் சீரழித்த முன்னாள் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனையும், அவர் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையும் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் தோற்கடிக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் 5 வருடங்கள் தமிழர்களின் கைகளில் இருந்த போதிலும் அதனை முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் துஷ்பிரயோகப்படுத்தினார். இதனால் வடக்கின் அபிவிருத்திக்கென மத்திய அரசிடமிருந்து வந்த பெருமளவு நிதிகள் திரும்பிச் சென்றன. ஒட்டு மொத்தத்தில் வடக்கு மாகாண சபையை விக்னேஸ்வரன் சீரழித்தார்.
5 வருடங்கள் முதலமைச்சர் கதிரையில் இருந்த அவர், வடக்கு மக்களுக்கென எந்தவித நன்மைகளையும் செய்யவில்லை. நூற்றுக்கணக்கான தீர்மானங்களைச் சபையில் நிறைவேற்றிய போதிலும் அவற்றில் ஒன்றைக்கூட நடைமுறைப்படுத்த வக்கில்லாதவராக அவர் இருந்தார்.
வடக்கு மாகாண சபையில் பெரும் ஊழல், மோசடிகள் இடம்பெறக் காரணகர்த்தாவாக அவர் இருந்தார். இந்த ஊழல், மோசடியால் அமைச்சரவை மாற்றப்பட்டது. ஆனால், பழைய அமைச்சரவைக்குத் தலைமை தாங்கிய விக்னேஸ்வரன், தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய முன்வரவில்லை. பதவி ஆசையால் புதிய அமைச்சரவைக்கும் தலைமை வகித்தார். அவர் முதலமைச்சர் கதிரையில் இருந்த காலத்தில் புதிய கட்சியை உருவாக்குவதிலேயே குறியாக இருந்தார். அதுதான் முதலமைச்சர் பதவிக் காலம் நிறைவடைந்து மறுநாளே புதிய கட்சியை அவர் ஆரம்பித்தார்.
இன்று அவர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்துகொண்டு யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளராகப் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றார். எனவே, அவரையும், அவர் தலைமையிலான கட்சியையும் யாழ்.மாவட்ட மக்கள் தோற்கடிக்க வேண்டும்- என்றார். (ஒ,5,22)

# ஐ.தே.கவில் இருந்து மேலும் 54 பேர் நீக்கம்

கொழும்பு, ஜூலை 29
பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் மேலும் 54 பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்குவது என அந்தக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.
அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கு உதவவில்லை என்ற குற்றச்சாட்டில் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த 61 பிரதிநிதி களையும் கட்சியில் இருந்து நீக்க அந்தக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கீழ் செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 97 பேரை ஏற்கனவே அந்த கட்சியில் இருந்து நீக்க அதன் செயற்குழு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த நிலையில் மேலும் 115 பேர் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சிங்களத்தின் சிந்தனைப்படி விக்னேஸ்வரன் வந்துள்ளார்

## மாற்றுத்தலைமை குறித்து துளசி பகிர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் க.வி.விக்னேஸ்வரன் இருவரும் ஒரு நிகழ்ச்சி நிரலின்கீழ் இயங்குகின்றார்கள். தலைவர் ஆகுவதற்கு தகுதியும் வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.
துளசி மேலும் தெரிவித்ததாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க வேண்டுமாயின், மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்குவதற்கு சிங்கள தேசம் திட்ட மிட்டுள்ளது. அதன்பிரகாரம் தான், முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியில் வந்து நிற்கின்றார். தொடர்ந்தும் தமிழர்கள் தோல்வியடைய முடியாது. நீங்கள் மிகக் கவனமாக முடிவெடுங்கள். நாங்கள் இந்த மண்ணுக்காக போராடியவர்கள். ஒற்றுமையாக வாக்களியுங்கள்.
தமிழர்களுக்கு யார் தலைவராகுவது என்பதே இங்குள்ள பிரச்சினை. தலைவர் பிரகாரனின் பின்னர், யார் அந்த முடியைச் சூடுவது என்பதே இங்குள்ள பிரச்சினை. ஒரு வருடத்தின் பின்னர், கஜேந்திரகுமார் 'நான் தான் தலைவர்' என்று தனது தலையைக் காட்டிவிட்டார். அதற்குத் தகுதி வேண்டும்.
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அடுத்தாக நீதியரசராக இருந்த ஒரு மனிதரை நம்பிக்கொண்டு வந்தார். அவர் அப்போதுதான் யாழ்ப்பாணத்திற்கு வந்தார். தம்பி பிரபாகரன் என்றே சொல்வார் விக்னேஸ்வரன், தலைவர் பிரபாகரன் என்று சொல்லமாட்டார். கஜேந்திரகுமார் மற்றும் விக்னேஸ்வரன் இருவரும் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றார்கள் - என்றார். (ம-106)



# நாடாளுமன்றத் தேர்தல் – 2020

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டம்

### ஏன் இந்தத் தேர்தலில் நிற்கின்றோம்?



இலங்கை வரலாற்றில் தமிழ் மக்களின் உரித்துள்ள இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழர் இழந்த ஆட்சியுரிமையை நிலைநாட்டும் அரசியல் தீர்வு கடந்த 70 ஆண்டுகளிலும் ஏற்பட வில்லை. இன விடுதலைக்காக 30 ஆண்டுகள் ஜனநாயக, அஹிம்சை வழியிலும், 30 ஆண்டுகள் ஆயுதப் போரிலும் ஈடுபட்டுவிட்டோம். அரசியலில் தீர்வுக்காக அரசுடன் ஒப்பந்தங்களிலும் கையொப்பமிட் டோம்.

1987இல் ஏற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் இலங்கை அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வல்ல என்றோம். அதனைக் கட்டியெழுப்பி அதற்கு அப்பால் சென்று அர்த்த முள்ள அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்திய அரசே அறி வித்தது.



2002இல் சர்வதேச அனுசரணையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. நோர்வே ஒஸ்லோவில் பேச்சுகள் நடைபெற்றன. நோர்வே ஒஸ்லோவில், "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பில் தீர்வொன்றை ஆராய்தல்" எனும் ஒஸ்லோ உடன்பாடு எட்டப்பட் டது. அதனை நாம் பின்பற்றி நிற்கின்றோம்.

2002 ஒஸ்லோ உடன்பாட்டுப் பின்னணியிலும், 2000ஆம் ஆண்டின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாக்கா தீர்வுத் திட்டத்தின் உள்ளடக்கத்திலும், 2015இல் நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றும், 2018இல் இடைக்கால அறிக்கையாகச் சமர்ப்பிக்கப் பட்டது. அந்த முன்னேற்ற அறிக்கை சமஷ்டித் தீர்வுத் திட்டம்தான், அது நாட்டைப் பிளவுபடுத்தப் போகி றது என்று ராஜபக் ஷாக்கள், அவர்களின் பெரமுன வும், இணைந்த கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட் டன. 2018 இறுதியில் நாடாளுமன்றமும் ஜனாதிபதி சிறிசேனவால் கலைக்கப்பட்டது. 2019, 2020 வரவு செலவுத் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட வில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வையொட்டிய மேம்பட்ட நிபுணர் குழு அறிக்கையும் வரவில்லை.



2017, 2018ஆம் ஆண்டுகளின் வரவு செலவுத் திட்டங்களில் முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கு கிழக்கு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளும், அபிவிருத்தித் திட்டங்களும் அதிகள வில் அறிவிக்கப்பட்டிருந்தமையை பத்திரிகைகள் புகழாரம் சூட்டின. பல திடடங்கள் நடைபெற்றன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அந்த ஏனைய நன்மைகளும், நில விடுவிப்புத் தொடர்பான பல முன்னேற்றங்களும் தடைப்பட்டுவிட்டன. இருப்பினும் இவற்றை நிறை வேற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

நாம் அமைச்சரவையில் அங்கம் வகிக்காமையால் எமது வேண்டுகோளுக்கு இணங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எமது எட்டு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு வடக்கு கிழக்குத் தொடர்பான நிதி ஒதுக்கீடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி அந்தக் குழுவில் எடுக்கும் தீர்மானங்களுக்கும், ஏனைய விசேட திட்டங்களுக்கும் வேண்டிய நிதி வரவு செலவுத் திடத்தாலும், விசேட நிதி ஒதுக்கீடுகளாலும் நிறைவேற்றப்பட்டன. "பனை நிதியம்" எனும் இரு ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டம் 5,000 மில்லியன்கள் திட்டம் இணைக்கப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2012இல் 24 உறுப்பு நாடுகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், 2015இன் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகத்துடன் 30/1, 34/1, 40/1 எனும் தீர்மானங்கள் 47 நாடுகளால் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றிருந்தது. வரலாற்றில் இந்தத் தீர்மானங்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தன. எமக்கு இன்றுள்ள சர்வதேச பலமுமாகும். 2011 முதல் இந்தத் தீர்மானங்களில் தொடர்ச்சியாக எமது வகிபாகம் மகத்தானது. அதைப் பாதுகாத்துப் பேணி தமிழின விடுதலையை அடையும்வரை எமது பணி தொடர வேண்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தினாலும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையாலும் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து 2019இலிருந்து வெளியேறிவிட்ட இன்றைய அரசு, இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்பதை எண்ணவில்லை. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, அழிக்கப்பட்டுள்ள நிலைமையில் ஒரு இனப்பிரச்சினை இருப்பதாகவே உச்சரிக்காத அரசு, அதேவேளை பௌத்த சிங்கள பெரும் பான்மைத்துவ ஒற்றையாட்சி அடிப்படைவாத அரசொன்றின் முன்னால் தமிழினத்தின் விடுதலை, இலட்சியம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இந்த நிலை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சவாலாகும் இந்த நிலைமைகளை எம்மின விடுதலைக்கு சாதகமாக்கவும் உள்நாட்டி லும், சர்வதேசத்திலும் எம்தரப்பு வியூகங்கள், அணுகல் முறைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்தியா உள்ளிட்ட உலகம் முழுவதிலும் புதிய வல்லரசு நாடுகளிலும் கூடக் கொரோனா வைரஸ் பரவித் தீவிரமடைந்து உயிர் அழிவுகளும், சமூக பொருளாதாரப் பேரழிவுகளும் உலக ஒழுங்கமைப்பை, வல்லாண் மைத்துவத்தைக் குலைத்துவிட்டுள்ள நிலையில் இலங்கைத் தமிழினத்தின் எதிர்காலம் பற்றி எமக்குள்ள அனுபவம் பொருத்தமான அணுகல் முறைகள் வியூகங்களை வகுக்க வேண்டிய நிலையில் நாம் தமிழர் அரசியலில் இருந்து விலகியிருக்க முடியாது. போரால் அழிந்துபோன எம் தமிழ்த்



தேசத்தையும் சீர்குலைந்து போன எம் தமிழ் மக்களையும் மீளக் கட்டியெ ழுப்ப வேண்டிய பொறுப்பைத் தொடர வேண்டிய பொறுப்பும் எமக் குண்டு.

இலங்கையில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதில் தமிழ் மக்களினதும், தமிழ்த் தேசத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குட்பட்ட, ஜனநாயகத் தத்துவங்களை, கோட்பாடுகளை நிலைநாட்டவும் ஏற்படும் இராணுவ மேலாதிக்க ஆட்சியை முடிவுக்குக கொண்டுவரவும் இலங்கையில் அனைத்து ஜனநாயக சக்திக ளையும் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத் திட்டத்தில் செயலாற்றவும் வேண்டிள்ளது.

அதேவேளை, பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்நாட்டில் தமிழர் கட்சிக ளையும், பொது அமைப்புகளையும், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

தமிழர் அமைப்புக்களையும், நிபுணத்துவம் நிறைந்தவர்களையும் ஒன்றிணைத்து பொது வேலைத் திட்டம் ஒன்றில் இலங்கைத் தமிழர் தேச மக்கள் விடுதலை இலக்கை அடைய அர்ப்பணித்து உழைக்க வேண்டியுள்ளோம்.



குறிப்பாக இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் பாதுகாப்பில் அக்கறையுள்ள இந்தியாவுடன் தமிழர் தேச மக்களின் பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, கலை கலாசாரத் துறைகளுக்குட்பட்ட தமிழின மக்களின் அரசியல் விடுதலை இலக்கை முன்னிறுத்தி உழைப்பதில் நாம் திடசங்கற்பம் கொண்டிருக்க வேண்டும்.

என் பாடசாலைக் காலத்திலிருந்து என்னையும் என் வாழ்நாள் முழுவதையும் தமிழர் தேச விடுதலைக்காகவே அர்ப்பணித்துள்ளேன். 1961 காலப்பகுதியில் இருந்து 1983 வரையில் அரசால் 11 தடவைகள் கைது செ'யப்பட்டுக் குற்றவாளிக் கூண்டிலும், பல தடவைகள் ஏழு ஆண்டுகள் நாலாம் மாடிகளில், சிறைச்சாலைகளில், இராணுவ முகாம்களில் பட்ட சித்திரவதைகள் சொல்லி மாளாது. மூன்று தடவைகள் செத்துவிட்டேன் என்று விடப்பட்டவன். யாழ்ப்பாண மண்ணிலும், ஊர்காவற்றுறை வழியிலுங் கூட. நெஞ்சிலும், உடலிலும் பட்ட காயங்கள் இன்னமும் ஆறவில்லை. என் இளைய சமுதாயத்திடம் என் வரலாற்றை ஒப்படைதது விடுகின்றேன். இவையெல்லாம் பதவிகளுக்காக அல்ல. தமிழினத்தின் விடுதலைக்காக. மாறாத இலட்சியத் தாகத்துடன் இன்னுமிருக்கின்றேன்.



2013இல் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசாதான் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தவேளை, அதை நானே மாற்றியமைத்தேன். தமிழரசு செயற்குழுவில் அதை ஏற்கச் செய்தேன். 2014 தமிழரசு மாநாட்டில் ராஜபக் ஷ அரசுக்கெதிரான போராட்டப் பாதையை எனது தலைமையுரையில் அறிவித்தேன். போராட்டப் பாதையே எனது தெரிவாகவிருந்தது. ஆனால் 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இந்த உண்மைகள் மறைக்கப்படுகின்றன. பதவிகளுக்காய் போராடியவன் நானல்ல. தமிழினத்தின் விடுதலைக்காகவே என் உயிரை அர்ப்பணித்தவன். இளைஞர் சமுதாயத்துக்கு, எதிர்காலத்துக்கு இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.



அன்பான வாக்காளப் பெருமக்களே! எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நானும் ஒரு வேட்பாளர் என்பதை அறிவீர்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டின் வலது பக்கத்தில் புள்ளடியிட்டு, தங்களுக்குரிய மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை எனது இலக்கம் 8க்கும் வாக்களித்து வெற்றி கொள்ளுமாறு கேட்டு நிற்கின்றேன்.

**மாவை சோ.சேனாதிராசா**
**முதன்மை வேட்பாளர்**
**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**
**(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)**

# நந்தவனத்து ஆண்டியின் நாடகங்கள்



■ கதிரவன்

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலத்தில் வடக்கு மாகாணம் அடைந்த நன்மை என்ன என்று கேட்டால்,எதுவுமேயில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கும். ஆனால் அவரது காலத்தில் எமது மாகாணத்துக்கு என்ன இழப்பு என்று கேட்டால், பெரும் பட்டியல் ஒன்றையே கொடுக்க முடியும். அந்தளவுக்கு அவரது ஆட்சியின் சீத்துவம் இருந்தது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக விக்னேஸ்வரன் இருந்த காலத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகத் தண்டிக்கப்பட்ட சிலரை இப்போது தனது கூட்டணியில் வேட்பாளர்களாகக் களமிறக்கியிருப்பது அவரது நேர்மைத்தன்மை மீது மிகப்பெரிய வினாக்குறியை எழுப்பியுள்ளது.அதற்கு மிகச்சிறந்த உதாரணம் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் மாலினி பெனடிக்ட். வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த மாலினி பெனடிக்ட்,பதவியைத் துஷ்பிரயோகம் செய்து மோசடியில் ஈடுபட்டமை விசாரணைகளில் உறுதியானது. இதனையடுத்து அவருக்குத் தண்டனையாக மோசடி செய்த பணத்தை மீளச் செலுத்தும்படியும், உடனடியாக பணியில் இருந்து கட்டாய ஓய்வு பெறும்படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் உதவி மூலம் அப்போதைய முதலமைச்ச ரான விக்னேஸ்வ ரனைச் சந்தித்தார் மாலினி. அங்கு குற்றத்தை ஒப்புக்கொண்ட மாலினி பெனடிக்ட், மோசடி செய்த பணத்தை மீளச்செலுத்திவிட்டு தன்னை ஓய்வில் அனுப்பவேண்டாம் என்று கெஞ்சினார். அதனால் அப்போதைக்கு அவர் கட்டாய ஓய்வில் அனுப்பப்படாமல் தப்பித்து, அண்மையில்தான் ஓய்வுபெற்றார். இப்போது அப்படியான ஒரு மோசடி செய்த பெண் அதிகாரியை தன்னுடைய கூட்டணியில் வேட்பாளராக்கியமை, இத்தனைகாலமும் விக்னேஸ்வரன் நீதியரசராக இருந்த பெருமைகளையெல்லாம் தவிடுபொடியாக்கியுள்ளது. வடக்கு மாகாண முன்னாள் முதல்வரின் ஆட்சிக் காலத்தில் போரின் பின்னரான அபிவிருத்தி என்னும் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் அமெரிக்க டொலரை முதற்கட்டமாக வழங்க யு.என்.டீ.பி தொண்டு நிறுவனம் முன்வந்திருந்தது. அதனை இலங்கை அரசின் ஊடாக வடக்கு மாகாணத்துக்கே வழங்க யு.என்.டீ.பி இணங்கியது. அதற்காக வடக்கு மாகாணத்துக்கென தனியான இணைப்புச் செயலகத்தினையும் அதற்கென ஓர் இணைப்பாளரையும் நியமிக்கும் பொறிமுறையினையும் யு.என்.டீ.பி வகுத்தது. அவ்வாறு நியமிக்கப்படுபவ ரின் சம்பளத்தை யு.என்.டீ.பி அமைப்பே வழங்கும். ஆனால் அவ்வாறு வடக்கில் நியமிக்கப்படும் இணைப்பாளர் தனது விசுவாசியாக இருக்க வேண்டும் என சி.வி.விக்னேஸ்வரன் முதலாவது முட்டுக்கட்டை யைப் போட்டார். அதற்கு இணக்கம் தெரிவித்த யு.என்.டீ.பி , எனினும் மத்திய அமைச்சின் அனுமதி அதற்குப் பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்தது.

அப்போது பிரதமராக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் ரணிலுக்கும் விக்னேஸ்வரனுக்கும் சுமுகமான உறவில்லை. அதைக் கூட தூக்கிவைத்துவிட்டு ரணிலிடம் போய், தனக்கு இணக்கமான ஒருவரின் பெயரைப் பிரேரித்து, அதற்கு ரணிலையும் சம்மதிக்க வைத்தார் விக்னேஸ்வரன். அப்படி விக்னேஸ்வரன் அக்கறையோடு சிபார்சு செய்த நபர் வேறுயாருமல்லர். அவுஸ்திரேலிய பிரஜா உரிமை பெற்ற, விக்னேஸ்வரனின் மருமகன் தான். ஆனால் முரண்நகை என்னவெனில் இதே

> இப்போது வாக்குகளுக்காக தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை அடிக்கடி தம்பி பிரபாகரன், தம்பி பிரபாகரன் என்று உச்சரிக்கின்றார். ஆனால், இதே விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது "எவரும் தமது பிள்ளை பிரபாகரன் போன்று வர வேண்டும் என ஆசைப்படுவது கிடையாது" என்று கூறி தேசியத் தலைவரைக் கொச்சைப் படுத்தியிருந்தார்.

விக்னேஸ்வரன் தான் வடக்கு மாகாண சபை முதலமைச்சராக முடிசூடிய பின்னர் , யாழ்ப்பாணம் வீரசிங்கம் கூட்டுறவு மண்டபத்தில் " அரசியலில் மாமன், மச்சான் , அண்ணன், தம்பி என உறவினர்களுக்கெல்லாம் பதவி கோரக்கூடாது" என ஆவேசமாக உரையாற்றியிருந்தார்.

இவ்வளவு கஷ்டப்பட்டு விக்னேஸ்வரன் தன் மருமகனுக்கு இணைப்பாளர் பதவியைப் பெற்றுக்கொண்டு வந்த போது,அவருக்கு யு.என்.டி.பி ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. விக்னேஸ்வரனின் மருமகன் ஏற்கனவே யு.என்.டி.பியில் பணியாற்றி இடைநிறுத்தப்பட்டவர் எனக் கண்டறியப்பட்டதால் அவருக்கு இணைப்பாளர் பதவியை வழங்க முடியாது என யு.என்.டி.பி நிறுவனம் கைவிரித்துவிட்டது.

எனவே ஊடகங்களில் இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கக்கோரி விளம்பரம் செய்து, அதன் மூலம் தகுதியான நபர் ஒருவரைத் தெரிவு செய்யலாம் என யு.என்.டி.பி முன்வைத்த ஆலோசனையை ஒரேயடியாக மறுதலித்தார் விக்கி. அத்தோடு நில்லாமல், "இந்தப் பணம் எமக்கு வேண்டாம்" என முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் கடிதம் அனுப்பினார். இதனால் யு.என்.டி.பி நிறுவனம் இந்த நிதியில் ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை கிழக்கு மாகாண அபிவிருத்திக்கும், எஞ்சிய ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான நல்லிணக்கச் செயலணியிடமும் வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் வேடிக்கை என்னவெனில் , அந்த நிதியில் வடக்கில் அபிவிருத்திப் பணிகளை ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான நல்லிணக்கச் செயலணி மேற்கொண்டபோது அதில் தம்மையும் பங்காளராக இணைக்குமாறு விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்தமை தான்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிடைத்த இரு பெரும் திட்டங்களுக்கும் ஆப்பு வைத்து, அந்த மாவட்ட மக்களுக்கும் குழி பறிக்க விக்னேஸ்வரன் தவறவில்லை. யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், முல்லைத்தீவு மாவட்டத்திலே பிரமாண்டமான தொழில்நுட்பக் கல்லூரியொன்றை அமைத்து அதற்கான சகல வளங்களையும் வழங்க முன்வந்தது. அந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமையும் இடத்தை மாகாண காணி அமைச்சர் என்றவகையில் விக்கினேஸ்வரனே விடுவிக்க வேண்டும். ஆனால் அதற்குரிய காணி எதனையும் வழங்காது நீண்டகாலமாக வடமாகாண சபை இழுத்தடித்தது. இதனால் காணியை விரைவாக வழங்கக் கோரி, இந்தியத் துணைத் தூதரகம் விக்கியுடன் தொடர்பு கொண்டது.

அந்தக்காலப் பகுதியில் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் பணியாற்றிய மூர்த்தி, முதலமைச்சரின் அப்போதைய செயலாளரும் தற்போதைய மகளிர் விவகாரம் , கூட்டுறவு , கைத்தொழில் அமைச்சின் செயலாளருமான வரதீஸ்வரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆகியோர் நேரில் சென்று தொழில்நுட்பக் கல்லூரிக்கெனத் தேர்வு செய்யப்பட்ட நிலத்தைப் பார்வையிட்டனர். அந்த நிலத்தை மூன்று தரப்பின் இணக்கத்துடன் வழங்க வாய்வழிமூலச் சம்மதமும் வழங்கப்பட்டது. இருப்பினும் இரண்டு ஆண்டுகளாக இந்தியத் துணைத்தூதரகம் முயற்சித்தும் விக்னேஸ்வரன் சம்மதக் கடிதம் வழங்கவே இல்லை.இதனால் வெறுத்துப்போன இந்தியத்துணைத் தூதரகம், 30 கோடி ரூபா பெறுமதியான அந்தத் திட்டத்தினை கைவிட்டது. இது முல்லைத்தீவுக்கு முன்னாள் முதலமைச்சர் வெட்டிய முதலாவது குழி. இராண்டவது குழியை அவர் முள்ளிவாய்க்காலில் வெட்டினார். இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் இரண்டாயிரம் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளோடு கூடிய ஒரு பாடசாலையை அமைத்து , அங்கே கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் பாடசாலையில் இருந்து வெளியேறும் காலப்பகுதிவரை சகல செலவுகளையும் பொறுப்பேற்கும் திட்ட மொன்றும் முன்வைக்கப்பட்டது. அதனை அமைப்பதற்கும் மாகாண சபையிடம் காணி கோரப்பட்டது. பழையபடியே இதற்கான காணியை வழங்கவும் இழுத்தடிப்புச் செய்யப்பட, திட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் கடுப்பாகி, அதனை அப்படியே கண்டி மாவட்டத்துக்கு மாற்றிவிட்டனர். இதன்மூலம், முல்லைத் தீவுக்கு கிடைக்கவேண்டிய ஒரு உதவித்திட்டத்தை வெற்றிகரமாக கண்டிக்கு மாற்றச் செய்த பெருமைக்குச் சொந்தக்காரரானார் விக்னேஸ்வ ரன்.

இப்படியெல்லாம் அபிவிருத்திப் பணிகளை முடக்கிவிட்டு, இப்போது வாக்குகளுக்காக தேசியத் தலைவர் பெயரை அடிக்கடி " தம்பி பிரபாகரன், தம்பி பிரபாகரன்" என்று உச்சரிக்கின்றார். ஆனால், இதே விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது, 2014ஆம் ஆண்டு மே நாள் நிகழ்வு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடந்தபோது " கேட்பார் இன்றிச் செயல்பட்டமையே பிரபாகரனை அழிவுக்கு இட்டுச் சென்றது " என்று ஒரு போடு போட்டிருந்தார். அதேபோன்று பெண் விமானி ஒருவரின் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்விலும் " எவரும் தமது பிள்ளை பிரபாகரன் போன்று வர வேண்டும் என ஆசைப்படுவது கிடையாது" என்று கூறி தேசியத் தலைவரைக் கொச்சைப்படுத்தியிருந்தார். அதையெல்லாம் இந்தத் தேர்தல் காலத்தில் மறந்துவிட்டு, தேசியத் தலைவரின் புகழ் பாடத் தொடங்கியுள்ளார். பதவி கிடைத்தவுடன் பழையபடி, தேசியத்தலைவரை அவர் மறந்துவிடுவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.



# போனஸ் ஆசனமும் எங்களுக்கே!

## மார்தட்டுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளரும் ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்கு அளித்த நேர்காணல் இது.

**கே:** ள்வி : தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனங்கள் சமஷ்டியை முன்னிலைப்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்கு சென்றால் நீங்கள் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவீர்களா?

**ப:** தில்: உண்மைத் தன்மையுடன் செயற்பட முன்வருவார்களாயின் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவோம். அதேவேளை இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கத் தவறிய வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டி முறைமை. பௌத்தத்துக்கு முதன்மை என்பதை மறுத்தல் ஆகிய மூன்று விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு வேலைத்திட்டத்துடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட வருமானால் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

**கே:** உங்கள் அணியின் தலைவரான முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து செயற்பட முடியாது என்று ஆரம்ப காலங்களில் கூறிவந்தார். ஆனால் அவரது கூட்டணியில் உள்ள உங்கள் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப்., மற்றும் சிவாஜிலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் ஆயுதக் குழுக்களில் இருந்து வந்தவர்கள் தானே?

**ப:** முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட முடியாது என்றோ இணைத்துக்கொள்ள மாட்டேன் என்றோ கூறவில்லை.

**கே:** இப்பொழுது உங்களுடைய அணிக்கு கிடைக்கும் வரவேற்பு எப்படி இருக்கின்றது?

**ப:** தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சுயமாகவே எங்களுக்காக நல்ல பிரசாரம் செய்கின்றனர். எங்கள் அமைப்பின் பெயர் பல பக்கங்களாலும் மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றது. அது எங்களுக்கு சாதகமாகவே அமைந்துள்ளது.

**கே:** முதலமைச்சரின் நெருக்கிய சகாவான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உங்கள் அணியில் இருந்து விலகியது ஏன்?

**ப:** கஜேந்திரகுமார் அரசியல் அனுபவம் இல்லாதவர். அவரது தந்தையை பிரபாகரன் மாமனிதர் ஆக்கியதால் அந்த அனுதாபத்தில் நாடாளுமன்றம் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. இந்த கஜேந்திரகுமார் எங்களை எல்லாம் ஓரம் கட்டி விட்டு விக்னேஸ்வரன் ஐயாவை தனியாகப் பிரித்து ஒரு அமைப்பை உருவாக்க முயற்சி செய்தார். ஐயா இன்னும் ஒரு ஐந்து வருடம் தான் இருப்பார். அதன் பின்னர் தானே தலைவராகி விடலாம் என்ற தலைமைத்துவ ஆசையுடன் திட்டமிட்டார். ஆனால் விக்னேஸ்வரன் ஐயா அதற்கு இடம் கொடுக்கவில்லை. இதுதான் உண்மையான காரணம்.

**கே:** உங்கள் அணியின் பிரசாரப் பீரங்கியாக இருந்த அனந்தி சசிதரன் இப்பொழுது சற்று விலகி நிற்கிறார். அணிக்கு எதிரான கருத்துகளையும் வெளிப்படுத்துகின்றார். அது உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதா?

**ப:** எங்குதான் கருத்து முரண்பாடுகள் இல்லை. தேர்தல் முடிந்த பின் நிலைமைகள் சீர்செய்யப்படும்.

**கே:** உங்களுடைய கணிப்பின்படி உங்கள் அணிக்கு எத்தனை ஆசனங்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது?

**ப:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்மக்கள் தேசிய கூட்டணியும் சம நிலையில் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த கால செயற்பாடுகளினால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இதனால் எங்களுக்கு வாக்குவீதம் அதிகரிக்கும் .அதன்மூலம் போனஸ் ஆசனமும் எங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**கே:** நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து வந்தமைக்கான உண்மையான காரணம் என்ன?

**ப:** தட்டிக் கேட்கவும் தவறுகளைத் திருத்தவும், அரவணைத்தும் போகக் கூடிய நேர்மையான முதுகெலும்பு உள்ள ஒரு தலைமைத்துவம் கூட்டமைப்பில் இல்லை. இதையெல்லாம் அனுசரித்து, தலை சொறிந்து கொண்டு போக நான் தயாராக இல்லை.

> **தட்டிக் கேட்கவும் தவறுகளைத் திருத்தவும், அரவணைத்தும் போகக் கூடிய நேர்மையான முதுகெலும்பு உள்ள ஒரு தலைமைத்துவம் கூட்டமைப்பில் இல்லை. இதையெல்லாம் அனுசரித்து, தலை சொறிந்து கொண்டு போக நான் தயாராக இல்லை.**

**கே:** 13ஆவது திருத்தத்தை கொண்டு வந்து மாகாண சபைகளை உருவாக்கிய இந்தியா இப்போது கண்டும் காணாமல் இருக்கின்றது. இதற்கு எந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று நினைக்கின்றீர்கள்?

**ப:** ராஜபக் ஷ அரசு எப்போதும் சீனாவின் பக்கமே இருக்கும். இப்போது கொழும்பில் காலி முகத்திடல் மற்றும் துறைமுகத்தில் பெரும்பகுதியை சீனாவுக்குக் கொடுத்து விட்டது. வடக்கு கிழக்கில் மட்டும்தான் சீனா இன்னும் கால் வைக்கவில்லை. பௌத்தத்துக்கு முதலிடம் என்று கூறிக்கொண்டு இங்கு பௌத்த ஆதிக்கத்தை ஏற்படுத்தி எமது பிரதேசத்திலும் சீனாவுக்கு பங்குகளை கொடுத்து விடலாம். இங்கு சீனாவின் ஆதிக்கம் மேலோங்கினால் அது இந்தியாவுக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த அபாயகரமான நிலைமையை இந்தியாவுக்கு உணர்த்தி அழுத்தம் கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணையவேண்டும். முன்னெடுத்த வழி தவறிவிட்டது என்றால் மாற்று வழியை நாடவேண்டும்.

---

## கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இதுவரை 597 தொற்றாளர்கள்

கொழும்பு, ஜூலை 29

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஆரம்பித்த கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் எண்ணிக்கை 597 ஆக பதிவாகியுள்ளதாக கொவிட்19 எதிர்பாரா பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அவர்களுள் புனர்வாழ்வளிக்கப்படும் கைதிகள் 482 பேர், பணியாளர்கள் 65 பேர், மேலதிக பணியாளர்கள் 5 பேர், அவர்களின் குடும்பம், அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் 44 பேர் மற்றும் வெலிகடை சிறைக்கைதியுடன் தொடர்பில் இருந்த ஒருவர் ஆகியோர் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் நேற்றுக் காலை 6 மணிவரையில் 23 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். சேனபுர புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்த 17 பேர், கட்டாரில் இருந்து வருகைதந்த 5 பேர், சவுதியில் இருந்து வருகைதந்த ஒருவர் ஆகியோரே நேற்று இணங்காணப்பட்ட தொற்றாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கலாநிதி நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டு 21 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அஞ்சலி நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாச்சிமார் கோவிலடி அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

## ஹெரோய்ன் வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 29

ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்றுமுன்தினம் வரணி பகுதியில் வைத்து ஹெரோய்னுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 200 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு 1,040 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

**கொழும்பு, ஜூலை 29**

**சிறுபோகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியின் மூலம் ஆயிரத்து 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்முறை 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் நெல்கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதன்படி, சிறுபோக நெல் அறுவடையில் இம்முறை 2 லட்சம் மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இதற்கு நிதியை அரச வங்கிகள் ஊடாக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்குவதற்கு திறைசேரியினால் தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நாடு முழுவதிலும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலைகள் திறக்கப் பட்டுள்ளன. முன்னைய வருட சிறுபோக மற்றும் பெரும்போகங்களில் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நாட்டரிசி நெல் 38 ரூபாவுக்கும் சம்பா அரிசி நெல் 31 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டன.

இவ் வருடம் ஒரு கிலோ நெல்லுக்காக 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் மொத்த அறுவடையையும் விற்பனை செய்வதற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. (ரி1)

## காலி சிறைக்கைதிக்கு கொரோனாத் தொற்று

*200 கைதிகள், 20 அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை*



கொழும்பு, ஜூலை 29

சேனபுர புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்த காலி சிறைச்சாலையின் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

இதனையடுத்து காலி சிறைச்சாலையில் உள்ள 200 கைதிகளும் 20 அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். காலி சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளவர் ஏற்கனவே வெலிக்கடையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவருடன் தொடர்பைக் கொண்டிருந்தார் என்பது கண்டறியப் பட்டுள்ளது.

இவருக்கு மூன்று தடவைகள் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இறுதிச் சோதனையிலேயே அவர் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது. (ரி1)


## இணையவழி ஆய்வரங்கு இன்று மாலை 4 மணிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுக்கும் 20 நாள் இணையவழி ஆய்வரங்கில் இன்று புதன்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, இலங்கை மரபுத் தமிழ் இலக்கியம் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பிற்கூறப்பட்ட கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்துகொண்டு பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

**Zoom meeting ID : 477 159 8996**
**pass word : wts**





வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 31 மாணவர்களுக்கு முதல்நன்மை எனும் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு ஆலய பங்குத்தந்தை எஸ். இராஜநாயகம் தலைமையில் நடந்த திருப்பலியின்போது இடம்பெற்றது. கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமான, மாணவர்களைத் தயார்படுத்தும் மறைக்கல்வி செயற்பாடுகளை நிறைவு செய்த 31 மாணவர்களுக்கே அருட்சாதனம் வழங்கப்பட்டது. இந்த விஷேட நிகழ்வில் மறை உரையை அருட்பணி சசி நிகழ்த்தியதுடன் அருட்சகோதரிகள், மறை ஆசிரியர்கள், பங்கு மக்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி3)

## மனிதாபிமான செயற்பாடு குறித்து நீதிபதி இளஞ்செழியனுக்கு பாராட்டு

கொழும்பு, ஜூலை 29

நீதிபதி இளஞ்செழியனின் மனிதாபிமான செயற்பாட்டினைப் பாராட்டி தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நீதிபதி இளஞ்செழியனைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரது மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் அதிகாரி ஹேமசந்திர என்பவர் உயிரிழந்தார்.

குறித்த பொலிஸ் அதிகாரி தகனம் செய்யப்பட்ட தினத்தன்று அவரது பிள்ளைகள் இருவருக்கும் தான் தந்தையாக இருப்பேன் என நீதிபதி இளஞ்செழியன் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் நீதிபதி, இம் முறையும் பொலிஸ் அதிகாரியின் நினைவு தினமான கடந்த 23 ஆம் திகதி சிலாபத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பிள்ளைகளின் கல்விக்கு தொடர்ந்தும் உதவிகளை மேற்கொண்டு வரும் நீதிபதி, அவர்களது போக்குவரத்து வசதிக்காக ஸ்கூட்டர் ஒன்றையும் பொலிஸ் அதிகாரியின் மகளுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார்.

நீதிபதியின் மனிதாபிமான செயற்பாடு தொடர்பில் சிங்கள ஊடகங்கள் பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளன. அந்தச் செய்தியில் இப்படியான ஒரு சிறந்த மனி தன் நாட்டுக்கு கிடைத்த அதிஷ்டம் எனக் குறிப்பி டப்பட்டுள்ளது. (ரி2)

## மட்டு. செங்கலடியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, ஜூலை 29

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மட்டக்களப்புச் செங்கலடியில் நேற்றுமுன்தினம் காலை முன்னெடுக்கப் பட இருந்த கவனவீர்ப்புப் போராட் டம் நீதிமன்ற உத்தரவின்பேரில் இடைநிறுத்தப்பட்டது.

யாழப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த உறவுகளால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் ஏறாவூர் நீதிமன்றின் ஊடாக பெறப்பட்ட தடையுத்தரவை அடிப்படையாகக் கொண்டே பொலிஸார் இந்தப் போராட்டத்தை இடைநிறுத்தினர்.

தற்போது தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு தொடர்ச்சியாகக் கொண்டு செல்லும் வகையில் இந்தப் போராட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. போராட்டம் நடத்துவதற்குச் சில தினங்களுக்கு முன்பாகவே சுகாதாரப் பிரிவி னருக்கும் பொலிஸாருக்கும் இது தொடர்பில் அறிவித்திருந்ததாகவும் ஆனால் பொலிஸார் திட்டமிட்டு தமது போராட்டத்தை முடக்கியுள்ளனர் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர். (ரி2)

# வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை உடன் திருப்பி அழைக்க வேண்டும்

*அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்*

கொழும்பு, ஜூலை 29

கொரோனாவினால் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருக்கும் இலங்கையர்களை திருப்பி நாட்டுக்கு அழைக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், சுகாதார அமைச்சர், குடிவரவுக்கட்டுப்பாட்டாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பி டப்பட்டுள்ள னர்.

பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் மத்திய கிழக்கு உட்பட்ட வெளிநாடுகளில் இலங்கைக்கு வருவதற்காக காத்திருக்கின்றனர். இதுவரை கொரோனாவினால் 40 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர். வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அரசமைப்பின்படி தமது தாய்நாட்டுக்கு திரும்ப சட்ட உரிமை உண்டு என்று மனுதாரர் தனது மனுவில சுட்டிக் காட்டியுள்ளார். (ரி1)

# எம்.சி.சி. உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திடாது

### மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்கிறார் அமைச்சர் ரமேஷ் பத்திரன

கொழும்பு, ஜூலை 29

**எம்.சி.சி உடன்படிக்கையில் தற்போதைய அரசாங்கம் எந்த வகையிலும் கையெழுத்திடாது. நாட்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.**



இந்த உடன்படிக்கையை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து இது தொடர்பான கதையை முற்றாக நாட்டிலிருந்து ஒழிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அம்பலாங்கொடை கஹாவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ விசேட குழுவை நியமித்தார். அந்த உடன்படிக்கை நாட்டுக்கு உகந்தது அல்ல என அந்தக் குழு தீர்மானித்துள்ளது. இதனால், எந்த வகையிலும் எமது அரசாங்கம் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாது.

எதிர்க்கட்சி இந்த உடன்படிக்கையை பிடித்துக் கொண்டு குழப்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சித்தாலும் அது நிறைவேறாது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு போராட்ட கோஷங்கள் இல்லாத நிலை யில், இந்த உடன்படிக்கையைப் பிடித்துக் கொண்டு துள்ளுவதில் பயனில்லை-என்றார். (ரி2)

## போலிக் கடவுச்சீட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் 6 பேர் கைது

கொழும்பு, ஜூலை 29

போலிக் கடவுச்சீட்டுக்களுடன் வெளி நாடுகளுக்கு பயணிப்பதற்கு முயற்சி செய்த 3 பெண்கள் உள்ளிட்ட 6 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் கட்டார் வழியாக இத்தாலி நோக்கிப் பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவர்கள் தங்கொடுவ, தும்மல சூரிய, லுணுவில, நாத்தாண்டி மற்றும் பல்லேகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)



பஸ்களில் பொருள்களை விற்பனை செய்வோர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடமாடும் வியாபாரிகளின் சங்கத்தினரால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக பஸ்களுக்குள் பொருள்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதனால் தாம் வருமானப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ரி3)

### ஜோர்தானில் போராட்டத்தில் ஈடுபட்ட

## இலங்கையர்கள் மீது பொலிஸார் தாக்குதல்




கொழும்பு, ஜூலை 29


ஜோர்தானில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள் உள்ளிட்ட இலங்கைத் தொழிலாளர்கள் மீது அந்நாட்டு பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் தங்களைச் சொந்த நாட்டுக்கு மீள அனுப்புமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தாங்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் எனவும், தொடர்ந்து நான்கு மாதங்கள் வரை தமக்குரிய ஊதியம் வழங்கப்படவில்லை எனவும் தொழிலாளர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், தங்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கைத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், தொழிலாளர்களுக்கும், தூதரக அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது ஏற்பட்ட பதற்றமான நிலையை அடுத்து அந்நாட்டு பொலிஸாரால் கண்ணீர்ப்புகை குண்டு வீசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)





## மழை கால விபத்தை தடுக்க இரும்பினாலான பாதுகாப்புக் கட்டமைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 29

மழை காலங்களில் ஏற்படும் விபத்தைத் தடுக்கும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையினால் மட்டக்களப்பு அரசடியிலுள்ள சிறிய பாலத்தில் இரும்பினாலான பாதுகாப்புக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக மாநகர சபையின் அரசடி வட்டார உறுப்பினர் சிவம் பாக்கிய நாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பாலம் பொதுமக்களின் பாவனைக்காக நேற்று கையளிக்கப்பட்டது.

அந்தப் பாலத்தின் மேலாக வெள்ளம் பாயும் போது பலவீனமானவர்கள் வடிகானுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்காகவும், பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரின் சிரமத்தைத் தடுப்பதற்காகவும் இந்தப் பாலத்தின் இரு மருங்கிலும் இரும்புக் கம்பி கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். நீண்ட காலமாகக் காணப்பட்ட இப் பிரச்சினை தற்போதைய மாநகர நிர்வாக ஆட்சிக் காலத்தில் சாத்தியமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாட்டிற்கமையவே இந்த அபிவிருத்திச் செயற்பாடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2-46)

## இலங்கையர்கள் மீது திட்டமற்ற தாக்குதல்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிக்கை

கொழும்பு,ஜூலை 29

ஜோர்தானில் இலங்கைப் பணியாளர்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவில்லை என்று இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கொவிட் 19 பரவல் காரணமாக ஜோர்தானில் சிக்கியுள்ள இலங்கையர்கள் சிலர், அல்பராக் கைத்தொழில் நகரில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றனர். அந்த வேளையில் அவர்கள் மீது கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிடச் சென்றிருந்தனர். எனினும் இதற்கு தீர்வுகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், குழப்பகரமாகச் செயற்பட ஆரம்பித்தனர். அதனால் அந்த நாட்டின் பாதுகாப்பு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எவ்வாறாயினும், தங்களது கட்டளையின் அடிப்படையிலோ அல்லது முன்கூட்டியே திட்டமிட்டோ தாக்குதல் இடம்பெறவில்லை என்று, அங்குள்ள இலங்கைத் தூதரகம் விளக்கமளித்துள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (க)

## கொரோனா நோயாளியிடம் சைக்கிள் வாங்கியவர் சிக்கவில்லை

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற கொரோனா நோயாளி அங்கொடையில் திருடிய சைக்கிளைப பெற்ற நபர் இதுவரையில் பொலிஸ் நிலையத்தில் சரணடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நோயாளி தான் திருடிய சைக்கிள் தொடர்பில் எந்த ஒரு தகவலையும் வெளியிடவில்லை. அந்த சைக்கிளை யாரோ ஒருவர் பொறுப்பேற்றுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரி வித்துள்ளார்.

எனினும் இந்தச் சைக்கிளில் கொரோனா பரவும் அளவுக்கு கிருமி இல்லை என சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சைக்கிள் தொடர்பில் அச்சம் அடையத் தேவை யில்லை. எனினும் சைக்கிள் பெற்றுக் கொண்ட நபரைக் கண்டுபிடிப்பது அவசியம் என அவர் கூறியுள்ளார். இதே வேளை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தற்போது ஓரளவிற்கு குறைவடைந்துள்ளது என்று சுகாதார பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## மாகாணசபையை தொடர்வதா, இல்லையா?

# மக்கள் கருத்தறிய வேண்டும் என்கின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 29

சமஷ்டிக் கோட்பாட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம். ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். மாகாணசபை முறைமையை இல்லாது செய்வதா என்பது தொடர்பில் மக்களிடம் கருத்துகள் பெறப்படவேண்டும். அதேபோல் புதிய அரசமைப்பை இயற்றும்போது எந்தவொரு அரசியல் கட்சிகளுக்கும் அடிபணியமாட்டோம்', என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நாமல் மேலும் கூறியதாவது.

பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவதே எமது அணியின் இலக்காக இருக்கின்றது. அதற்கான ஆணையை மக்கள் வழங்குவார்கள் என நம்புகின்றேன். தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் மற்றும் புதிய அரசமைப்பு ஆகிய விவகாரங்களின்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியமாகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்ட வேளையில் சில அரசியல் கட்சிகள் நிபந்தனைகளை முன்வைத்து பேரம்பேசுவதை காணக்கூடியதாக இருந்தது. குறித்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பின் இறுதி கட்டத்தில்கூட நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. இதற்கு காரணம் என்ன? கடந்த அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவில்லை. சலுகைகள் உட்பட இதர விடயங்களைக்காட்டியே தேவையான ஆதரவை வாடகைக்கு பெற்றிருந்தது.

எமது ஆட்சியில் இதற்கு இடமளிக்க மாட்டோம். புதிய அரசமைப்பை இயற்றும் பணியை முன்னெடுக்கும்போது அரசியல் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிய மாட்டோம். மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசமைப்பொன்றே உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி தேர்தலின்போது வாக்குறுதி வழங்கினோம்.

எனவே, அதற்காக மக்களின் கருத்துகளை பெறுவோம். இடதுசாரி மற்றும் தேசியவாத கட்சிகளின் ஆதரவையும் பெறுவோம். ஒற்றையாட்சியை அடிப்படையாகக்கொண்டே எல்லாம் இடம்பெறும்.

சந்தர்ப்பவாத, அடிப்படைவாத மற்றும் இனவாத அரசியல் கட்சிகளுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம். எனவேதான் எமக்கு மூன்றிலிரண்டு பலத்துடன் பலமான நாடாளுமன்றத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேவேளை, ஒற்றையாட்சி என்பதில் எமது அரசு உறுதியாக இருக்கின்றது. சமஷ்டிக்கு நாம் எதிர்ப்பு.

மாகாணசபை முறைமையை தக்கவைப்பதா அல்லது மாவட்ட முறைமைக்கு செல்வதா என்பது தொடர்பில் மக்கள் ஊடாக கருத்தறியவேண்டும். பரந்துபட்ட கலந்துரையாடல் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பு இயற்றப்படவேண்டும். 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதுபோல அவசர, அவசரமாக செய்யமுடியாது, என்றார். (ஒ,5,44)

## தாக்குதலுக்குள்ளான முதியவர் மருத்துவமனையில் அனுமதி

சாவகச்சேரி, ஜூலை 29

தாக்குதலுக்கு உள்ளான முதியவர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி கிழக்கில் இடம்பெற்றுள்ளது. மேலும், அவரது மனைவியும் மகளும் சேர்ந்து அவரைத் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயது குடும்பத்தவர் ஒருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3-9)

# மஞ்சள் இறக்குமதிக்கு அனுமதி இல்லை

### ஜனாதிபதி திட்டவட்டம் என்கிறார் பந்துல

கொழும்பு, ஜூலை 29

எந்தவொரு சூழ்நிலையிலும் மஞ்சள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தெரிவித்துள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், அதற்குப் பதிலாக உள்ளூர் மஞ்சள் செய்கையாளர்களுக்கான உற்பத்தி மற்றும் சந்தைவாய்ப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு தற்போது உள்ளூர் நுகர்வுக்கு சுமார் 4 லட்சம் கிலோ மஞ்சள் தேவைப்படுகிறது. அத்துடன் உள்ளூர் சந்தையில் மஞ்சள் பற்றாக்குறை காரணமாக அதன் விலை அதிகரித்துள்ளது.

மியன்மார் மற்றும் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மஞ்சளின் இறக்குமதி, தற்போது கொரோனா பரவல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)





## ஜனாதிபதி கோத்தாவை நெகிழ வைத்த சம்பவம்

கொழும்பு, ஜூலை 29

சிறுவர்கள் இருவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவை நெகிழ வைத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி, தேர்தல் பிரசாரத்துக்கு சென்றிருந்த போது ஜனாதிபதியை ஓவியமாக வரைந்த சிறுவன் அதனை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளான். அதனை மகிழ்ச்சியுடன் அவர் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, ரிதிகம பிரதே சத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பிரசாரக் கூட்டத்தில் இஸ்லாமிய சிறுமி ஒருவர் ஜனாதிபதியை ஓவியமாக வரைந்து வழங்கியிருந்தார். ஜனாதிபதி இவர்கள் இருவருடனும் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார். (ரி2)

## சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்த விசேட முறைமை

கொழும்பு, ஜூலை 29

சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சு விசேட முறைமையொன்றை உருவாக்கியுள்ளது. இது தொடர்பிலான கடுமையான சட்ட நட வடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்துள்ளது. இதேவேளை கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 47,177 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## கருவிலேயே குழந்தைகளுக்கு சரியான வழிகாட்ட வேண்டும்

### கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 29

குழந்தைகள் கருப்பையில் இருக்கும்போதே சரியான பாதை கற்பிக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார். கந்தளாய் அக்போ சமூக சேவை அறக்கட்டளையின் 500 கர்ப்பவதிகளுக்கான பொதிகள் வழங்கிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து நல்லொழுக்கமுள்ள பிள்ளையாக வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரின் பொறுப்பாகும். இல்லையென்றால், சமூகம் பெற்றோரை குறை சொல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி1)





## லயன்ஸ் கழகத்தினரால் தையல் இயந்திரங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் ஆறு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கழகத் தலைவர் லயன் து.இளங்குமரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் இடம்பெற்றன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் ராஜ்குமார் உதவிப் பொருள்களை வழங்கினார். (ரி3-9)

## இராஜாங்கனையில் தபால்மூல வாக்களிப்பு இன்று

இராஜாங்கனை, ஜூலை 29

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளது. இதற்கமைய, இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையான காலப்பகுதியில் குறித்த தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# வடமேல் மாகாண அபிவிருத்தித் திட்டம்

### ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, ஜூலை 29

வடமேல் மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஐந்து வருடத் திட்டம், வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் வடமேல் மாகாண பிரதான செயலாளர் பி.வி.எம். சிறிசேன ஆகியோரினால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது, கொவிட் 19 நிதியத்துக்காகச் சேகரிக்கப்பட்ட வடமேல் மாகாண ஊழியர்களின் ஒருநாள் சம்பளமான 22.6 மில்லியயன் ரூபாய் பெறுமதியான காசோலையும் ஆளுநரால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



## இன்றைய நாள்

**மேடம்:** பெண்கள் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். சிலரிடம் எதிர்பார்த்த உதவி நியாயமான காரணங்களால் உங்களுக்கு கிடைக்காமல் போகக் கூடும்.

**இடபம்:** பொறுப்பாக நடந்து கொள் வீர்கள். வேலை தேடுவோருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். நீண்ட நாளாக தேடிய பொருள் கைக்கு கிடைக்கும். திட்டமிட்ட பணிகளில் சில குறுக்கீடுகள் வரலாம்.

**மிதுனம்:** வெளிநாட்டிலிருந்து மனதிற்கு இதமான செய்திகள் வரும். நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த நபரைச் சந்திப்பீர்கள். நெருங்கிய நண்பர்களால் பயனடைவீர்கள்.

**கடகம்:** உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். புதிய சிந்தனைகள் தோன்றும். பிள்ளைகள் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்கள் பணத்தின் அருமையை உணர்ந்து சேமிக்க தொடங்குவர்.

**சிம்மம்:** கொடுத்த வேலையை நல்ல படியாக செய்து முடிப்பீர்கள். தந்தை வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். சமூக நிகழ்வுகளால் புதிய அனுபவத்தை பெறுவீர்கள்.

**கன்னி:** பூர்வ சொத்து சம்மந்தப்பட்ட வகையில் ஆதாயம் உண்டு. உடன் பிறந்தவர்களின் மூலம் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை பெறலாம்.

**துலாம்:** மேலதிகாரிகள் உங்களின் நீண்ட நாளைய வேண்டுகோளை ஏற்பார்கள். கலைஞர்கள் முயற்சியில் வெற்றி பெறுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் கணிசமான லாபம் இருக்கும். அக்கம் பக்கத்தினரிடம் குடும்ப விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**தனுசு:** வியாபாரத்தில் உங்களின் புதிய யுக்தி லாபத்தை பெருக்க உதவும். பெண்கள் எதிலும் கவனமாக இருப்பது நல்லது. கலைத் துறையினர் தடைகளை சமாளிப்பர்.

**மகரம்:** உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப் படுவீர்கள். எதிலும் விழிப்புடன் செயல்பட வேண்டும். உடன்பிறந்தவருக்கு வேலை கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போனாலும் நல்லபடியாக முடியும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை.

**மீனம்:** திட்டமிட்ட முயற்சிகள் வெற்றி பெற காலதாமதம் ஏற்படலாம். உறவினர்களுடன் சிறு சிறு உரசல்கள் வந்து நீங்கும். வாடிக்கையாளர்களின் ஆதரவு குறையும்.

### திருகோணமலை மாவட்டத்தில்

## சிறுபோக வேளாண்மை நீரில் மூழ்கிப் பாதிப்பு!

திருகோணமலை, ஜூலை 29

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பகுதியில், கரையான்பிலவு மற்றும் ஐயாத்தை போன்ற விவசாய சம்மேளனத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்ட வேளாண்மை, அறுவடைக்குத் தயாரான நிலையில், கடும் காற்றினாலும் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாகவும் 1200 க்கும் மேற்பட்ட ஏக்கர் நீரில் முழ்கிய நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணி தொடக்கம் இன்று காலை வரை கடும் காற்றுடன் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இதனால் கரையான் பிலவு விவசாய சம்மேளனத்தின் கீழ் 650 ஏக்கரும், ஐயாத்தை விவசாய சம்மேளனத்தின் கீழ் 450 ஏக்கரும் நீரில் மூழ்கிப் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்ட விவசாய நிலங்களை விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டுள்ளதுடன் இன்று காலையும் ஏனைய பகுதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர் எனவும் கரையான் பிலவு விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார். (ரி2)

## 10 தொழிலாளர் குடியிருப்புகள் தீக்கிரை

நுவரெலியா, ஜூலை 29

லிந்துலை ஆகரகந்தை தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 தொழிலாளர் குடியிருப்புகள் நேற்று காலை 11 மணியளவில் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

அதுமட்டுமன்றி குறித்த தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 10 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனையடுத்து அயலவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 1 மணித்தியாலயத்துக்கு பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் தற்காலிகமாக தோட்ட கலாச்சார மண்டபத்திலும், தோட்ட முன்பள்ளி பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அக்கரப்பத்தனை பிரதேசசபை ஆகியன வழங்கி வருகின்றன. இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் லிந்துலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ரி2)

# தேர்தல் வன்முறை தொடர்பில் 5,236 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் வன்முறை தொடர்பில் 5,236 முறைப்பாடுகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. இதில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறுவதுடன் தொடர்புடையவை என்று அத்திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.


தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 1,011 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 4,225 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# நாடாளுமன்றத் தேர்தல் 2020

## யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## 2020.08.05

X



மாவை.சோ.சேனாதிராசா
முதன்மை வேட்பாளர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

தமிழ்த் தேசமக்கள் விடுதலைக்காக அர்ப்பணிப்போம்

X 8



ம.ஆபிரகம் சுமந்திரன்

1 X



இம்மானுவேல் ஆனல்ட் B.A(Phil) Hons

2 X



திருமதி.சசிகலா இரவிராஜ B.S.c
முன்னாள் விஞ்ஞான ஆசிரியை
Bishop's College,Colombo

3 X




ஈசுவரபாதம் சரவணபவன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத் தலைவர்

4 X



குருசுவாமி சுரேந்திரன் MBA
முகாமைத்துவ மற்றும் நிதியியல் ஆலோசகர்
முகாமையாளர் இலங்கை வர்த்தக வங்கி

5 X



தர்மலிங்கம்
சித்தார்த்தன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

6 X



பாலச்சந்திரன் கஜதீபன்
முன்னாள் மாகாண சபை
உறுப்பினர்

7 X



வேதநாயகம் தபேந்திரன்
B.Com, PGd,PDS,M.A
முன்னாள் சமுகசேவைகள் உத்தியோகத்தர்

9 X



சிவஞானம் சிறீதரன்
B.A,M.Ed,NIE,Sp.Tr.Ag,PGDE,PEDEM
ஓய்வு பெற்ற அதிபர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

10 X

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

# மூடப்பட்ட பாடசாலையொன்றை மறுவாழ்வு மையமாக மாற்றலாம்

## ஆளுநர் சார்ள்ஸ் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 29

தற்காலிகமாக மூடப்பட்ட நிலையிலுள்ள பாடசாலை ஒன்றினை அடையாளம் கண்டு அதனை போதைப்பொருள் மறுவாழ்வு மையமாக் மாற்றலாம் என்று வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

வடமாகாண மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று ஆளுநர். பீ.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் ஆளுநரின் செயலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலின்போது, வட மாகாணத்தில் இடம்பெற்றுவரும் போதைப் பழக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாக போதைப் பொருள் மறுவாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான திட்டமிடல்கள் சம்மந்தப்பட்ட விடயங்களையும் அதிகாரிகள் எடுத்துரைத்தனர். அதற்குத் தீர்வாகவே ஆளுநர் மேற்படி ஆலோசனை வழங்கியுள்ளார்.

போதைப்பொருள் வைத்திருப்பவர்களைக் கைது செய்தால் அவர்களை மறுவாழ்வு மையத்திடம் கையளிப்பது தொடர்பிலுள்ள சட்ட ரீதியான பிரச்சினைகளைப் பற்றிய அறிக்கையை தாமதமின்றி தயாரித்து கையளிக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். (ரி1)

# வாக்காளர் அட்டை விநியோகம் இன்று பூர்த்தி

கொழும்பு, ஜூலை 29

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் இன்றைய தினத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்டு விடும் என்று எதிர்பார்ப்பதாக, தபால் திணைக்களத்தின் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம், இதுவரையில் சுமார் 95 வீதம் பூர்த்தியடைந்துள்ளன என்றும் இன்றைய தினத்திற்கு பின்னர், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் இருப்பார்களாயின், அவர்கள் தமது பிரதேசத்திலுள்ள தபால் நிலையத்திற்குச் சென்று வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ரி1)




## மலையகத்தில் நல்லாட்சியிலேயே பல அபிவிருத்தித் திட்டங்கள்

### கூறுகின்றார் இராதாகிருஷ்ணன்



கொழும்பு, ஜூலை 29

நல்லாட்சியிலேயே மலையகத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அதற்கு இடமளிக்கப்படவில்லை.

எனவே, நல்லாட்சியில் எதுவும் நடைபெறவில்லை எனக்கூறப்படுவது பொய்யாகும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த அரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் இருந்த செல்வாக்கு தற்போது இல்லை. 60 வீதத்தால் அது குறைவடைந்திருப்பதை உணரமுடிகின்றது. இவ்வாறு அரசாங்கத்தின் செல்வாக்கு குறைவடைந்திருப்பதால் பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும். எனவே, மக்கள் சிந்தித்து வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும். குடும்ப ஆட்சிக்கு வாக்களிப்பதா அல்லது ஜனநாயகத் தலைவனுக்கு வாக்களித்து, ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதா என்பது தொடர்பில் மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

எங்களுடைய ஆட்சிக்காலத்தில்தான் ஏழு பேர்ச்சஸ் காணியுடன் மக்களுக்கு தனி வீடுகள் வழங்கப்பட்டன. கல்வித்துறை கட்டியெழுப்பப்பட்டது. பாடசாலைகள் மேம்படுத்தப்பட்டன. இவை கடந்த ஆட்சியில் நடக்கவில்லை என்பதே மெய். நல்லாட்சியில் நடக்கவில்லை எனக் கூறப்படுவது பொய்-என்றார். (ஐ)

## வலி. கிழக்கில் இரு சபைகள் அமைவதற்கு வழிசமைப்பேன்

### கூட்டமைப்பு வேட்பாளர் சுரேந்திரன் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 29


எனது வெற்றியின் பின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையைத் தரமுயர்த்தி இரண்டாக வகுப்பதற்கு உரிய நடவடிக்கையை முன்னெடுப்பேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெற்ற போரின் நிமித்தமாகவும் அரச பாரபட்சங்களாலும் எமது பகுதிகளில் பல புதிய உள்ளூராட்சி மன்றங்கள் அமைய வேண்டிய அடிப்படைகள் காணப்பட்டபோதும் அதற்கான நடவடிக்கைகள் இல்லாமல் உள்ளன. யாழில் தற்போது வேறு பல பிரதேச சபைகள் நகர சபைகளாக மாற்றமடைவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் எமது கோப்பாய் தொகுதிக்கென நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்மை காரணமாக மத்திய அரசில் இருந்து மேற்கொள்ளப்படவேண்டிய கருமங்களில் முன்னேற்றங்கள் இல்லாமல் உள்ளன. பல கருமங்களில் இவ்வாறான சிக்கல்கள் காணப்படுகின்றன. எமது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைப் பரப்பு இரண்டாக வகுக்கப்பட்டு ஒரு நகர சபையும் பிரதேச சபையும் அமையுமாக இருந்தால் எமது பிரதேசத்திற்கான ஒதுக்கீடுகளை நாம் அதிகரிக்க முடியும். மக்களுக்கான சேவைகளை விஸ்தரிக்க முடியும். இலகுவானதும் மேலும் திறமையுடையதுமான நிர்வாகக் கட்டமைப்பினை வலுப்படுத்திக்கொள்ள முடியும். எனவே இந்தப் பகிரங்கக் கூட்டத்தில் நான் நீர்வேலியைச் சேர்ந்தவன் என்ற வகையில் வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் சபையை இரண்டாக வகுத்து அதனைத் தரமுயர்த்தும் உத்தரவாதத்தையும் உங்களுக்கு வழங்குகின்றேன் என்றார். (ஐ)

# தேர்தல் பணிக்கான கடிதங்கள் கிடைக்காதோர் தகவல் தரவும்!

### மஹிந்த தேசப்பிரிய அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

தேர்தல் பணிக்கான கடிதங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத ஆசிரியர்கள் தேர்தல் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இதேவேளை தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றி வேறு எதற்காகவும் தேர்தல் கடமைகளை புறக்கணிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவ்வாறு புறக்கணிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;




தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஆசிரியர்களாவர்.

இவர்களுக்கான தேர்தல் பணிக்கான கடிதம் வழமையாக பாடசாலைகளுக்கே அனுப்பப்படும். ஆனால் தற்போது பாடசாலை விடுமுறை என்பதால் வீடுகளுக்கும் பாடசாலைகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இவ்வாறு அனுப்புகின்ற கடிதங்களில் பாடசாலைக்கு கிடைக்கும் கடிதங்களை உரிய ஆசிரியர்களிடம் கையளிக்க வேண்டிய பொறுப்பு அதிபர்களுடையதாகும்.

தபால்மூலம் வாக்களிக்கும் அனைத்து அரச ஊழியர்களில் தேர்தல்கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இம் மாதம் 31 ஆம் திகதி வரை அதற்கான கடிதம் கிடைக்கப்பெறவில்லையாயின் அது தொடர்பில் உடனடியாக உரிய மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் விசாரிக்க வேண்டியது கட்டாயமாகும்.

அவ்வாறில்லை என்றால் தேர்தல் கடமைகளைப் புறக்கணிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (ஐ)

## புதிய நாடாளுமன்றில் தகவல்கள் உடனேயே!

### மன்றின் செயலாளர் நாயகம் கூறுகிறார்



கொழும்பு,ஜூலை 29

பொதுத்தேர்தலின் பின்னர் அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத்தின் சகல தகவல்களையும், அமர்வு தினத்தன்றே பொதுமக்களுக்கு வழங்குவதற்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்படும் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற குழுக்களின் செயற்பாடுகளை உடனடியாகவே பொதுமக்களுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட 'நாடாளுமன்ற வித்தி' செய்தி மடல் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாடாளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பொதுமக்களிடம் கொண்டுசேர்ப்பதற்கு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், நடைமுறைகள் பற்றிய விவரங்கள் பலவற்றைத் தாங்கியதாக நாடாளுமன்றத்தின் முதலாவது செய்திமடல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கடந்த ஐந்து வருடங்களில் சிறந்த நிறுவனங்களுக்கான இணையத்தளத்துக்கான விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது- என்றார். (க)

## சமத்துவமிக்க நேர்மையான அரசியலில் பயணிக்கிறோம்

### காதர் மஸ்தான் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

ஊழலற்ற அனைத்து மக்களும் பயன்பெறத்தக்க சமத்துவ அரசியல் வழிமுறையிலேயே நாம் தொடர்ந்தும் பயணிக்கிறோம்.தம்மைத் தெரிவுசெய்த மக்களைக் கைவிட்டு விட்டு உல்லாசம் அனுபவித்த அரசியல்வாதிகளைப் போலில்லாமல் மக்களைத் தேடிச்சென்று அவர்களுக்குத் தேவையான உயரிய சேவைகளை நாம் ஆற்றியிருக்கிறோம். இவ்வாறு வன்னி மாவட்டத்தில் பொது ஜன பெரமுன கட்சியில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரும், முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட எமது வன்னி மாவட்டத்தையும், வன்னி மாவட்ட மக்களுடைய பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஒவ்வொரு ஊராகச் சென்று அறிந்து வைத்துள்ளோம்.

மக்கள் வாழ்வாதாரத்துக்காக படும் துயரங்களை மனப்பூர்வமாக உணர்ந்திருக்கிறோம்.

அவர்களது இன்னல்களைப் போக்குவதற்கு உரிய வேலைத் திட்டங்களை நாம் தயாரித்திருக்கிறோம்.

அதனை பொருளாதார ரீதியாக அடித்தட்டில் வாழுகின்ற மக்களிலிருந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி எமது வன்னிப் பிராந்தியத்தை நாம் கட்டியெழுப்புவோம்.

எதிர்வரும் எமது புதிய அரசாங்கத்தில் எனக்கு கிடைக்கும் அமைச்சுப் பதவியின் அதிகாரத்தை வன்னி மாவட்டத்தின் முழுமையான அபிவிருத்திக்கு பயன்படுத்தி எமது மக்களுடைய வாழ்வாதாரம்,தொழில் வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து அபிவிருத்திக்காவும் பயன்படுத்துவேன்-என்றார். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் சுமன்ராஜ்
அவர்களின் அன்புத் தந்தை

### அலோசியஸ் மனோகரன்

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்.

## வேலை ஆள்கள் தேவை

K.K.S. வீதி ஆனைக்குட்டி மதவடி
தெல்லிப்பழையில் அமைந்துள்ள
சாயி நோயாளர் பராமரிப்புச் சேவையின் கீழ்
நோயாளரைப் பராமரிக்கக் கூடிய பராமரிப்புப்
பணியாளர்கள் தேவை.

**077 358 8069**

(cs.33249) (13.17)

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### க. சண்முகலிங்கம்

தோற்றம் 21.06.1948 — மறைவு 22.07.2018

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
நீளும் இரவில் உங்களை
நினைக்கும் போதெல்லாம்
விழிகள் ஓரம் - உங்கள்
நினைவுத் துளிகள்
கண்ணீராய்க் கரைகின்றன
உடல் வருத்தம் பாராது
ஊரிற்காகவும், குடும்பத்திற்காகவும்
உழைத்த உத்தமரே - கலைகளின்
காவியத் தலைவரென போற்றப்பட்டவரே
உயரத்தில் நீங்கள் இருந்தாலும்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகளுடன்
நாங்கள்......

உங்கள் நினைவுகளுடன் :-
மனைவி, பிள்ளைகள்
34, கனகரட்ணம் வீதி, அரியாலை.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### மங்கையர்க்கரசி ராஜாராம்

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம் - மகரகம, தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் - வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் )

மலர்வு 21.01.1943 — உதிர்வு 05.08.2014

திதி:- தசமி (29.07.2020)

அன்பு, நேர்மை, இறைபக்தி, கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் ஆறாம் ஆண்டு நினைவு தினமாகிய இன்று (29.07.2020) புதன்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்....

இ.ராஜாராம்
(பாசமிகு கணவர் - சமாதான நீதிவான்)
அன்புத் தம்பிமார், அன்புத் தங்கை,
மைத்துனி, மைத்துனர் மற்றும்
மருமக்கள்.

இல.06, கற்குழி,
முதலாம் ஒழுங்கை,
தபாலக வீதி ஊடாக சாவகச்சேரி.
021 227 1493, 077 723 8528

(cs.33130) (13.17)

# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி கனகசபை



திருநெல்வேலி பனிக்கர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கனகசபை 26.07.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தியர் குமாரவேல் - காவேரிதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்காளன பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் (ஓவசியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வசந்தகுமாரி - இராசகுமாரன் (UK) மற்றும் சந்திரகுமாரி - மகேஸ்வரன் (Germany), சாந்தகுமாரி (ஓய்வுநிலை உப அதிபர் - யா/ பெரியபுலம் ம.வி)- இராசேந்திரம் (கொக்குவில்), சிவகுமார் - யோகேஸ்வரி (France), காலஞ்சென்ற சத்தியகுமாரி மற்றும் விஜயகுமாரி - மதுரநாயகம் (France), உத்தமகுமாரி - ஶ்ரீகாந்தன் (Australia), செல்வகுமார் (Canada), ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தகுமார் - கிள்யா, காலஞ்சென்ற மயூரதன் மற்றும் றமேஸ் - விக்ரோறியா, ஜதீஸ் - மரேசா, விதுஷா, யூலியன் றொஷாந், செலின் றொஷானி - பியெர், யஸ்மின், டியானி, நிருஷா, வினுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரூபி, றொகான், ஒஸ்கா, லின், போலினின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சிவபாக்கியம், சண்முகநாதன், இராமலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக South Chapel, Rookwood Cemetery, Lidcombe, Australia வில் வைக்கப்பட்டு இன்று (29.07.2020) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 11.00 மணியளவில் South Chapel, Rookwood Cemetery, Lidcombe NSW 2141, Australia வில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 02.08.1922 — மறைவு 26.07.2020

பலாலி வீதி,
68/6, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
சாந்தகுமாரி இராசேந்திரம்
(021 221 9018 - இலங்கை),
உத்தமகுமாரி ஶ்ரீகாந்தன்
(0061) 297 020 434 - ஆஸ்திரேலியா)

## Global Access Employment

குடும்பமாக Canada [கனடா] செல்வதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம் குடும்பத்தில் ஒருவர் கணவர் / மனைவி தகுதியுடையவராக இருந்தால் போதும்.

**தேவையான தகைமைகள்**

- க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல்
- குறைந்தது ஒருவருட பல்கலைக்கழக படிப்பை பூர்த்திய டைந்திருத்தல்
- தாதியர்/ குழந்தைகள் பராமரிப்பு/ முதியோர் பராமரிப்பு துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- ஆங்கில அறிவு IELTS General Level 5.0

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் 021 315 0148, 076 480 4482 தொடர்புகொள்ளவும்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ் மாவட்டத்தில் உள்ள
அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அங்கர் பாதுகாப்பு சேவை ஊடாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமை புரிய விரும்புபவர்கள்
பின்வரும் நாள்களில் நேர்முக தேர்விலே கலந்து கொண்டு வேலையினை பெற்று கொள்ள முடியும். வயது எல்லை 20-60

தேவையான ஆவணங்கள்

1. அடையாள அட்டை பிரதி
2. பிறப்பு சான்றிதழ் பிரதி
3. கிராம சேவகரின் வதிவிட சான்றிதழ்
4. வங்கி புத்தக பிரதி

நேர்முகத் தேர்வு இடம் பெறும் இடம்
இல. 60 மருதடி வீதி, நல்லூர் தெற்க, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலம்
29.30.31 ஆனி மாதம் 2020

நேரம்
காலை 8.30 - மாலை 4.30 வரை

(CS 712) (13.17)
077-5396350 / 077-2392850
அங்கர் பாதுகாப்பு சேவை, யாழ்ப்பாணம்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 11 . 05 . 1955
மறைவு 08 . 08 . 2011

திருமதி சகுந்தலாதேவி பலராமன்
திதி: தசமி.29.07.2020

எங்களை விட்டு தாங்கள் மறைந்து சென்ற போதிலும் எங்கள் மனங்களில் தாங்கள் என்றென்றும் நிறைந்து நிலையாக வாழ்ந்து வருகின்றீர்கள் தங்களின் அன்பும் ஆதரவான செயல்களும் ஆண்டுகள் பல சென்ற போதிலும் அழியாது இருக்கும்

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமகன்கள், பேர்த்தி மற்றும் பேரன்கள்.
(J.12611) (13.17)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 02 . 1947
மறைவு 02 . 08 . 2017

அமரர் சுப்பிரமணியம் யோகநாதன்
(ஓய்வு பெற்ற களஞ்சிய பொறுப்பதிகாரி - கட்டடங்கள் திணைக்களம்)
திதி: தசமி (29.07.2020)

மூன்று வருடங்கள் ஓடி மறைந்தாலும் நாமிருக்கும் வரை உங்களுக்காக இறைவனை அனுதினமும் பிரார்த்திக்கும்

விடத்தல்பளை, மிருசுவில்.
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## கொரோனாவுக்கு...

சம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெற வுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் எமது வாக்குரிமையைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நீங்கள் உங்களுக்கு சேவை செய்யக்கூடிய சரியானவர்களை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும். கொரோனா என்று பயப்படாமல் வாக்களிக்கும் வாய்ப்பை பயன்படுத்தி, எங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்றார். (ஒ.5,111)


## வேலையாள் தேவை

காகிதாதி பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையத்துக்கு சிட்டை எழுதுநர், காசாளர், விற்பனையாளர் ஆண், பெண்
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
021 222 5343


## கடற்றொழி...

லது. அவரைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த பெர்னான்டோபிள்ளை அருள்நேசன் (வயது 60) என்பவரே காணாமற் போயுள்ளார். படகு கவிழ்ந்ததாகவும் கவிழ்ந்த படகின் மீது தான் ஏறி இருந்த நிலையில் ஏனைய படகில் வந்தவர்களால் மீட்கப்பட்டதாகவும் மற்றையவரை காணவில்லை என்று, கரை சேர்ந்த மீனவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஒ.5,6,26)


## அரசியல் தலைவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
## அச்சுவேலி இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்தில்

**காலம்:- 31.07.2020 வெள்ளிக்கிழமை, நேரம் மாலை 5.00 மணி**

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதிக்கு முன்னரும் அதற்கு பின்னரும் தமிழர். சிங்களவர். முஸ்லீம்கள் ஆகிய மூவின மக்களும் நல்லுறவுடன். இன ஐக்கியத்துடன் வாழ்ந்தனர். அந்தக் காலப்பகுதியில் திரு. சேர் பொன் இராமநாதன் மற்றும் தமிழ்த் தலைவர்களுக்கு சிங்களத் தலைவர்கள் மற்றும் மக்கள் வழங்கிய அளப்பெரும் கௌரவத்தை இலங்கை மக்கள் மட்டும் அல்ல சர்வதேசமே நன்கறியும்

தந்தை செல்வநாயகம் மற்றும் அண்ணன் வே. பிரபாகரன் போன்ற தமிழ்த் தலைவர்களும் இலங்கை மக்களின் நல்லு றவுக்கும். இன ஐக்கியத்திற்கும்ஏற்புடைய வகையில் உழைத்தார்கள்.

இலங்கை மக்களின் வாழ்க்கையில் மற்றும் வரலாற்றில் 1958 ஆம் ஆண்டு. 1977 ஆம் ஆண்டு. 1983ஆம் ஆண்டு நடந்த சம்பவங்கள். நிகழ்வுகள் கரம்புல்லிகளே இந்தச் சம்பவங்களை மீள வலியுறுத்திக்கொண்டு வாழ நினைப்பது சுயலாப அரசியலே மூன்று இனங்களும். சமயங்களும். சமத்துவமான நிலையில் ஒன்றுக் கொன்று குறைவுபட்டதல்ல என்ற நிலைப்பாடு ஏற்படவேண்டும். மக்கள் மீண்டும் நல்லுறவுடன் வாழ முற்பட வேண்டும். இதற்கு அரசியல் தலைவர்கள் வகை செய்யவேண்டும். தமது அரசியல் அனுபவ முதிர்ச்சியை பயன்படுத்தவேண்டும். ஒரு தாய். பிள்ளைகள் போன்று வாழ முற்படவேண்டும்.

அரசியல் தலைவர்கள். பொதுத்தேர்தல் 2020 தொடர்பான கருத்துக் களத்தில் தமது வேலைத்திட்டங்களை முன்வைத்து மக்களுக்கு தெளிவுபடுத்தலாம். மட்டுப்படுத்தப்பட்ட அளவு நேரம் வழங்கப்படும். மேற்படி நிகழ்வு **VIDIO KALAMINI LIVE YOUTUBE CHANNEL** மூலம் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

மேற்படி கருத்துக் களத்தை உரிய முறையில் அரசியல் தலைவர்கள் பயன்படுத்தி தமது வேலைத்திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவும்.

பங்குகொள்ள விரும்பும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் 30.07.2020 வியாழக்கிழமை பிற்பகல் 2 .00- 6.00 மணிக்குள் தமது வரவுகளை நேரில் பதிவு செய்து கொள்ளவும்.

"நாளை நமதே
வீடியோ கலாமினி, இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம், அச்சுவேலி.


## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி
## கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான A9 வீதி கனகராயன்குளத்தில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் உள்ள மூன்று கடைகளினை கீ மணி அடிப்படையில் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இ | குத்தகை விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கனகராயன்குளம் கடைத்தொகுதி இல A | 2,000.00 | 10,000.00 | 1,500,000.00 |
| 2. | கனகராயன்குளம் கடைத்தொகுதி இல B | 2,000.00 | 10,000.00 | 1,500,000.00 |
| 3. | கனகராயன்குளம் கடைத்தொகுதி இல C | 2,000.00 | 10,000.00 | 1,500,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 2020.07.29 - 2020.08.12 நண்பகல் 12.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 2020.08.12 நண்பகல் 01.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் : 2020.08.12 நண்பகல் 01.00 மணி

**கேள்வி நிபந்தனைகள்**

01. வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். நிரந்தர வதிவிடமானது கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சமரிப்பிக்கப்படல் வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
03. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தவறுனராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை 2020.08.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
06. ஒரு கடைக்கான மாத வாடகை ரூபா 6,500.00 என்ற அடிப்படையில் மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும். எனினும் காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும் வாடகையினை செலுத்தல் வேண்டும்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக் கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது தொலைபேசி (024-3248346) மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**தவிசாளர்**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி**

(in.13321) (13.17)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி

தொழில்நுட்பப் பிரிவு A/L
* பொறியியல் தொழில்நுட்பம்
* உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
2020
DAY CLASS
சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
ஆரம்பம்:- 01.08.2020
077 017 5346

உலகத்தரமான உணவகம் ஒன்றைப் பொறுப்பேற்க நீங்கள் தயாரா?




சர்வதேச புகழ்பெற்ற அறக்கட்டளை ஒன்றினால் யாழ்நகரின் பிரதான மையப் பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உணவகத்தை பொறுப்பேற்று நடத்துவதற்காக நிறுவனம் அல்லது தனியார் தரப்பினரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.
முன் அனுபவம் கொண்ட சர்வதேச தராதரத்தை நிலைநாட்டக்கூடிய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிக தகவல்கள் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடம் பகிரப்படும்.

தொடர்புக்கு:076 130 4028

## சர்வதேச...

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் தலைவரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டத்துக்கு 69 லட்சம் வாக்குகளை வழங்கி மக்கள் பேராதரவை வெளிப்படுத்தினர். மக்கள் அனுமதி வழங்கிய வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பலமானதொரு நாடாளுமன்றம் செயற்படவேண்டும். ஜனாதிபதிக்கு எதிரான கட்சியொன்று நாடாளுமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் முன்நோக்கி பயணிக்க முடியாத நிலை ஏற்படும்.

ஜனாதிபதி சொல்வதை நாடாளுமன்றமும், நாடாளுமன்றம் கூறுவதை ஜனாதிபதியும் செய்யாவிட்டால் நிறைவேற்று அதிகாரத்துக்கும், சட்டவாக்க சபைக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படும். கடந்த ஆட்சியின்போது இந்த நிலைமையை காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை, எமது நாட்டு பிரச்சினைகளை நாமே தீர்ப்போம். அவற்றை சர்வதேச மயப்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அதேபோல் உள்நாட்டு பிரச்சினையை சர்வதேசத்திடம் முன்வைத்து, தீர்வை பெறுவதற்கும் தயாரில்லை.

கடந்த அரசாங்கமானது இராணுவத்தை சிறையில் அடைத்து, என்.ஜி.ஓ. காரர்களை பாதுகாத்தது. அவர்களுக்கு சர்வதேசத்திடமும் சம்பளம் கிடைத்தது. புலனாய்வுத்துறை பலவீனப்படுத்தப்பட்டது. இதனால் ஈஸ்டர் தாக்குதல் நடந்தது. பாதாள குழுவினர் தலைதூக்கினர். இவற்றுக்கு நாம் முடிவுகட்டுவோம்- என்றார். (எ-44)

## விபத்தில்...

காவு வண்டிமூலம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார்.

விபத்தால் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் குடை சாய்ந்துள்ளதுடன் அதன் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளாகினார். சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ,5,110)

## கோத்தாவை...

கோத்தாபயவை நேரடியாக எதிர்த்து, அவரைத் தோற்கடிக்க தமிழ் மக்களை அணி திரட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

மூளாயில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. கோத்தாபய ராஜபக்சவும் அவரை எதிர்த்து சஜித் பிரேமதாசவும் களமிறங்கியிருந்தனர். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் எத்தகைய நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தது. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஓரணியில் வாக்களித்து சுமார் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வடக்கில் கோத்தாபயவை தோற்கடித்தனர்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு 10 ஆண்டுகள் காத்திருந்து ஜனநாயகப் பதிலடியை, நெத்தியடியாகக் கொடுத்தனர்.

கோத்தாபயவை எதிர்க்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத்துணிவாக எடுத்தது. அதை நடைமுறைப்படுத்த முழு வீச்சில் முயற்சி செய்தது.

ஆனால் விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனாதிபதித் தேர்தலின் போது என்ன செய்தார்கள்? மக்களே 8 மாதங்களுக்கு முன்னர் நடந்ததை மறந்து விட்டீர்களா? இவர்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களை வழிகாட்டுவதற்குப் பதிலாக, கோத்தாவை நேருக்கு நேர் எதிர்ப்பதற்கு துணிவில்லாமல் ஓடி ஒளிந்ததை மறந்து விட்டீர்களா?

தேர்தலில் ஒருவரை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் வழமை. இல்லை தேர்தலை புறக்கணிக்கலாம். தேர்தல் புறக்கணிப்புக் கூட ஒரு தரப்புக்கு மறைமுக ஆதரவை வழங்கும் நிலைமை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காணப்பட்டது. இதைத் தெரிந்து கொண்டும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கமாக அறிவித்தது. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது தமக்குத் தாமே மண் அள்ளி தலையில் கொட்டிக்கொள்வதற்குச் சமனானது.

மறுபுறம் விக்னேஸ்வரனோ, மக்கள் விரும்பியவாறு வாக்களிக்கலாம் என்று ஓடும் நீரில் நழுவும் மீன் போல, கோத்தாவை எதிர்ப்பதிலிருந்து நழுவிக் கொண்டார். ஒரு தலைவன் என்பவன், மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கூட மஹிந்த ராஜபக்சவுக்கு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 76 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவுக்கு 23 ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. அந்தளவு தூரம் தமிழ் மக்கள் கோத்தாபயவை நிராகரிக்க வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார்கள். தமிழ் மக்களின் மனநிலையை அறியாது, அவர்களைப் பாழ் கிணற்றிலே தள்ளிவிட நினைத்த விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமுமா உங்கள் தெரிவு?

ராஜபக்சக்களின் ஆட்சி தென்னிலங்கையில் வருமாக இருந்தால் அவர்களை எதிர்க்கத் திராணியுள்ள ஒரேயொரு சக்தி இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம்தான். கோத்தாவை எதிர்க்க முடியாது புறமுதுகு காட்டி ஓடிய விக்னேஸ்வரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ உங்கள் தெரிவாக இருந்தால், ராஜபக்சக்கள் தமிழர்களின் முதுகில் ஏறிச் சவாரிதான் செல்வார்கள்.

தென்னிலங்கையில் விஸ்வரூபம் எடுத்து வரும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்து, தமிழரைப் பாதுகாக்க கூட்டமைப்பால் மாத்திரமே முடியும்.

எங்கள் வீரமிகு போராளிகளையும், மக்களையும் பல்லாயிரக்கணக்கில் துடிக்கத் துடிக்கக் கொன்று குவித்த கோத்தாபயவை எதிர்க்கத் துணிவின்றி ஓடி ஒளித்துக்கொண்ட கோழைகளின் கூட்டத்திடம், நீங்கள் கேட்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவை எதிர்க்க பயந்த நீங்கள், தமிழருக்காய் நாளை துணிந்து குரல் கொடுப்பீர்கள் என்று எப்படி நம்புவது?, ராஜபக்சக்களின் கொட்டத்தை அடக்குவதற்கு, கோத்தாவை மறுபடியும் தோற்கடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை தாருங்கள், என்றுள்ளது.

(ஒ.5)

பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்போம்

**மதிப்புக்குரிய வாக்காளர்களே!**

வடமாகாணத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனிலும் மேம்பாட்டிலும் அக்கறையுடன் செயற்படும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (Centre for Children Development -CFCD) என்னும் அரசசார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனமாகிய நாங்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 16வது பாராளுமன்றத்திற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள உங்கள் கவனத்திற்கு பின்வரும் விடயங்களை பணிவன்புடன் கொண்டுவருவதன் மூலம் உங்கள் சனநாயக கடமையினையும் உரிமையினையும் நினைவூட்ட விரும்பு கின்றோம்.

- இலங்கையின் சனத்தொகையில் பெண்கள் 51.58 வீதமாக 2019ஆம் ஆண்டு கணிப்பீடுகளின் படி உள்ளனர்.
- கடந்த காலங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஆகக்கூடியது 5.7வீதமாகவே இலங்கையின் பாராளுமன்றங்களில் காணப்பட்டது.
- இத்தகைய நிலைமை பெண்கள் குழந்தைகளின் நலன்கள் உரிமைகள் தொடர்பான விடயங்களில் பாராளுமன்றத்தின் அக்கறையிறையினை ஈர்ப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை.
- வடபகுதியில் குறிப்பாக யுத்தத்தின் நேரடியான தாக்கத்தையும் சுமையினையும் அனுபவித்தவர்கள் தாய்மாரும் மனைவிமாரும் சகோதரிமாரும் ஆக இருந்த பெண்களே.
- இன்றைய சூழ்நிலையில் வறுமை, போதைப்பொருள் பாவனை, அதிகரித்து செல்லும் குடும்ப வன்முறைகள், பாலியல் சுரண்டல்கள், மற்றும் கூலிச்சுரண்டல்களின் நேரடியான பாதிப்புகள் குடும்பத்தின் தலைவிகளாகவும் வீட்டுப் பொறுப்பினைச் சுமக்கும் தாய்மாராகவும் இருக்கும் பெண்களையே இலக்குவைத்துள்ளது.

இந் நிலைமையினை மாற்றுவதற்கு பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், சிறப்பு தேவையுடையவர்கள் ஆகியோரை தங்கள் அன்பாலும் அரவணைப்பாலும் தாங்கும் பெண்களின் சார்பான குரலினை எதிர்வரும் 16வது பாராளுமன்றத்தில் உரத்து ஒலிக் கவைக்கவேண்டியது சனத்தொகையில் 50% க்கு மேலதிகமாக உள்ள பெண்களும், பெண்களின் சமத்துவத்தையும், அவர்களது முன்னேற்றத்தை வீட்டிலும் நாட்டிலும் மதிக் கின்ற ஆண்களுமாகிய உங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

சனநாயக நாட்டில் ஆட்சிக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பொறுப்பு ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு

நாட்டின் ஆட்சியாளர்களை தெரிவுசெய்வதில் ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள உரிமைக்கு சமமான உரிமை ஒவ்வொரு குடிமகளுக்கும் உண்டு.

அது உங்களது உரிமை மட்டுமல்லாது கடமையும் கூட.

**ஆற்றல்மிகு வாக்காளர்களே!**

இம்முறை பாராளுமன்றத்தேர்தலில் பல கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. எந்தக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும் என முடிவுசெய்து தேர்தலன்று அக்கட்சிக்கு வாக்களிப்பது உங்கள் உரிமை மட்டுமல்ல சுதந்திரமும் கூட.

**நாங்கள் வேண்டிக்கொள்வதெல்லாம்.........**

நீங்கள் விரும்பும் கட்சிக்கோ அல்லது சுயேட்சைக்குழுவிற்கோ வாக்களிக்கும் அதேவேளை அக்கட்சியில் போட்டியிடும் பெண்வேட்பாளருக்கு உங்கள் விருப்பு வாக்கு ஒன்றை அளித்து எதிர்வரும் பாராளுமன்றத்தில் பெண்பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க பங்களிப்பு செய்வதோடு பெண்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பெண்கள் சார்பான சட்ட ஏற்பாடுகளுக்கு குரல் கொடுக்க முடியும்.

**உங்களின் வாக்கு பெண்களின் வெற்றிக்கு வழிவகுக்கட்டும்!**

பெண்களின் வாழ்வுரிமையும் பாதுகாப்பான வாழ்க்கைச்சூழலும் பெண்களால்தான் கட்டியெழுப்பப்பட முடியும்.

எங்கள் தெரிவில் பெண் வேட்பாளர்களில் ஒருவருக்காவது முன்னுரிமை அளிப்போம்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்

# மன்னார் மாவட்டத்துக்கான தேர்தல் பணிகள் நிறைவு

## மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 29

நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளதாக மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.

மன்னார்மாவட்ட தேர்தல்அலுவலகத்தில்நேற்றுக்காலைநடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் நிலையமாக புனிதசவேரியார்ஆண்கள் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னாரைபொறுத்தவரையில்88ஆயிரத்து842 வாக்காளர்களும் இதிலே 5 ஆயிரத்து 807 வாக்காளர்கள்புத்தளம்மாவட்டத்திலேதங்களுடைய வாக்குகளை பதிவு செய்யவுள்ளனர். அவர்களுக் கானவசதிகள்புத்தளம்மாவட்டத்திலேமேற்கொள்ளப் பட்டுள்ளன.

மேலும் 405 வேட்பாளர்கள் போட்டியிடும் இந்த தேர்தலிலே6நாடாளுமன்றஉறுப்பினர்கள்தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மன்னார்மாவட்டதைப்பொறுத்தவரையில்இதுவரை 45தேர்தல்முறைப்பாடுகள்கிடைக்கபெற்றுள்ளன. இந்த 45 முறைபாடுகளின் அடிப்படையிலே இதுவரை22பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.அதே போல் 6 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதில் கூடுதலான முறைப்பாடுகள் சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் வேட்பாளர்கள் இல்லாத வாகனங்களில் ஸ்ரிக்கர் ஒட்டுதல் போன்ற செயற்படுகளில் பலர் கைது செய்யப்பட்டதுடன் வாகனங்களும்கைப்பற்றப்பட்டன. என்றார். (ஐ56)

# வலையில் சிக்கிய சன்னக் கோர்வை

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலி கடலில் தொழிலில் ஈடுபட்டமீனவரின்வலையில் ஏ.ஜி.எல். வர்க்கத்தைச் சேர்ந்த 16 துப்பாக்கிச் சன்னங்கள் அகப்பட்டுள்ளன.

மீனவர் உடனடியாக பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவற்றை மீட்டு கிளிநொச்சிநீதிவான்நீதிமன்றில் செயலிழப்புச் செய்வதற்கான அனுமதியைப் பெற்று சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறில் தனியார் காணிக்குள் குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு நீதிமன்றில் அனுமதிபெற்றுசெயலிழப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ,5,6)

## மரண அறிவித்தல்



| ஜனனம் | அஸ்தமனம் |
|---|---|
| 26 . 12 . 1962 | 27 . 07 . 2020 |

### திருமதி யோகரஞ்சி வர்ணராசா

(ஆசிரியை – இந்து மத்திய கல்லூரி, புத்தளம்)

கச்சாய் வீதி. கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும். தில்லையடி புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகரஞ்சி வர்ணராசா கடந்த (27.07.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அன்னரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும். வேலுப்பிள்ளை தியாகராசா பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும் வர்ணராசாவின் அன்பு மனைவியும் திலோஜா (வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம். வவுனியா). டிவசங்கர் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்றவர்களான யோகலிங்கம். யோக மூர்த்தி. யோகரதி மற்றும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்). யோகாம்பிகை. யோகானந்தன். . யோக மனோகரி (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வர்ணநேசன் மற்றும். வர்ணமோகன் (சுவிஸ்). வர்ணகாந்தன் (கனடா). வர்ணசந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கச்சாய் வீதி. கொடிகாமத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (29.07.2020) புதன்கிழமை நடைபெற்று பி.ப.2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கச்சாய் பாலாவித்தாழ்வு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"யோகவாசா"
கச்சாய் வீதி, கொடிகாமம்.

தகவல்:- குடும்பத்தினர்.
077 087 5482

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 . 02 . 1936 | 28 . 07 . 2020 |

### வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட்

(L.A.M.P, R.I.M.P வைத்தியசாரி, வைத்தியபூபதி, கலாஜோதி, கலைகுரிசில்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி. 63 குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் அவர்கள் நேற்று (28-07-2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்- மரியபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும். எட்வேட் மேரிதிரேஸ்ராணி அவர்களின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான அருளானந்தம் அமலோற்பவம். வைத்திய கலாநிதி கபிரியேல் ஜோர்ச் மற்றும் பாவிலுப்பிள்ளை லில்லிறோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும். எடின்ரன் யூலியானஸ். எட்வின் யூட் (பிரான்ஸ்). எட்றின் ரொணி யோசேப்வாஸ் (கனடா). வைத்திய கலாநிதி எட்னா மரிய விண்ணேற்றொணி (ஆயுள்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர். நல்லூர்). எட்மன் சேவியர் ஜங்ரன் (ஆளுநர் செயலகம். வடமாகாணம்) றெனா வேர்ஜினேற் (B.A). காலஞ்சென்ற செபஸ்ரியன் ரொணி ஆகியோரின் அன்புத் தந்தையும். யஸ்ரின் யூட் (சிரேஷ்ட விரிவுரையாளர். திறந்த பல்கலைக்கழகம்). பெர்னான்டோ (உரிமையாளர் - சுன்னாகம் வரப்பிரகாசம் றெக்ஸ்ரைல்). பொலின்மேரி. லெற்றீஷியா (B.A). குயின் அலன்ரீனா. பேர்னடின் ஆகியோரின் அன்பு மாமனாரும். ஆதர் ஜேசுதாசன். றெஜினா சிவகுமார். அலக்கோக் ஜெயபாலன். காலம் சென்ற போல் பெஞ்ஜமின் ஆகியோரின் அன்பு மைத்துனரும். றொஜியா. றொசாறியா. றோஸ்அரசி. றொக்சியா. மகாராணி. றிபன்ஜியா. மரியோ எட்வேட். சிசில்ராணி. ஜொறிஸ் எட்வேட். கிறேஸ்ராணி. எட்றீனா. கத்திரியான. மடுரென்ஸ் போல். மக்னஸ் போல். மக்ஸ்வெல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை (30-07-2020) காலை 8.45 மணிக்கு நடைபெறும் யாழ் திருமறைக் கலாமன்றத்தினரின் இறுதி அஞ்சலி நிகழ்வினைத் தொடர்ந்து. காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியினைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:- 077 226 8641/ 077 242 3880,
0016 47403 5255 (கனடா), 0033 75324 6259 (பிரான்ஸ்)

# கொலையாளிகளுக்கு...

அடைக்கப்பட்ட கமல் என்று அழைக்கப் படும் கந்தசாமி கமலேந்திரனை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது மெய்ப் பாதுகாவலர் போன்று எங்கும் அழைத்துச் செல்கின்றார். இது பாதிக்கப் பட்ட மக்களின் உணர்வுகளை ஏறி மிதித்து அரசியல் செய்வதைப் போன்றே உள்ளது.

இவ்வாறு நெடுந்தீவுப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளராக இருந்து சுட்டுக் கொல்லப்பட்ட றெக்சியனின் சகோதரி றெஜினா 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

எனது சகோதரர் ஈ.பி.டி.பியுடன் இணைந்து முற்று முழுதாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர். கட்சிக்காக தன்னையே அர்ப்பணித்த எனது சகோதரை நயவஞ்சமாக கொலை செய்தார்கள். இந்தக் கொலையை ஈ.பி.டி.பியின் அப்போதைய யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக இருந்த கந்தசாமி கமலேந்திரனே செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு கைதும் செய்யப்பட்டிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கமல் கைதாகியதும், அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார் என்று அறிவித்தார். அவருக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறினார். அதுமட்டுமன்றி தனது கட்சியில் சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களுக்கு இடமில்லை என்றும் இடமளிக்க மாட்டோம் என்றும் டக்ளஸ் கூறினார்.

ஆனால் சிறையிலிருந்து பிணையில் வெளியில் வந்துள்ள கமலுக்கு, டக்ளஸ் தேவானந்தா அடைக்கலம் கொடுத்துள்ளார்.

ஆனால் பாதிக்கப்பட்டுள்ள எனது குடும்பத்துக்கு டக்ளஸ் எந்த உதவிகளையும் செய்யவில்லை. டக்ளஸின் ஆதரவில் சுதந்திரமாக நடமாடும் கமலேந்திரன் எங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கின்றார். உதவிகள் செய்ய எங்களுக்கு யாருமேயில்லை. என்றார்.

## மரண அறிவித்தல்

### செல்வவிநாயகம் சுந்தரமூர்த்தி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.04.1943 | 28.07.2020 |

ஆவரங்கால் சந்தை வீதியை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட செல்வவிநாயகம் சுந்தரமூர்த்தி நேற்று (28.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்வவிநாயம் - தங்கமுத்து தம்பதிகளின் ஏக புதல்வனும். அச்செழுவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற பாக்யதேவியின் அன்புக் கணவரும். டட்ஷாயினியின் அன்புத் தகப்பனாரும் தபேசனின் அன்பு மாமனாரும். பவிஷிகனின் அன்புப் பேரனும். திருமதி அகிலாண்டநாயகி சிவகுமார். திருமதி அருள்நாயகி ஜெயசிங்கம், திருமதி சாந்தநாயகி சபாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 639 5747

தகவல்: குடும்பத்தினர்.

## தப்ப...

கவே முடியாது.

இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹன்ஸ்பீட்டர் மொக் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

திருகோணமலைக்கு நேற்றுச் சென்ற இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகள் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இதன்போதே சுவிஸ் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், அடிப்படை மனித உரிமைகள் குறித்தும் சம்பந்தனுடன் சுவிஸ் தூதுவர் கலந்துரையாடினார்.

விசேடமாக எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாகவும், தேர்தலின் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறினார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானங்கள் மற்றும் அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பிலும், புதிய அரசமைப்பு குறித்தும் இருவரும் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக இலங்கைக்கான சுவிஸ் தூதுவர், அவரது அரசியல் செயலாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடினேன். முக்கியமாக மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகவும், பொதுத்தேர்தலுக்குப் பின்னர் நிலைமை எவ்வாறாக அமையும் என்பது பற்றியும் சுவிஸ் தூதுவர் தனது கணிப்பை என்னிடம் கூறினார்.

தேர்தலுக்குப் பின்னர் பல கடமைகளை நிறைவேற்ற வேண்டிவரும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அரசியல் ரீதியாக எடுக்கப்படவேண்டிய முடிவுகள், புதிய அரசமைப்பு உட்பட பல விடயங்கள் புதிய நாடாளுமன்றம் கூடிய பின்னர் முன்னெடுக்கப்படும் என நான் அவரிடம் தெரிவித்தேன்.

இந்த விடயங்கள் இலகுவாக இருக்காது. மாறாக கடினமாக இருக்கும். இருந்தபோதும் ஓர் அரசு, ஒரு நாடு சர்வதேசத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறி அல்லது சர்வதேச சட்டத்தை மீறி, அவர்களால் சர்வதேசத்துக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை மீறி தொடர்ந்தும் செயற்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல. இலங்கை அரசு நீண்டகாலமாகத் தனது ஒப்பந்தங்களை, வாக்குறுதிகளை மீறிச் செயற்பட்டு வந்திருக்கின்றது. அதற்கு முடிவு வரவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், நாங்கள் எவரையும் பகைக்க விரும்பவில்லை. அதேநேரம் எமது மக்களது அடிப்படை உரிமைகளில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை. எமது மக்கள் சார்பாக மேற்கொள்ளவேண்டிய கடமைகளை மேற்கொள்வோம். அதேபோன்று எடுக்க வேண்டிய முடிவுகளை எடுக்கவேண்டிய நேரத்தில் எடுப்போம் என்று சுவிஸ் தூதுவரிடம் நான் தெரிவித்தேன்.

அதற்குப் பதிலளித்த அவர், 'இலங்கை அரசு, சர்வதேசத்துக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அதனை நிறைவேற்றவே வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து இலங்கை அரசு விலகவே முடியாது' என்று கூறினார். சந்திப்பு திருப்திகரமாக இருந்தது. நான் சொல்ல வேண்டிய விடயங்களை அனைத்தையும் அவரிடம் சொல்லிவிட்டேன்-என்றார். (எ-22)

## யாழ்...

மூர்த்தி மற்றும் பொது மருத்துவ நிபுணர் இ.கஜந்தன் ஆகியோர் தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்று என்று அறிவிப்பதற்கு அவரது மாதிரியில் 40 சதவீதத்துக்கு மேல் குறிப்பிட்ட வைரஸ் காணப்படவேண்டும் என்ற நிலையில், மேற்படி நபருக்கு 38 சதவீதத்துக்கும் குறைவான அளவு வைரஸே இனங்காணப்பட்டுள்ளது.

சவூதியில் தங்கியிருந்த காலத்தில் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு அதற்கு சிகிச்சை பெற்றுள்ளார். இதன்போது அவருக்கு அங்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. கொரோனாத் தொற்றில்லை என்று பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றது.

இது தொடர்பில் மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 11ஆம் திகதி இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட 208 பயணிகளுடன் அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார். அங்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. தொற்று இல்லை என்றே பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

விடத்தற்பளை தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட சோதனையிலும் கொரோனாத் தொற்று இல்லை என்றே பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றது.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் அவருக்கு சுவாசப் பிரச்சினை நோய் ஏற்பட்டது. உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 21ஆம் திகதி சேர்க்கப்பட்டார். கொரோனா விடுதியில் வைத்து அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதன்போது மீண்டும் கொரோனாத் தொற்றுக்கான சோதனை மேற்கொள்ளப்பட்டது. தொற்று இல்லை என்றே பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றது. இதனையடுத்து அவர் சாதாரண விடுதியான 7 இற்கு 22ஆம் திகதி மாலை மாற்றப்பட்டார். அங்கு தனிமைப்படுத்தல் அறையில் வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து சிகிச்சை பெற வருபவர்களை தனிமைப்படுத்தல் அறையில் வைத்தே சிகிச்சை வழங்குவது வழமை. இதன்போது அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், தாதியர்கள் உள்ளிட்ட எல்லோரும் சமூக இடைவெளியைப் பேணியவாறும், முகக்கவசம், கையுறை என்பவற்றை அணிந்தவாறுமே சிகிச்சையளித்தனர்.

25 ஆம் திகதி காலை மீண்டும் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு மீண்டும் அவருக்கு சுவாசப்பிரச்சினை காணப்படுவதாக கூறி அங்கு செய்யப்பட்ட பரிசோதனை மாதிரிகளை யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நேற்றுமுன்தினம் மாலை பெறப்பட்ட முடிவின்படி அவருக்கு கொரோனாத் தொற்று குறைவான நிலையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இவர் சிகிச்சை பெற்ற காலப்பகுதியில் பணிபுரிந்த 4 மருத்துவப் பணியாளர்களை அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தியுள்ளோம். இவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை 31ஆம் திகதி மேற்கொள்ளப்படும்.

விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்தபோது தனிமைப்படுத்தல் மையமொன்றில் இருந்து வந்த நோயாளி என்பதால் அதற்கேற்ப சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மருத்துவமனையின் ஏனைய பணியாளர்களுக்கோ ஏனையவர்களுக்கோ தொற்றுக்கான வாய்ப்பு இல்லை. வழமைபோன்று மருத்துவமனைப் பணிகள் தொடரும், என்றனர். (ஒ,5)

## வன்னி...

தில் கருத்துக்களைக் கூறுகின்றார். மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலேயே அவரது நடவடிக்கை இருக்கின்றது.

இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

1977 ஆம் ஆண்டு வன்னியில் மலையக மக்கள் குடியேறியமை முதல் தற்போதுவரை பல்வேறு துயரங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். கொழும்பில் சொகுசாகத் தங்கி இருந்த பிரபா கணேசன் இப்போது பதவிக்காகவும், அரசியல் இலாபத்துக்காகவும் இங்கு வந்து போலி வார்த்தைகளைப் பேசுகின்றார்.

கொழும்பிலே போட்டியிட்டு வெல்லமுடியாது என்பதை நன்கு தெரிந்துகொண்ட அவர் இங்கு வந்து இந்தப் பகுதி மக்களின் வறுமையைப் பயன்படுத்தி, தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். எதிர்வரும் 5 ஆம் திகதிக்குபின்னர் அவர் இந்தப் பகுதியில் இருக்கப்போவதில்லை என்பது மக்களுக்குத் தெரியும்.

போர் உட்பட பல்வேறு பாதிப்புகளால் வன்னி மக்கள் துயரங்களையும், துன்பங்களையும் சந்தித்திருந்த போது பிரபா கணேசன் எங்கு போயிருந்தார்? மக்களோடு தோளோடு தோளாக நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதற்கு அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை.

தற்போதைய கொலைகார அரசுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள அவர் அரச ஆதரவுடன் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவே இங்கு களமிறக்கப்பட்டுள்ளார். தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அனைத்தையும் நிறைவேற்றித் தருவேன் என்று கூறும் அவர், இதுவரை வன்னி மக்களுக்காக என்ன செய்தார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (எ-110)






## கூட்டமைப்பின்...

யக் கூட்டமைப்பின் நோக்கமல்ல. தமிழீழ விடுதலைப்புலிகள் விரும்பிய தனிநாடு பெறுவதே கூட்டமைப்பின் இலக்கு.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தனிநாட்டையே கோரி நிற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் வளமான எதிர்காலத்துக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரவணைத்துப் பயணிக்கவே அரசு விரும்புகின்றது. ஆனால், கூட்டமைப்பினர் இன்னமும் புலிகளின் சித்தாந்தத்திலேயே மூழ்கி இருக்கின்றனர். ஆயுதத்தால் புலிகள் அடைய முடியாததை நாடாளுமன்ற ஆசனத்தின் மூலம் கூட்டமைப்பினர் எவ்வாறு பெறப்போகின்றனர்? இது ஒருபோதும் இயலாத காரியம். இதற்கு ஒருபோதும் நாம் அனுமதிக்கவும் மாட்டோம். எனவே, புலிகளின் கோரிக்கைகளைக் கைவிட்டுவிட்டு அரசுடன் இணைந்து பயணிக்கக் கூட்டமைப்பினர் முன்வர வேண்டும்-என்றார். (எ-22)

## பேனைப்...

யில், கட்சி சின்னம் மற்றும் வேட்பாளரின் விருப்பு இலக்கம் என்பவற்றை பேனையில் அச்சிட்டு அதனை விநியோகித்தமை தொடர்பில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கந்தையா அருந்தவபாலன் மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோரின் பெயர் பொறிக்கப்பட்டு அவர்கள் போட்டியிடும் கட்சியின் சின்னம் பொறிக்கப்பட்டு, அவர்களது விருப்பு இலக்கம் பொறிக்கப்பட்ட பேனைகளே வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கறுப்பு மற்றும் நீல நிறப் பேனைகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கொரோனா பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக வாக்காளர்களே வாக்களிப்பதற்கு கறுப்பு மற்றும் நீல பேனைகளைக் கொண்டு வரவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில், வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் பேனைகள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ,5)

## நெடுங்குளம்...

அண்மை நாள்களில் அவரை பார்வையிட யாரும் சென்றிருக்கவில்லை. இதனால் பிரதேசவாசிகள் யாரும் அச்சமடைய தேவையில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# வெற்றியை பறித்தது மழை இங்கிலாந்துக்கு ஏமாற்றம்!

லண்டன், ஜூலை 29

**இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மான்செஸ்டர் டெஸ்டின் 4 ஆவது நாள் ஆட்டம் முழுவதும் மழையால் தடைப்பட்டது.**

இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் மான்செஸ்டர் எமிரேட்ஸ் ஓல்ட்டு டிராஃபோர்டில் நடைபெற்று வருகிறது.



முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 369 ஓட்டங்கள் குவித்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து அணி சார்பில் ஸ்டூவர்ட் பிராட் 6 இலக்குகள் அள்ளினார்.

பின்னர் 172 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் இங்கிலாந்து 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களான ரோரி பேர்ன்ஸ், டொமினிக் சிப்லி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சிப்லி 56 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து கப்டன் ஜோ ரூட் களம் இறங்கினார். இவர் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ரோரி பேர்ன்ஸ் 90 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 2 இலக்கு இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 2 ஆவது இன்னிங்சை ஆட்டமிழக்கச் செய்தது. ஜோ ரூட் 56 பந்தில் 68 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுடன் மொத்தமாக இங்கிலாந்து 398 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 399 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.

399 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் நேற்றைய 3 ஆவது நாள் ஆட்ட 10 ஓட்டங்கள் அடிப்பதற்குள் இரண்டு விக்கெட்டுகளை இழந்தது. ஷாய் ஹோப் 4 ஓட்டங்களுடனும், கிரேக் பிராத்வைட் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இன்று 4 ஆவது நாள் ஆட்டம் நடைபெற இருந்தது. இன்றைக்குள் 8 இலக்குகளையும் வீழ்த்தி டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று தொடரை 21 எனக் கைப்பற்றி விடலாம் என்று இங்கிலாந்து எண்ணியிருந்தது.

ஆனால் இன்று காலையில் இருந்தே மழை பெய்தது. இதனால் போட்டியை தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லாமல் போனது. இதனால் நடுவர்கள் 4 ஆவது நாள் ஆட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவித்தனர். (ரி-2)

## யு.எஸ். ஓப்பின் தொடரில் பங்கேற்பதற்குத் தயக்கம்

லண்டன், ஜூலை 29

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த யு.எஸ். ஓப்பின் ரென்னிஸ் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆனால் அந்தத் தொடரில் பங்கேற்பதற்கு முன்னணி வீரர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் போட்டிகள் ரசிகர்கள் இல்லாது மூடிய அரங்கில் நடைபெறும் என்றும், ரென்னிஸ் வீரர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தொடரின் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.



இது தொடர்பாக நட்சத்திர ரென்னிஸ் வீரர் அன்ரி மூரே தெரிவித்துள்ளதாவது: நாலைந்து வாரங்களுக்கு முன்பு வரை யு.எஸ். ஓப்பின் தொடரில் பங்கேற்பது தொடர்பில் சந்தேகம் இருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் மனரீதியாகத் தயாராக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்குத் தேவையான வகையில் திட்டங்களையும், பயிற்சிகளையும் தொடங்க வேண்டும். சற்றுப் பயமாக இருந்தாலும், யு.எஸ். ஓப்பின் ரென்னிஸ் தொடருக்கு முன்னர் நிலைமை மாறும் என்று நினைக்கின் றேன் -என்றார். (ரி-2)

## சாம்பியன்ஸ் லீக்கில் மான்செஸ்டர், செல்சி

லண்டன், ஜூலை 29




இங்கிலீஷ் பிரிமீயர் லீக்கில் 3ஆவது மற்றும் 4ஆவது இடம் பிடித்ததை அடுத்து மான்செஸ்டர் யுனைடெட், செல்சி அணிகள் சம்பியன்ஸ் லீக்கில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

இங்கிலீஷ் பிரீமியர் லீக்கின் கடைசி லீக் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. மான்செஸ்டர் யுனைடெட், லெய்செஸ்டர் அணியை எதிர்கொண்டது. அதில் வெற்றி பெற்றால் தான் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெறலாம் என்பதால் இரண்டு அணிகளும் வெற்றிக்காக போராடின. இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் 2:0 என வெற்றி பெற்றது. ப்ரூனோ பெர்னாண்டஸ் 71ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக்கினார். இன்ஜுரிக்கான நேரத்தில் (90+8) லிங்கார்டு ஒரு கோல் அடிக்க மான்செஸ்டர் யுனைடெட் 2:0 என வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மான்செஸ்டர் யுனைடெட் 66 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்தைப் பிடித்தது.

வோல்ஸ் அணி செல்சி வோல்ஸ் அணியை எதிர்கொண்டது. அந்த ஆட்டத்தில் செல்சி 2:0 என வெற்றி பெற்றது. இதன் மூலம் 66 புள்ளிகள் பெற்று 4 ஆவது இடத்தை அந்த அணி பிடித்தது. 3ஆவது மற்றும் 4ஆவது இடங்களைப் பிடித்த மான்செஸ்டர் யுனைடெட், செல்சி அணிகள் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெற்றன.

லெய்செஸ்டர் வெற்றி பெற்றிருந்தால் 4ஆவது இடத்தைப் பிடித்து சாம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெற்றிருக்கும். லிவர்பூல் அணி 99 புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளது. மான்செஸ்டர் சிட்டி அணி 81 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்தை பிடித்தது. (ரி-2)

**Maths** C.K.B.Thayalan
முன்னாள் விக்னா கல்வி நிறுவன ஆசிரியர்
தரம்: 6 -11 வரையான வகுப்புக்களுக்கு
+ O/L Day Class மாணவர்களுக்கு
+ Personal Class (வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
+ Group Class
077 749 2794

**வீடு விற்பனைக்கு உண்டு**
ஏழாலை களபாவோடைஅம்மன் கோயிலடி யில் இருந்து 500 m தூரத்தில் வீடு விற்பனைக்கு உண்டு.
3½ பரப்புக் காணியும் வீடும் விலைபேசி தீர்மானிக்கப்படும்.
077 353 0455, 077 921 3726

## மரண அறிவித்தல்

### திருமதி அருமைநாயகம் தவமணிதேவி



யாழ். வேலணை கிழக்கு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். நல்லூர் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருமைநாயகம் தவமணிதேவி நேற்று (28.07.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அருமைநாயகத்தின் அன்பு மனைவியும், அனுஷாவின் அன்புத் தாயாரும், கஜேந்திரனின் பாசமிகு மாமியாரும், ஹரினி, அபிராமி, அஜனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவகுருநாதன், சொர்ணகாந்தி, சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் தங்கவேல், இந்திரா காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை, தியாகராஜா, அக்கம்மா, தாட்சாயினி, தவராசா, பாக்கியம், நாகநாதபிள்ளை, அம்பிகாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2020) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்

T.P: 077 900 8004, +447432357865

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.